உ

கணபதி துணை.

திருத்தணிகேசன் துணை.

---

# திருப்புகழ்ப் பதிப்பாசிரியர்

# வ. த. சுப்பிரமணிய பிள்ளை

## சரித்திரமும்

## அவரியற்றிய தனிப் பாடல்களும்

ஷையார் குமாரர்

வ. சு. செங்கல்வராய பிள்ளை எம்.,ஏ.

எழுதியது.

சென்னை

பி. ஆர். ராமையர் கம்பெனியாரால்

அச்சிடப்பெற்றது.

February 1921

[Not Registered.] [விலை அணா பன்னிரண்டு



வ. தி. சுப்பிரமணியபிள்ளை.

V. T. Subramanya Pillai.

குறிப்



கணபதி துணை.

திருத்தணிகேசன் துணை.

# சுப்பிரமணிய பிள்ளை சரித்திரம்.

## காப்பு.

எந்தை சரிதம் எழுதத் துணையாகுந்
தந்திமுகன் கந்தமலர்த் தாள்.

---

**வெ. தி.** சுப்பிரமணியபிள்ளை "சான்றோருடைத்து" என விசேடித்துச் சொல்லப்படும் தொண்டை நன்னாட்டிற் செங்கற்பட்டில் தணிகையெம்பெருமானுக்கு வழிவழி யடிமையாகிய ஒரு நல்ல குலத்தில் 1846-ஆம் வருஷம் டிசம்பர்மாதம் 11-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிறந்தனர். பிறந்த தினம் சாலிவாகன சகாப்தம் ௧௭௬௮௵, கலியுகாப்தம் ௪௯௪௭, பராபவ௵ கார்த்திகை௴ 28௳, சுக்கிரவாரம், உத்திர நக்ஷத்திரம், ராத்திரி நாழிகை $7\frac{5}{8}$, என ஜாதகக் குறிப்பிற் கண்டிருக்கிறது. சீர் கருணீக ஜாதி; கௌதம

பூஹருஷி கோத்திரம்; குடும்பம் மிக்க ஏழைக்குடும்பம் என்றே சொல்லல்வேண்டும். இவர் தகப்பனார் பெயர் தணிகாசலம் பிள்ளை, தாயார் பெயர் இலக்குமியம்மாள்; இலக்குமியம்மாள் தணிகாசலம் பிள்ளைக்கு இரண்டாவது தாரம்; முதல் தாரத்துக்கு ஒரே பெண். அத் தாரம் இறந்தபின் மணஞ்செய்யப்பட்ட இலக்குமியம்மாவுக்குப் பிறந்த குழந்தைகளில் இளம்பிராயத்தில் இறந்த ஒரு ஆண் குழந்தைபோக சிவகாமியம்மா எனப் பெயர் கொண்ட ஒரு பெண் குழந்தையும், சிதம்பரம், சுப்பிரமணியன் எனப் பெயர்கொண்ட இரு ஆண்குழந்தைகளும் எஞ்சி நின்றன. சிவகாமியம்மா சபாபதிபிள்ளை என்பவரை மணந்து 1875௵ அவர் காலஞ்செல்ல சித்தூர் ஜில்லா புத்தூரில் வக்கீலாயிருந்த தன் மூத்த பிள்ளை துரைசாமிபிள்ளையின் ஆதரவில் இருந்து 1902௵ சிவபதமடைந்தனர். சிதம்பரம் பிள்ளை துன்முகி௵ (1837) பிறந்தவர். அவர் பூவிருந்தவல்லி, திருவள்ளூர் என்னும் ஊர்களிற் கோர்ட்டிற் காபீஸ்ட்டாகவும், குமாஸ்தா ஆகவுமிருந்து நல்ல ஸ்திதிக்கு வந்த தனது தம்பி என்றும் உதவிய பொருள்கொண்டும் பிதிரார்ஜித பூஸ்திதியின் ஸ்வற்ப வரும்படியைக் கொண்டும் தமது வாழ்நாளைச் செலுத்தி 1898௵ காலஞ் சென்றனர். இளையபிள்ளையாகிய சுப்பிரமணியபிள்ளையின் சரித்திரமே நாம் இங்கு எழுதவந்தது.

சுப்பிரமணியபிள்ளையின் பிதாவாகிய தணிகாசலம் பிள்ளையோடு பிறந்த சகோதர சகோதரிகள் பதின்மர். இவர் தம் பிதா மாதா கற்பக பிள்ளை மீனாக்ஷியம்மா. கற்பகபிள்ளை செங்கற்பட்டுஜில்லா கோர்ட்டில் ரெகார்ட்டர் (Record-Keeper) உத்தியோகத்தில் இருந்தவர்.

தணிகைச் சுப்பிரமணிய சுவாமி திருவடிக்கு மீளாப் பத்தி பூண்டவர். அப்பெருமான் இவரிடம் பல திருவிளையாடல்கள் புரிந்ததாகச் சொல்லுவதுண்டு. இவர் முதல்முதல் பூவிருந்தவல்லி (Poonamallee)யில் இருந்தார். ஸ்ரீ கந்தபிரான் இவர் கனவிற் றோன்றித் தெற்கே சென்றால் வேலை கிடைக்கும் என்றாராம். அவ்வாறே செங்கற்பட்டுக்குவர அங்கு வேலை கிடைத்தது. ஒருமுறை கிருத்திகை தினத்தில் தனது குலதெய்வம் வீற்றிருக்கும் திருத்தணிக்குப் போகாது திருப்போரூர்போக இவர் முயன்றபோது இவரைப் புலிதொடரப் பயந்து தம் பிழையை மன்னிக்க வேண்டினவுடன் புலி மாயமாய் மறைந்ததாக ஒரு சரித்திரம் எங்கள் முன்னோர் சொல்லுவதுண்டு. பிறிதொரு முறை சூனியத்தால் இவர் உடம்பில் திடீரெனக் கொப்புளங்கள் பலதோன்றி உடலம்வீங்க, அன்று இவர் ஜெபத்திற் சூனியஞ் செய்தவனைக்காட்டி அவனைத் தனது கிங்கரர்களாற் கொல்வித்ததையுங் காட்டி நோயையும் உடனே நீக்கினதாகவும், பின்னர் ஜெபத்திற் காட்டின இடத்தைச் சென்றுபார்க்க அங்கு ஒருவன் உண்மையாகவே இறந்து கிடந்ததை யாவரும் கண்டனரெனவும் ஒரு அநுபவஞ் சொல்லுவதுண்டு. இத்தகைய பத்தி நிறைந்த புண்ணியர் பெற்ற மக்களுள் ஒருவராகிய தணிகாசலம்பிள்ளையும் தந்தையைப்போற் சிறந்த பக்தரே. இவர் சாமளவும் சிவபூஜைவிடாது செய்தவர். நினைக்க முத்தியளிக்குந் திருவண்ணாமலையை என்றும் மறவாது அருணகிரியந்தாதியைச் சதா பாராயணஞ் செய்யும் நியமத்தவர். இவர்செய்த புண்ணியமே ஒருருக்கொண்டவர் நமது சரித்திரத்தலைவரான சுப்பிரமணிய பிள்ளை.

# I. இளம் பருவம்.

## (i) **1846—1864.**

### செங்கற்பட்டு வாசம்.

*இவர் சரித்திரம் எழுதுவதற்குத் தக்க ஆதாரங்கள் இவர் தமது இளம்பிராயமுதல் எழுதிவைத்திருக்கும் " தினநிகழ்ச்சிக் குறிப்புக்களே "* (Diaries). *தேவாரத்திற் பெரும்பாகஞ் செல்லேறி மறைந்ததுபோல இவர் எழுதிவைத்த தினநிகழ்ச்சிப் புத்தகங்களில் முக்கியமான பாகங்களிற் சில செல்லேறி மறைந்தது எமக்கு மிக்க வியாகுலத்தைத் தருகின்றது. "விளையும்பயிர் முளையிலே" என்னும் ஆன்றோர் வாக்கியத்தின் உண்மை இவர் வாழ்நாட் சரிதத்தால் நன்குவிளங்கும். சகலவித நற்குணங்களும் அமைந்த சாந்தகுணசீலர் என்பதும், தணிகையெம்பெருமானிடத்துந் தண்ணிலா வேணியனுஞ் சிவபிரானிடத்துங் குன்றாத பத்திநிறைந்த உள்ளத்தவரென்பதும், சிறுவயதிலேயே நல்லாரோ டிணங்கி முன்னோர்களது நல்வழியே பற்றவேண்டும் என்னும் அவா ஒன்றையே உறுதியாகக் கைப்பிடித்துக் கரையேறினவர் என்பதும் இவர் சரித்திரத்தால் நன்கு விளங்கும். இதற்குச் சான்று இவர் தமது தினநிகழ்ச்சிப் புத்தகத்தை முதல்முதல் எழுத ஆரம்பித்தபோது எழுதியுள்ள பின்வருங் குறிப்பே :*

" A Journal of Daily occurrences in Life."

"On finding one of my late teachers Samuel Pillai keep a book of this kind and he having at my request read to me some days' occurrences in his life and convinced me fully of its utility, I became so anxious that

I could not do any thing before I sat down to imitate his wise plans. May God bless me and help me in my undertaking! V. Subramanien. 15 September 1864. Chingleput."

[தினநிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகம்: என்னுடைய பழைய உபாத்தியாயர்களுள் ஒருவராகிய சேமுவல் பிள்ளை என்பவர் இத்தகைய புத்தகம் ஒன்று வைத்திருப்பதைக்கண்டு, அப்புத்தகத்தினின்றும் அவர் வாழ்நாட்சம்பந்தப்பட்ட சில தினநிகழ்ச்சிகளை வாசிக்க அவரை நான் கேட்டதுமுதல் அவ்வத்தினத்து நிகழ்ச்சிகளை அங்ஙனம் எழுதுவதின் பலன் இன்னதென்றறிந்து நானும் அவ்வாறே ஒரு புத்தகம் வைத்துக்கொள்ளவேண்டும் என்னும் அவா மேலிட வேறுவேலை செய்யக்கூட மனம்வராது உடனே அவர்போல நானும் எழுத ஆரம்பித்தேன். யான் எடுத்த இவ்விரதம் நிறைவேறுமாறு கடவுள் அநுக்கிரகிப்பாராக! வ. சுப்பிரமணியன். 15-9-1864. செங்கற்பட்டு].

சிறுவயதில் வீட்டு உபாத்தியாயரிடம் இவர் தமிழும் தெலுங்கும் வாசித்தார். இவர் தந்தையின் நண்பரான வல்லூர் சோமசுந்தர முதலியார் என்பவருடைய உதவியால் 1857௵ நவம்பர் மாதத்திற் செங்கற்பட்டு மிஷன் ஸ்கூலிற் சேர்ந்து வாசித்தார். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பொழுதும் பின்பு பரீக்ஷைகளுக்குப் படிக்கும்பொழுதுங் கஷ்டப்பட்டுக் காலையில் நான்குமணிக்கெல்லாம் எழுந்து படித்ததாகத் தெரிகின்றது. இவர் பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருந்தபொழுது நடந்த விசேஷங்கள் ஒன்றும் அதிகமாகத் தெரியவில்லை. "பால் (Paul) என்னும் கிறிஸ்தவ ஞானியின் சரித்திரம்" என்னும் வியாசத்தை வெகு நன்றாக எழுதினதற்காக அப்போது செங்கற்பட்டில் ஜட்ஜாக இருந்த Mr. Phillips (பிலிப்ஸ்) என்பவர் 'Chamber's Encyclopoedia" (சேம்பர்ஸ் என்சைக்லோ

பீடியா), "Spectator" (ஸ்பெக்டேடர்) என்னும் புத்தகங்களை இவருக்குப் பரிசளித்ததாகத் தெரிகின்றது. தம்முடைய குடும்ப கஷ்டத்தைத் தெரிந்து சரிவரப்படித்தும் மேல்வகுப்புக்களிற் படிப்பதற்கு வேண்டிய பொருளில்லாமையால் அந்தப் பள்ளிக்கூடத்திலேயே 1863 ஹு ஜூலைமீ 1௳ எட்டு ரூபாயில் ஒருபாத்தியாயராக அமர்ந்தார். அந்தப் பெருந்தொகையும் 1864ஹு பிப்ரவரி மாதத்தில் ஆறு ரூபாயாகக் குறைக்கப்பட்டது. ஜீவனம் வெகு கஷ்டமாகவே "வறுமையாகிய தீயின்மேற் கிடந்து, நெளியு நீள்புழு வாயினேற் கிரங்கி யருள்வாயே" என அருணகிரிநாதர் வேண்டினவாறு தணிகேசனை "மிடிதீர அருள்வாயே" எனத் தாமுந் தினந் துதித்து வந்தனர். அப்போது தமது புத்தகத்திற் பின்வருமாறு எழுதுகிறார்.

"The difficulty I am in is inexpressible. My brother is still a copyist and I a teacher on Rs 6. How is the family to be supported by us whose income is so low? On the other hand my father is old and he is not fortunate enough to enjoy ease in his latter days under the protection of his sons."

[யான்படும் கஷ்டங்கள் சொல்லுக்கடங்கா. என் தமையனோ இன்னுங் காபீஸ்ட்;, நானோ ஆறு ரூபாயில் ஒரு உபாத்தியாயர். எங்கள் வரும்படி இவ்வளவு குறைவாயிருக்க நாங்கள் எப்படிக் குடும்ப சவரக்ஷணை செய்வது? எங்கள் தந்தையோ வயது சென்றவர். தமது இறுதி நாள்களிற் பிள்ளைகளின் உதவியை அடைந்து சுகமாயிருக்கும் பாக்கியம் அவருக்கில்லையே!]

சிறுவயதிலேயே தாய் தந்தையரிடத்தில் அன்பும் பத்தியும் வாய்ந்தவர் நமது சரித்திர கர்த்தா என்பது 1864ஹு செப்டம்பர்மீ 26௳ அவரது புத்தகத்திற் பின்வருமாறு எழுதியுள்ளதினின்றும் புலப்படும்:

"I am very uneasy to day because the thought of seeing my dear father and my tender mother who are not yet come from Tiruthani broke into my heart. I am longing to see them soon safe and sound, and pray God that He will kindly and graciously satisfy my ardent desire."

[திருத்தணிக்குப் போய் இன்னுந் திரும்பிவாராத என் அருமைத் தந்தை தாயர்களின் நினைவே பெரிதாய் இன்று எனக்கு அதிக மனக்கவலையாயிருக்கிறது. அவர்கள் சௌக்கியமாய்ச் சீக்கிரத்தில் திரும்பிவரக் காண என்மனம் அவாவுகின்றது. என் விருப்பத்தைத் தயைசெய்து பூர்த்தி செய்யக் கருணைபுரியக் கடவுளை வேண்டுகின்றேன்.]

இவ்வாறு குடும்ப கஷ்டங்களால் இவர் வருந்தியிருந்தபோது சென்னைக் கிறிஸ்தவ கலாசாலை உபாத்தியாயர் (டாக்டர்) மில்லர் துரை செங்கற்பட்டுக்குப் பள்ளிக்கூடப் பரிசோதனைக்கு வந்தனர். அப்போது அவரிடம் தம்முடைய கஷ்டங்களைத் தெரிவிக்கச், சென்னைக்கு வந்தால் மெட்ரிகுலேஷன் வகுப்பிற் படிப்பதற்கு வேண்டிய பொருளுதவி முதலியவற்றை மில்லர்துரை தாம் தருவதாய் ஒப்புக்கொண்டனர். தமக்கு உபாத்தியாயர் வேலையிஷ்டமில்லாதிருந்தும் அதைவிட்டால் வேறு வேலை எங்குத் தேடுவது, தாய் தந்தையரைவிட்டுப் பிரிந்து எப்படிச் சென்னைக்குப் போவது, என அஞ்சி அந்த ஆறு ரூபாய் உத்தியோகத்திலேயே சில காலம் இருந்தார். 1864ஸ்ரீ செப்டம்பர்ஸ்ரீ 28உ தமது புத்தகத்திற் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"I am not at all willing to be a teacher. Still I should not all at once leave the post. I should look before I leap."

[உபாத்தியாயராயிருக்க எனக்கு மனமே இல்லை. ஆயினும் நான் வேலையைத் திடீரென்று விட்டுவிடக்கூடாது. எதையும் ஆராயாது செய்யலாகாது.]

தேக ஆரோக்கியமும் மனோ தைரியமுங் குன்றித் தாய் தந்தையர் தம்மை விட்டுப்பிரிவது சகியாது அடிக்கடி வியாகுல மடைந்தனர். தினந்தோறும் மிக்க பிரயாசைப்பட்டு உழைத்தும் மாத முடிவில் ஆறே ரூபாய் பெறுவது இவர் மனதுக்கு ஆருத்துக்கத்தை விளைவித்தது. சென்னைக்கு வந்து படிப்பதற்கோ பொருள் இல்லை. இவரது கஷ்டதிசை இவ்வாறிருக்க, இளவயதிலேயே இவருடைய நன்றிமறவாமை தமது நண்பர் ஒருவர் தமக்கு அரையணா கொடுத்துதவினபோது இவர் எழுதியுள்ள குறிப்பால் நன்கு பெறப்படுகின்றது.

"My dear friend Srinivasalu assisted me with half an anna for the postage. He has assisted me many a time in this way. How grateful should I be to him and how much more grateful must I be to God who makes such friends assist me."

[என்பிரிய நண்பர் சீநிவாசலு தபாற்செலவுக்கு அரையணா கொடுத்துதவினர். அவர் பலமுறை எனக்கு இம்மாதிரி உதவியிருக்கின்றார். நான் அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவனாயிருக்கவேண்டும்! இத்தகைய உதவுங் குணமுடைய நண்பரைத் தந்த கடவுளுக்குப் பின்னும் எத்துணை நன்றி நான் செலுத்த வேண்டும்.]

எல்லாம் இறைவன் செயல், இறைவனே தோன்றாத் துணையாய் நின்று உதவுகின்றான் என்று அடிக்கடி இறைவனுக்குத் தமது நன்றிகாட்டுதல் இவர் புத்தகத்தில் எங்குங் காணலாகும். உதாரணமாக ஒரு விஷயம் கூறுவோம். 1864௟ அக்டோபர்ஸ்ரீ 16ௗ செங்கற்பட்டில்

மாலைப்பொழுதில் வெளிக்குச்சென்ற இடத்திற் சமீபத்திற் சீறிப்போந்த விஷநாகம் ஒன்று தம்மைக் கடியாதுவிட்ட நிகழ்ச்சியைக் குறித்துக் கடவுளுக்கு இவர் நன்றிபாராட்டுவது படிக்கப்படிக்க மனதுக்கு உருக்கத்தை மேன்மேல் உண்டுபண்ணுகின்றது. பக்திமார்க்கத்தைப் பரவச் செய்வதற்கென ஏற்பட்ட மிஷன்பள்ளியிற் படித்த கல்வியின்பயனை உண்மையிற்கிரகித்தனர் இவர் என்பது நன்கு தெரிகிறது. இவர் இதைக்குறித்து எழுதியுள்ளதாவது :

"Ah! How glorious is the never ceasing watchfulness of God!—of that God whose mercy has no limits, of that God who takes all the care even for the most mean and despicable of His creatures. How grateful must I be to Him! and for giving me this night a new life as it were what service can I render to Him in return! None whatever. Oh! My God and True Preserver! I am not in the least able to return anything for the innumerable blessings which Thy Grace hath been pleased to bestow upon me save my heart felt and humble thanks."

[ஆ! கடவுளின் என்றும் ஓயாக் கருணையின் பிரபாவத்தை என்னென்பது! என்னே அவர்தம் அளவுபடாக்கருணை! தமது சிருஷ்டியில் மிகத்தாழ்ந்ததும் இழிந்ததுமான ஜீவனிடத்தும் அவர் கருணைநோக்கம் எங்ஙனம் நிகழ்கின்றது! யான் அவருக்கு எத்துணை நன்றி பாராட்டுதல் வேண்டும்! இன்று எனக்குப் புனர் ஜன்மம் தந்து உதவின இறைவனுக்கு என்ன திருப்பணி நான் செய்யவல்லேன்! ஆ! என் தெய்வமே! காத்தளிக்குங் கடவுளே! ஏழையாகிய யான் உன் திருவடியை வணங்கி வாழ்த்தி வந்தனஞ் சொல்லுவதன்றி உன் பெருங்கருணைக்கும் வற்றாத திருவருளுக்குங் கைம்மாறு செய்ய ஒருசிறிதும் வல்லனல்லேன்.]

உண்பதற்கு நல்ல உணவுகூட இல்லாது கஷ்டதிசையில் இச்சமயம் வருந்தினரென்பது 1864ஞ அக்டோபர் 20உ

"The food I take is very bad; no buttermilk; no ghee; and how can I get health of body and vigour of mind?"

[யான் உண்ணும் உணவு மிகக் கேடாயிருக்கிறது; மோர் இல்லை; நெய் இல்லை; என் உடலும் மனமும் எங்ஙனம் திடப்படும்?]

என எழுதியுள்ளதால் தெரிகின்றது. இப்படியிருந்தும் ஒரு நேரமும் வீண்போக்காது தன் கல்வியறிவை அபிவிருத்தி படுத்துவதிலேயே வெகு ஊக்கமாய் உழைத்து வந்தார். காபி எழுதி எழுதி இவர் கையெழுத்து நன்றாய்த் திருந்தி யிருந்தது. 1864ஞ நவம்பர் மீ 7உ பின்வருமாறு எழுதியுள்ளார்.

"I heard from Vasudeva Mudaliar and Appasami Nayakar that Mr. Leggett, the Engineer, was pleased with my writing when he saw it in a petition which I had copied for a man."

[என்ஜினீர் லெக்கெட் துரை ஒருவருக்கென நான் பெயர்த்தெழுதிக்கொடுத்த விண்ணப்பத்தில் எனது கையெழுத்தைப் பார்க்க நேர்ந்தபொழுது அது நன்றாயிருக்கிறதென்று சந்தோஷப்பட்டதாக வாசுதேவ முதலியாரும் அப்பாசாமி நாயகரும் சொன்னார்கள்.]

ஆறு ரூபாய் போதாது அல்லற்பட்டுச் செங்கற்பட்டில் ஒரு ஆபீஸில் வேலையாயிருந்த வாசுதேவ முதலியார் என்பவருக்கு இராவிற் பாடஞ் சொல்லிவந்தார். ஆனால் அதுவும் சொற்ப வரும்படிதான். சரிவரக் கொடுக்கப்

படவும் இல்லை. நவம்பர்ீ ஜெனரல் டெஸ்ட் பரீக்ஷைக்குப் பணங்கட்ட ஐந்து ரூபாய்க்குப் பட்ட கஷ்டம் இறைவனே அறிவன். லெக்கெட் என்ஜினீர் தமது ஆபீஸில் காபீஸ்ட் வேலைக்கு 15 ரூபா சம்பளந் தருவதாகச் சொன்னார். ஆனால் அது காயமான உத்தியோகம் அல்ல என்று அதை வேண்டாம் என்று விட்டுவிட்டனர்.

## (ii) **1865—1869.**

### சென்னை வாசம்.

இவ்வாறிருக்கும்போது **1865**ௐ ஜனவரியில் மில்லர் துரை செங்கற்பட்டுக்கு மறுமுறை வந்தபோது அவரிடம் தங் கஷ்டத்தைச் சொல்ல அவர் ["Mackintosh Scholarship Examination" என] ஒரு பரீக்ஷை சென்னையில் நடத்தப்படும் என்றும், அதில் தேறினால் தாம் உதவுவதாகவும் சொல்ல, அவ்வாறே சென்னைக்குப் பிப்ரவரி மாதம்போய் அந்தப் பரீக்ஷையில் முதலாவதாகத் தேற, மில்லர் துரை,

"You answered very well. I did not expect so much from you."

[நீ வெகு நன்றாய் எழுதினாய், நீ இவ்வளவு எழுதுவாய் என்று நான் நினைக்க இல்லை.]

என்று சொல்லி மாதம் எட்டு ரூபாய் ஸ்காலர்ஷிப் கொடுத்துவந்தார். கஷ்டகாலத்தில் இன்னும் படிக்கப் போவது இவர் தந்தைக்கும் தமையனுக்கும் இஷ்டமே இல்லை. அவர்களுக்கு எவ்வளவோ சமாதானம் சொல்லி மெதுவாய்ச் சென்னைக்குவந்து பரீக்ஷையில் முதலாகத் தேறினது இவர் தந்தைக்குப் பெரிதும் சந்தோஷம் விளைவித்தது. திருவல்லிக்கேணியில் இவர் தமது அத்தைமகன்

ரத்தினம் பிள்ளை யென்பவர் வீட்டில் இருந்துவந்தார். தமக்குவந்த எட்டு ரூபா, நாலு ரூபா சாப்பாட்டுச் செலவுக்காக ரத்தினப் பிள்ளைக்கும், ஒரு ரூபா தன் செலவுக்கும், மூன்று ரூபா தாய்தந்தை தமையனுக்குமாகச் செலவிடப்பட்டது. படிப்புக்குவேண்டிய புத்தகங்களை ரத்தின. பிள்ளையும் சில நண்பர்களும் மில்லர்துரையும் தந்து உதவினார்கள். கிறிஸ்தவ கலாசாலையில் அப்போதிருந்த உபாத்தியாயர்கள் Mr. Macmillan (மேக் மில்லன் துரை), Mr. Carslaw (கார்ஸ்லா துரை), Mr. Miller (மில்லர் துரை). வகுப்புக்களில் இவர் எவ்வாறிருந்தனர் என்பது பின்வரும் குறிப்புக்களில் ஏற்படும்.

28-3-1865. Mr. Macmillan returned our geography papers and although I did not expect a high rank I was the first.

[மேக்மில்லன்துரை நடத்திய பூகோளசாஸ்திரப் பரீக்ஷையில் நான் எதிர்பாராதபோதிலும் முதலாவதாக இருந்தேன்.]

" 30–3–1865. Mr. Macmillan returned our poetry papers. I was second and my marks were 41 out of 60; the first got 42 out of 60. But on the whole he said my paraphrase was good."

[மேக்மில்லன்துரை நடத்தின ஆங்கிலசெய்யுட் பரீக்ஷையில் 60 மார்க்குக்கு 41 மார்க் வாங்கி இரண்டாவதாக இருந்தேன். முதலாயிருந்தவர் 42 மார்க் வாங்கினார். ஆயினும் செய்யுட் பாகங்களை வசனமாக்குவித்தலில் நான் எழுதினதே மொத்தத்தில் நன்று யிருந்த தென்றார்.]

படிப்பு இவ்வாறிருக்கக் குடும்பகடனும் கஷ்டமும் படிப்பதற்கு முடியாத தொந்தரவுகளை அதிகரித்து வந்தன. செங்கற்பட்டிலிருந்து படிப்பதற்குச் சென்னை வரும்பொழுதும் சென்னையிலிருந்து செங்கற்பட்டுக்குத்

தாய் தந்தையரைப் பார்க்கச் செல்லும்பொழுதும் தம் முடைய புஸ்தகமுதலிய சாமான்மூட்டைகளைத் தாமே தூக்கிக்கொண்டு 35 மைல் வழிநடந்து சென்றது மிக்க பரிதபிக்கத்தக்கதா யிருக்கிறது. வண்டிக்குக் கொடுக்கப் போதுமான பணம் இல்லை. அப்போது ரெயில் கிடை யாது. என்ன செய்வது. தாய் தந்தையருடைய கஷ் டத்தை நிவர்த்தி செய்யாது தாம் சென்னையிற் படித்துக் கொண்டிருப்பது இவருக்கு மெத்த மனக்கவலையா யிருந் தது. கட்ட நல்ல துணிகூடக் கிடையாது. ஜுலை மீ 3வ

" I felt great shame to go to school in ragged cloth "

[கந்தைத் துணியுடன் பள்ளிக்குப்போவது எனக்குப் பேரவ மானமா யிருந்தது]

என எழுதியுள்ளார். தம்மை யறியாது தாம் செய்த பாபங்களுக்கு அஞ்சி அஞ்சி இவர் கடவுளைப் பிரார்த்திப் பது இவருடைய நன்னெறியை நன்குகாட்டும். ஒருமுறை தெரியாது தமது கால்பட்டு ஒருபல்லி இறந்துபட்டது. அப்போது இவர்பட்ட துயரம் சொல்ல ஒண்ணாது. இவர் புத்தகத்தில் எழுதியுள்ளதாவது :

"14. 7. 1865. What a wretch I am! * * I am a terrible sinner. The very fact that I have done such a cruel thing convinces me that I am a very great sinner and worthy of the severe condition in which I am now placed. Oh God! Pardon me! I confess my sin and repent it."

[ஆ! நான் என்னபாவி! கொடும்பாவி நான். இவ்வளவு கொடுந்தொழிலைச் செய்யத்துணிந்த மாபாவி நான் ஆதலால்தான் கடவுள் என்னை இக்கஷ்டத்துக்கு ஆளாக்கி வைத்திருக்கிறார். ஆ! தெய்வமே! நான் செய்தது தவறே! அதற்காக நான் பெரிதும் வருந்துகின்றேன். என் பிழையைப் பொறுத்தருளவேண்டும்.]

பின்பு, தமக்காதரவாயிருந்த ரத்தின பிள்ளை சித்தூருக்கு மாற்றப்பட, இவர் இருக்க இடமும் உண்ண உணவும் இல்லாது சிலநாள் கஷ்டப்பட்டார். பிறகு இருக்க வேறிடம் தேடி மில்லர் பள்ளிக்கூடத்துக்குச் சமீபத்தில் லிங்கசெட்டித்தெரு 307-ஆம் நம்பர் எல்லப்ப நாயகர் வீட்டில் இடம் கிடைக்க அதில் இருந்து வந்தார். இவ்வருடத்தில் U. C. S. பரீக்ஷையிற் றேறினார். இந்த கஷ்டதிசையில் மில்லர்துரை எவ்வளவோ உபகாரம் செய்ததாக இவர் எழுதியுள்ளார்.

**1866**௵ பிப்ரவரி௴ மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினதாக கெஜட்டிற் கண்டபோது இவர் எழுதியுள்ளதாவது:

"I was exceedingly joyful to see my name in the list. Of the passed candidates from the F. C. M. Institution I stand first. Thanks to my God who has not forsaken me who trusted in Him. Hearty thanks to my gracious God, to my Redeemer and my Shelter. I trusted in Him only and He has rewarded me. What can I render in return to all the kindness which He is showering on me. 14-2-1866."

[தேறினவர்கள் பெயர்களுள் என் பெயரைக் கண்டபோது நான் பேரானந்தம் உற்றேன். மில்லர் ஸ்கூலில் நான்தான் முதல். தன்னை நம்பின என்னைக் கைவிடாது காத்த என் கடவுளுக்கு வந்தனம். கருணாநிதிக்கு என் மனப்பூர்வ வந்தனம்! தீன ரக்ஷகனுக்கு என் மனப்பூர்வ வந்தனம்! தோன்றாத் துணைக்கு என் மனப்பூர்வ வந்தனம்! அடியேன் அவரை நம்பினேன்! அவர் அடியேனுக்கு உதவினார்! அவர் அடியேன்மீது அன்பு சுரந்து அளித்த உதவிகளுக்கெல்லாம் என்ன தொண்டு செய்யவல்லேன்!]

எப். ஏ பரீக்ஷைக்குப் படிப்பது இவர் தந்தையாருக்குந் தமையனாருக்கும் இஷ்டம் இல்லை. ஏதாவது வேலை சம்பாதித்துக் குடும்ப கஷ்டத்தை நீக்கவேண்டும் என்று இவரை அவர்கள் வற்புறுத்தியும் ஏதோ சமாதானம் சொல்லி எப். ஏ. படித்தார். கலெக்டராயிருந்த ரஸாகான் சாயபு, ரிஜிஸ்ட்ரார் பெரியசாமி முதலியார், வக்கீல் ராமசந்திர ராவ் சாயப் இவர்கள் இவருடைய சகபாடிகள். சில காலம்தாமே சமைத்துச் சாப்பிட்டுப் பள்ளிக்கூடம் போகவேண்டி யிருந்தது. ஸ்காலர்ஷிப்பாக வரும் எட்டு ரூபா போதாததால் பார்த்தசாரதி செட்டியார் என்பவருடைய பிள்ளைக்குப் பாடஞ் சொல்லி மாதம் 3 ரூபா பெற்றுவந்தார். வேறொரு இடத்தில் இரண்டு பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்ல 4 ரூபா கிடைத்தது. பணம் போதாமற் கஷ்டப்பட்ட காலத்தில் வீட்டுக்காருங் கடன்கொடுத்துதவினர். இவ்வாறு படித்துக் கொண்டிருக்கும்போதே உலகுக்குப் பயன்படக்கூடிய புத்தகங்கள் ஏதாவது எழுதவேண்டும் என்னும் ஆசை இவருக்கு இருந்ததாகத் தெரிகிறது. பஞ்சதந்திர வசனம், திருநாவுக்கரசுநாயனார் சரித்திரம் என்னும் நூல்கள் எழுதினதாகத் தெரிகிறது. ஆனால் இவர் எழுதிவைத்தவை எங்குப் போயினவோ தெரியவில்லை. 1866௵ செப்டம்பர்௴ 28௳ வெள்ளிக்கிழமை திருத்தணிகைக்குச் சென்று தமது குலதெய்வமாகிய முருகபிரானை வணங்கிப் பேரானந்தம் அடைந்தனர்.

**1867**௵ ஜனவரி௴ 30௳ எப். ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பிற் றேறினர். அப்போது கடவுளுக்கு நன்றி கூறி இவர் தமது புத்தகத்தில் எழுதியுள்ளது இவ்வளவல்லவன்று. தாம் படித்திருந்த ஒவ்வொரு வகுப்பிலும்

இனும் புத்தகங்கள் பலபெற்றனர். பின்னும் பி. ஏ க்குப் படித்தால் தமது தாய் தந்தையருக்குக் கஷ்டமாகு மென்று வேலைக்குப் பிரயத்தினஞ்செய்து பச்சையப்பன் கலாசாலையில் ப்ரின்சிபல் லவரி துரைக்கீழ் (Principal Lovery) உபாத்தியாயராகச் சிலகாலமிருந்து பின்பு. மில்லர்துரை (Mr. Miller) சிபார்ஸ்செய்ய (Mr. Anderson) ஆண்டர்ஸன் துரையாரால் க்ராண்ட் ஸ்கூலில் (Church of Scotland Mission School) 40 ரூபாயில் மார்ச்சு 27உ உபாத்தியாயராக அமர்ந்தார். பின்புதான் அலைபோற் றத்தளித்த இவர் மனம் ஒருவாறு நிலைத்தது. இவர் பி. ஏ. படிக்காதுவிட்டது மில்லர் துரைக்கு மெத்த வருத்தம்.

"You are losing a golden opportunity, Subramanyan."

[சுப்பிரமணியம்! நல்ல சமயத்தை வீணாய் இழக்கிறாய்]

என்றாராம். உபாத்தியாயர்வேலை இவருக்கு எப்போதும் இஷ்டமேயில்லை. ஆதலால் இவர் மில்லர்துரையிடம் தமக்குக் கவர்ன்மெண்டு உத்தியோகம் ஏதாவது சிபார்ஸ் செய்யும்படிக் கேட்டுக்கொண்டார். அப்போது மில்லர் பள்ளிக்கூடத்திலேயே 40 ரூபாயில் ஒரு உபாத்தியாயர் வேலை காலியாக அவ்வேலைக்குச் செப்டம்பர்மீ 12உ மாற்றிவந்துவிட்டனர். ஆண்டர்ஸன்துரை 45 ரூபா கொடுக்கின்றேன் என்று சொல்லியும் அதை ஒத்துக் கொள்ளாது தனது ரக்ஷகராகிய மில்லர்துரையிடம் இருக்கவே விரும்பி வந்தனர். அக்டோபர்முதல் காலையிற் சிவ புராணம் படிக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர். இவ்வழக்கம் அவர் இறுதிநாள்வரை இருந்தது. முதலிருந்தே தமிழிலும் தமிழ்க்கடவுள்மாட்டும் அன்பு ததும்பின மனநிலையையுடைய இவர் டிசம்பர்மீ 28உ

ஐந்து பாடல்கள் தணிகேசன்மீது பாடினதாக எழுதியுள்ளார். அவை கிடைக்க இல்லை. தமது கஷ்டதிசையை நீக்கித் தம்மை வழிப்படுத்தின கடவுளுக்கு டிசம்பர் 31வ பின்வருமாறு தமது நன்றியறிதலைக் காட்டுகின்றார்.

"When I compare this year 1867 with 1865 and 1866, years in which I stayed in Madras, I must say that this year 1867 is decidedly the happiest. Many of my difficulties are now over and I feel heartily grateful to my God—to my never forsaking God—to my ever saving God—to my incomparable God—to my only God and to my beloved God—for the many gifts that He has bestowed upon me. * * I assuredly expect and long that the new year, 1868, will bring more comfort and happiness to me by changing my stony heart and making it feel for His mercy and also by altering my present post of a teacher; for, I am not the man for it."

[1865, 1866 வருஷங்களில் நான்பட்ட பாட்டைப் பார்க்க, 1867 வருஷத்தில் எவ்வளவோ சுகத்திற் கடவுள் என்னை வைத்தார் என்று சொல்லவேண்டும். என் கஷ்டங்களிற் பல இப்போது ஒழிந்தன. அடியேனுக்கு இதுகாறும் உதவி என்னைக் காத்தளித்த பெருங்கருணைக்காக, என் நாதனுக்கு, என்னை என்றுங் கைவிடாக் கடவுளுக்கு, என்னை என்றுங் காக்கும் இறைவனுக்கு, ஒப்புயர்வில்லா என் தலைவனுக்கு, தனித்து விளங்கும் என் தெய்வத்துக்கு, என் அன்புக் குகந்த ஐயனுக்கு, என் மனப்பூர்வமான வணக்கமும் வந்தனையுஞ் செலுத்துகின்றேன். புதுவருடமாகிய 1868-ல் எனக்குப் பிரியமில்லாத இவ்வுபாத்தியாயர் வேலையை மாற்றியும் அவர் திருவடியை நினைந்து நினைந்து என் கல்மனம் கரையவும் எனக்குப் பின்னுஞ் சுகந்தருவரென மிகவும் வேண்டுகின்றேன்.]

இனி **1868** ஆம் வருஷத்திய நிகழ்ச்சி கூறுவாம். இவர் இவ்வருடமுதல் தினந்தோறும் தணிகேசன் மீது ஒரு பதிகம் இயற்றுவதாகவும், 'தணிகையன் துணை' எனத் தினம் முப்பத்திரண்டுமுறை எழுதுவதாகவும், தேவாரத்தில் ஒருபதிகம் படிப்பதாகவும், கிருத்திகைதோறும் ஒரு கீர்த்தனை பாடுவதாகவும் ஒரு ஏற்பாடு செய்துகொண்டதாகத் தெரிகின்றது. தாம் பாடுவது சிற்சில சமயத்தில் தமக்கே நன்றாக இல்லை எனத்தோன்றிய போதிலும் அவன் புகழ் அதிலிருப்பதால் பாடுவது குற்றமல்ல எனத் தம்மைத்தாமே தேற்றிக்கொண்டதாகவும் ஒருகாலத்தில் தம் உற்றாரில் எவரேனும் அவை தமைப் படித்துச் சந்தோஷிக்கக்கூடும் என்றும் எண்ணந் தோன்றினதால் அவ்வழக்கத்தை நிறுத்தாதிருக்கத் தீர்மானித்ததாகவும் எழுதி யிருக்கின்றார். இவ்வாறு இவர் பாடிய தனிப்பாடல்கள் என்னிடத்திற் கிடைத்தவை இச்சரித்திரத்துக்கு ஓரநுபந்தமாகச் [அநுபந்தம் VI] சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை வெகு சுலபமான நடையில் படிப்பவர் மனத்தை மிக உருக்கும் தன்மைவாய்ந்தனவாயமைந்துள்ளன என்பது படிக்கும்பொழுதே தெரியும். சென்னையி லிருந்தவரையுங் கூடியபோதெல்லாம் தணிகைக்குப்போய்ச் சுவாமி தரிசனம் செய்துவந்தார். பிப்ரவரிமீ பள்ளிக்கூடத்துக் குமாஸ்தா Mr. Quinn (குவின்) என்பவர் வேறு வேலைக்குப்போக இவர் (Mr. Stevenson) ஸ்டீவன்சன் துரையிடம் தமக்கு உபாத்தியாயர் வேலை தேகத்துக்குச் சரிப்பட இல்லை என்று சொல்ல அவர் இவருக்கு அந்த குமாஸ்தா வேலையை ஏப்ரல் மாதமுதல் தந்து உதவினார். முதலில் 40 ரூபா சம்பளந்தான் கொடுக்கப்பட்டது. இப்புதுவேலையில்

அதிக ஒழிவில்லாவிடினும் அது ஒருவாறு சௌகரிய மாகவேயிருந்தது. சில வருஷங்களாகத் தம்மைப் பிடித்த காதுநோய் தீரவேண்டி இவ்வருடம் ஆடிக்கிருத்திகை திருத்தணிகைக்குப் போய்வந்தனர்.

ஜூன் மீ 25௳ (விபவருஷ ஆனி 13௳) வியாழக் கிழமை காஞ்சிபுரத்தில் இவருக்குக் கலியாணம் ஆயிற்று. கலியாணப்பெண் (அதாவது எனது தாயார்) இவரினும் மிக்க ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவரே. என் தாயாருக்கு வள்ளியம்மாள் என்றும் தாயம்மாள் என்றும் பெயர். அவருடைய பிதாவின் பெயர் ராஜகோபால பிள்ளை; மாதாவின் பெயர் பெருந்தேவியம்மா. சிவமித்ர மஹருஷி கோத்திரம்; வைஷ்ணவ மதம்; ஆயினும் பூர்வ ஜன்ம வாசனையாலும் சிவப்பிழம்பாம் சுப்பிரமணிய பிள்ளைக்கு மனைவியாகும் விதிப்பயனாலும் எனது தாயாருக்கு அடிநாள் முதல் திருநீற்றிலுஞ் சைவத்திலும் அசையாத பக்தி ஊன்றிக் கிடந்தது. என் தாயார் நளவருஷ தைமீ (1856) பிறந்தவர்கள். கணிகேசனிடத்து மிளாப்பக்தி பூண்ட பெருமாட்டி. "பூமாலை புனைந்தேத்தல்" ஆகிய அரிய திருப்பணியை நாடோறுந் தவறாது இன்றும் நடத்திவரும் புண்ணிய ஜன்மம். எங்களுக்கு நோய் முதலிய வந்தால் வைத்தியருக்கு வீணாகப் பொருளைச் செலவிடவிடாது அப்பொருளைப் பவரோக வைத்திய நாத பெருமானுக்குச் செலுத்தினால் நோய் தானே விலகும் என்னும் உண்மையைப் பலமுறை பிரத்தியக்ஷ மாக நிறுவித், திருநீறுகொண்டே எங்கள் பிணிகளைத் தீர்த்து வருஞ் சீலவதி. தாய்க்குத் தாயும் நோய்க்கு வைத்தியநாத பெருமான் எங்களுக்காகவே அனுப்பி யுள்ள மருந்துறையுமாகிய பெருந்தகை.

கடவுளருளால் தமக்கு ஒருவாறு பொருட்கஷ்டம் நீங்கினவுடன் தமது குடும்பப் பழைய கடன்களை எல்லாம் இவர் மெதுவாகத் தாங் கஷ்டப்பட்டாவது தொலைத்துவந்தார். இவ்வருடம் ஆகஸ்டுமீ 29உ ஸ்ரீ ஆறுமுகநாவலரை முதல்முதல் பார்த்து அவர் "சைவ சமயமே சமயம்" என்னுந் தாயுமான சுவாமிகள் பாடற் பொருளைப் பிரசங்கஞ் செய்வதைக்கேட்டு மிக்க ஆநந்தம் அடைந்ததாக எழுதியுள்ளார். செப்டம்பர் முதல்தேதி சம்பளம் ரூபா ஐம்பது ஆயிற்று. இச்சமயத்திற்றான் இவர் பிரமோத்தரகாண்ட வசனம் எழுதி வந்தது. கார்த்திகை கிருத்திகைக்குத் திருத்தணிக்குப் போகலாமா என இவர் யோசித்திருந்தபொழுது 27-11-1868 தேதி இரவு இவர் தாயார்வந்து "அப்பா! கோயிலுக்குப்போக மறந்தாயோ" எனச் சொல்லக் கனவுகண்டு விழித்து உடல் சிலிர்த்து நெக்கு நெக்குருகி இறைவனே தாய் போற் பரிந்து கடையவனேனைத் தணிகைக்கு வா என அழைத்தனர் என்று பெருமகிழ்ச்சிகொண்டு,

"போகமரு ளுந்தணிகைப் புண்ணியனே போற்றுந்தாய்
ஆக வந்து கோயிலுக் "கப்பாநீ—போக
மறந்தாயோ" என்றுதிரு வாய்மலர்ந்தா யீது
துறந்தார்க்கு மேயுண்டோ சொல்!

"ஞாயிற் சிறந்தொரு கோயிலு மில்லையென் னுந்தரணி
நீயப் பழமொழிக் கேற்பஎன் னண்டையிந் நீளிரவில்
தாயிற் செறிந்து தணிகா சலதண் ணருளொா "டப்பா
கோயிற்குப் போக மறந்தனை யோ" என்று கூறினையே!

"அறந்தா னியற்றுமெய் யன்ப ரிருக்கநல் லாக்கமுதல்
துறந்தா ரிருக்கநின் றாயடிக் கேயென்றுந் தொண்டுசெய்து
சிறந்தா ரிருக்கச் சிறியே னிடத்தருள் வைத்துச் "செல்ல
மறந்தாயோ" என்னல் தணிகா சல! என்ன மாதவமே!

"சுளித்தே முகத்தைத் திரிகின்ற தோகைச் சுகமெனுமோர்
துளித்தேன் பருகத் துவளுமித் தொல்வினைத் துஷ்டனிடம்
அளித்தோ யுவந்துவந் "தப்பா மறந்தனை யோ" எனலுங்
களித்தேன் உடலுஞ் சிலிர்த்தது காண்தணி காசலனே"

—எனப் பாடிப் பரவி 29-11-1868 தேதி கிருத்திகைத் தினம் திருத்தணிக்குச் சென்று தரிசனஞ் செய்தனர்.

**1869**ஹு ஆகஸ்ட்டுமீ தம்புசெட்டித் தெருவில் உள்ள ஒரு வீட்டுக்குக் குடிபோயினர்.

சென்னையி லிருந்தவரையும் இவர் புதிதாகப் பார்த்த தேவாரம் பெற்ற ஸ்தலங்கள் ஆறு.

---

## II. உத்தியோக பருவம்.

## (i) **1870—1888.**

### மஞ்சகுப்ப வாசம்

தமக்குந் தமது தாயாருக்குஞ் சென்னைவாசம் ஒத்துக் கொள்ளாததால் இறைவன் வெளியூருக்கு அனுப்ப மாட்டாரா என வேண்டிவந்தனர். இச்சமயம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் Mr. W. Hodgson (ஹாட்ஸன் துரை) இவர் கையெழுத்தைப்பற்றி மில்லர் துரைக்கு வியந்தெழுதின நிமித்தம் இவர் மஞ்சகுப்பம் டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு வேலைக்காக ஒரு விண்ணப்பம் அனுப்பியிருந்தனர். அந்த ஜட்ஜ் 35 ரூபாயில் (Second English writer) ஒரு குமாஸ்தாவேலை இவருக்குக்கொடுக்க 1869ஹு டிசம்பர்மீ 22உ சென்னையைவிட்டுநீங்கி **1870**ஹு பிப்ரவரிமீ 1உ மஞ்சகுப்பம் வந்து ஜில்லா கோர்ட்டில் வேலை ஒப்புக் கொண்டனர். அப்போது இவர் செய்துகொண்ட வைராக்கியத்தில் ஒன்று கிருத்திகைதோறும் ஒருபகல்

கற்பூரம் தீபாராதனைசெய்து முருகனைத் தொழுவது. இப் பிரதிக்ஞை இவர் இறுதிநாள்வரை தவறாது நடந்தது. அந்த வருஷமுடிவில் (1-12-1870) Head Writer (முதல் குமாஸ்தா) வேலை (ரூபா 70) யாயிற்று. வழக்கமாகக் கோர்ட்டில் வேலை என்றும் அதிகமாகத்தான் இருந்தது. ஒருதினம் வேலையில்லாது சும்மா இருக்க நேரிட்ட பொழுது

"It is more annoying to be idle."

[வேலையில்லாது சும்மா இருத்தல் வேலைசெய்வதிலும் அதிக உபத்திரவமாயிருக்கிறது.]

என்று எழுதியிருக்கிறார்.

**1871** ஆம்தான் இவருக்கு முதல் முதல் திருப்புகழ் அச்சிடவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. இவ்வருஷ முதல் தான் திருப்புகழ் ஓலைப் புத்தகங்கள் சேகரிக்க ஆரம்பித்தார். எனது பிதாவை அவர்களுக்கு முதல் முதல் திருப்புகழில் ஆசை எப்படி உண்டாயிற்று என்று நான் ஒரு முறை கேட்டேன். சிதம்பரம் தீக்ஷிதர்கள் ஒரு சம்வாதத்தில் தங்கள் பெருமையைக் காட்ட மேற் கோள்களாகப் பல நூல்களினின்று பாடல்கள் எடுத்துக் காட்டினதாகவும், அச்சமயம்

"வேத நூன்முறை வழுவா மேதினம்
வேள்வி யாலெழில் புனை மூவாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை புரிகோவே"

எனவரும் "தாது மாமலர் முடியாலே" என்னுந் திருப் புகழ்ப் பாடலையும் எடுத்துக்காட்டி யிருந்ததாகவும், அப் பாடலின் தேனொழுகும் இனிமை தம் மனதை மிக்குங் கவர்ந்து திருப்புகழில் ஆசை உண்டுபண்ணினது என்றும், இத்தகைய அற்புதப் பாடல்கள் பதினாறாயிரம் அருணகிரி

காதர் பாடியிருக்க ஓராயிரமேனுங் கிடைத்து அச்சிட்டால் தாமெடுத்த ஜன்மம் பலன் பட்டதாகும் என நினைத்ததாகவுங் கூறினார்.

**1872**ஷு ஏப்ரல்மீ 18உ இவரது அருமைத்தாய் இறக்க இவர் பட்ட துயரம் இறைவனே அறிவன். தாயாரிடத்தில் நிறைந்த பக்தியும் ஆசையும் உள்ள மகனாதலால் இத்துக்கம் இவர் இறுதி நாள் வரையுஞ் சகிக்க முடியாது வருந்தினர். மேமீ 10உ இவருக்குச் சீமந்த கலியாணம் நடந்தது. ஆகஸ்ட்டு முதல் தேதி பிறந்த சீமந்த புத்திரி செப்டம்பர்மீ 13உ இறந்து பட்டது. இவ்வருடம் ஜூன்மீ 21உ முதல் பிள்ளையார் பூஜை செய்யும் வழக்கத்தை மேற்கொண்டனர்.

**1874**ஷு பிப்ரவரிமீ 20உ ஜட்ஜ் (Mr. Swinton) சுவின்டன் துரையிடம் ஒரு கைக் கடியாரம் பரிசு பெற்றனர். தம்மால் இயன்ற அளவு சிவகைங்கரியத்திலும் சிவதரிசனையிலுமே தமது ஒழிவு காலத்தைப் போக்க விரதங் கொண்டனர். இவ்வருடம் திருத்தணி திருக்குளத்துக் கெதிரில் தீபம் ஏற்றும்படி ஒரு ஏற்பாடு செய்தார். பிரமோத்தர காண்ட வசனம் என்னும் தாமெழுதிய வசன நூலைச் சென்னைத் தமிழ் உபாத்தியாயர்கள் சின்னசாமி பிள்ளை, கணபதிபிள்ளை இவர்களிடம் பார்த்துத் திருத்தித் தரும்படி அனுப்பினார். சிதம்பரத்தில் ஒரு கட்டளை அருச்சனை ஏற்படுத்தினர். அக்டோபர்மீ 26உ ஒரு பெண் குழந்தை இவருக்குப் பிறந்தது. இதன் பெயர் வள்ளிநாயகி. இந்த அம்மா இப்போது மஞ்சகுப்பத்தில் முனிசிபல் கௌன்சிலராயிருக்குந் தங்கவேலு பிள்ளையின் மனைவியாய் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் மீது

எனது தந்தையாருக்கு மிகப்ரீதி. தங்கவேலுபிள்ளை என் தகப்பனாரின் அத்தை பேரன் (மகன் வயிற்றுப்பிள்ளை).

**1875**ஸு டிசம்பர்மீ 28உ சென்னையில் தமக்கு ஆதரவாயிருந்த ரத்தின பிள்ளை (அத்தை மகன்) இறக்க இவர் மிக்க துயரம் அடைந்தனர்.

**1876**ஸு ஜனவரிமீ ஸ்ரீ ஆறுமுக நாவலருடைய சைவ வினாவிடை இரண்டாம் பாகம் ஒரு புத்தகங் கிடைக்க அதில் தமக்கு அதிக விருப்பமுள்ள திருப்புகழ்ப் பாடல்கள் ஆறு இருப்பதைக்கண்டு மிகவும் மனமகிழ்ந் தனர். ஏப்ரல்மீ 14உ பின்வருமாறு எழுதியுள்ளார்.

"To-day is Good Friday. I have begun to copy the திருப்புகழ் stanzas of Arunagirinâdar. My object is to collect as many as possible and have them corrected by a good Tamil scholar. May God help me in my undertaking!"

[இன்று "நல் வெள்ளிக்கிழமை" என்னும் பண்டிகைநாள். அருணகிரிநாதருடைய திருப்புகழ்ப் பாடல்களை ஓலைப் புத்தகத்தினின்றும் பெயர்த்தெழுத இன்று ஆரம்பித்தேன். எவ்வளவு பாடல் சேகரிக்கக்கூடுமோ அவ்வளவு சேகரித்து, நல்ல தமிழ் வித்துவானால் அவை தமைத் திருத்துதல் என் கருத்து. இம் முயற்சி நிறைவேறக் கடவுளே அருள்புரிய வேண்டும்.]

செப்டம்பர்மீ 24உ மஞ்சகுப்பம் மிஷன் ஸ்கூல் தமிழ் உபாத்தியாயர் சிவ சிதம்பர முதலியாரவர்களைக் கொண்டு திருப்புகழ் திருத்த ஏற்பாடு செய்ததாகத் தெரிகிறது. டிசம்பர்மீ 31உ

"திருப்புகழ்ப் பாட்டுக்களைச் சேகரஞ்செய்துவருகின்றேன். முருகப் பெருமானுடைய அநுக்கிரகத்தினாலே ஆயிரம் பாடலாவது திருத்தமாக அகப்பட்டால் அச்சிட்டு விடலாம். ஜனோபகாரமாயும் வெகு புண்ணியமாயுமிருக்கும்."

என எழுதியுள்ளார். வெள்ளிக்கிழமைகளிற் சிவதரிசனஞ் செய்யாது இரவில் உண்ணுவதில்லை என்னும் விரதம் தம்முடைய முப்பத்தோராம் ஆண்டில் மேற்கொண்டதாகக் குறித்துள்ளார்.

**1877**ஆ ஜனவரி மீ 1உ சென்னைக்கும் மஞ்சகுப்பத்துக்கும் ரெயில் ஏற்பட்டது திருத்தணி முதலிய இடங்களுக்கு வருவதற்கு மிக்க சௌகரியமாயிற்று. ஜூலை மீ 6உ செங்கற்பட்டிலுள்ள பிதிரார்ஜித வீட்டில் தம்முடைய சிற்றப்பாருடைய கால் பாகத்தை விலைக்கு வாங்கினர். வருகின்ற வரும்படி முன் தாம்பட்ட கஷ்ட நிலைக்கு எவ்வளவோ மேலாயிருந்தபோதிலும் நிலைமைக்கு ஏற்ற தருமஞ்செய்யவேண்டும் என்னும் அவா ஒருபாலும் சுற்றத்தினருக்கு உதவவேண்டும் என்னும் எண்ணம் ஒருபாலுமாகச் சம்பளத்தில் ஒன்றும் பாக்கி நிற்பதில்லை. இவ்வருடம் ஜூலை மீ 27உ ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதன் பெயர் மங்களநாயகி. கல்வியிலும் அறிவிலும் மிகச்சிறந்து விளங்கின இப்பெண்மணி இளம் பிராயத்திலேயே கொடிய நோயாற் பீடிக்கப்பட்டு 1898 ஆ மார்ச்சு மீ 12உ மதுரையில் இறந்து பட்டது. இக்குழந்தை அடிக்கடி நோயால் வருந்தினது இவருக்கு மிக மனவேதனைக் கிடமாயிருந்தது. 1877ஆ Civil Higher Grade (முனிசீப்) பரீக்ஷை தேறினதுமுதல் வழக்கமாயிருந்த கிருத்திகை விரதத்துடன் அப்பரீக்ஷையின் நன் முடிபு தெரிந்ததினம் முக்கோடி ஏகாதசியாதலின் முக்கோடி ஏகாதசி விரதமும் அநுஷ்டித்து வந்தார். இவ்வருஷமுடிவில் பின்வருமாறு எழுதியுள்ளதில் நின்று அவர் மனநிலை விளங்கும்.

"I have completed the tests required for the office of Dt. Munsif and, if by the grace of God, I get a Munsif's place in a சிவஸ்தலம், I shall consider myself the happiest of men and pass my days quietly, discharging my office duties and devoting myself to the study of religious books and to the worship and service of the Almighty and Merciful God."

[டிஸ்டிரிக்ட் முன்சீபுக்கு வேண்டிய எல்லாப் பரீக்ஷைகளிலும் தேறி யாயிற்று. கடவுளருளால் ஒரு சிவ ஸ்தலத்தில் எனக்கு முன்சீப் வேலை கிடைத்தால் நான் என்னை மஹா சுக புருஷன் என்று கருதுவேன். ஆபீஸ் வேலையைச் சரிவரச்செய்து எல்லாம்வல்ல கருணாநிதியின் புகழ் நூல்களைப் படிப்பதிலும், அவனைத் துதிப்பதிலும், அவனுக்குத் தொண்டு செய்வதிலுமே என் காலமெல்லாம் நிம்மதியாய்க் கழிப்பேன்.]

**1878**ஹ ஜனவரிமீ 19உ இரவு தம்முடைய கனவில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோழிக் கொடிவிளங்க மயில் வாகனத்தின்மீது பொன்னிறச் சோதி பொலிய வீற்றிருக்கத் தரிசித்ததாக எழுதியுள்ளார். ஜூன்மீ 28உ காஞ்சீபுரம் புத்தேறித் தெரு அண்ணாமலை பிள்ளை யென்பவர் 750 பாடல் உள்ள திருப்புகழ் ஓலைப் புத்தகந் தந்துதவினதைப் பெரு மகிழ்ச்சியுடன் குறித்துள்ளார். செப்டம்பர்மீ 30உ சிதம்பரத்துக் கடுத்த பின்னத்தூர் சீநிவாசபிள்ளை 400 பாடலுள்ள ஓலைப் புத்தகங் கொடுத்ததாகவும், அதற்கு முன்னரே அவர் கொடுத்த ஒரு புத்தகத்தில் 120 புதுப் பாடல்கள் அகப்பட்டதாகவும் எழுதியிருக்கிறது. இந்தப் புண்ணியவான்களுக்குத் தமிழுலகம் மிக்க கடமைப் பட்டிருக்கிறது.

**1879**ஹ ஜனவரிமீ 21உ இவர் எழுதின பிரமோத்தரகாண்ட வசனம் (முதற் பதிப்பு) அச்சாகி வெளிவந்தது.

ஏப்ரில்மீ 1௳ முதல் Head clerk and Nazir (எட்குமஸ்தா) வேலையாய்ச் சம்பளம் நூறு ரூபாய் ஆயிற்று. ஜூலைமீ 28௳ எழுதியுள்ள ஒரு குறிப்பாற் காஞ்சீபுர ஸ்தல வாசம் இவருக்கு வெகு ஆசையா யிருந்ததென்று தெரிகிறது. செப்டம்பர்மீ 1௳ ஜட்ஜ் (O. B. Irvine) இர்வின் துரை இவருக்கு முன்சிப் வேலை கொடுக்க வேண்டுமென்று (High Court) ஹைகோர்ட்டுக்கு எழுதினார். எழுதியுமென்ன? வேளைவந்தால் தானே கிடைக்கும்! இது முதல் எட்டுவருஷம் அதிக பிரயத்தினப்பட்ட பின்பே இறைவன் திருவருளால் அவ்வேலை கிடைத்தது. டிசம்பர்மீ 5௳ ஸ்ரீ ஆறுமுக நாவலர் சிவபதவியடைந்ததைக் கேட்டு இவர் பட்ட துயரஞ் சொல்லொணாது. இதைக் குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்.

" He was a noble champion of the Saiva Religion. The best works of Tamil Literature, viz., கந்தபுராணம். . . have seen the light of the day through the exertion of this great personage. His பெரியபுராணவசனம் is a model of Tamil Prose. There has not been such an excellent prose writer as ஆறுமுக நாவலர். [சைவமத ஸ்தாபன சிங்கம். இம்மஹானுடைய பெரு முயற்சியால் தான் தமிழ் மொழியிற் சிறந்த கந்தபுராண முதலிய நூல்கள் தமிழுலகுக்குக் கிடைத்தன. இவர் எழுதிய பெரியபுராண வசனம் நல்ல தமிழ் நடைக்கு இலக்கியமாக உள்ளது. இவரைப்போற் சிறந்த வசன நூலாசிரியர் இது வரையும் யாரும் இல்லை.] சைவநெறி சிறிதும் வழாது நடந்துவந்த மஹாநுபாவராகிய ஸ்ரீ ஆறுமுக நாவலர் சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களைச் சேர்ந்து பேரின்பவாழ்வையடைந்து நித்தியாநந்தத்தி லிருப்பாரென்பதற்கு ஐயமில்லை. 9—12—1879."

1879௵ ஜூலை முதல்தேதி முதல் காலணா கார்ட்டு ஏற்பட்டதும், 1880௵ ஜனவரி முதல்தேதி மணி ஆர்டர்

ஏற்பட்டதும், மிக்க சௌகரியத்தை உண்டுபண்ணின தாக எழுதியிருக்கிறார்.

**1880**ஸு. அக்டோபர் மீ 3உ ஞாயிற்றுக் கிழமை மாலையமாவாசை இவருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்ததைக் குறித்து எழுதுவதாவது:

"By the grace of the Almighty and All merciful God I was blessed with a son at 3-15 this afternoon. I am exceedingly happy and I feel very grateful to the unbounded mercy of God. By His grace only, the child must thrive. [எல்லாம் வல்ல கருணைக் கடலின் திருவருளால் இன்று பகல் 3¼ மணிக்கு எனக்குப் புத்திர பாக்கியங் கிடைத்தது. எனக்குப் பேரானந்தமாய் இருக்கிறது. கடவுளின் எல்லையிலாத இத்திருக்கருணைக்கு மிக்க நன்றியுள்ளவனா யிருக்கின்றேன். அவனருளாலேயே இக் குழந்தை விருத்தி யடையவேண்டும்.] புத்திர பாக்கியமாகிய பெரும் பேறு எனக்குக் கிடைத்தது ஸ்ரீதணிகை யாண்டவருடைய அநுக்கிரகமே."

இந்தக் குழந்தையே எனது தமையனார் ஷண்முகம் பிள்ளை B. A., B. L. இவர் இப்போது (High Court) ஹைகோர்ட்டில் உத்தியோகத்தில் இருக்கிறார்.

**1881**ஸு மார்ச்சு மீ 20உ கருங்குழி ஆறுமுக ஐயர் (வீரசைவர்) 900 பதிகமுள்ள திருப்புகழ்ப் புத்தகங் கொண்டுவந்து உதவினர். நமது சரித்திர கர்த்தா தமிழ்ப் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்து வந்ததாகவுந் தெரிகிறது. ஏப்ரல் 23உ ஜனவிநோதனி என்னும் பத்திரிகையில் தாம் எழுதியனுப்பிய "கிரிசெல்டா என்னும் நன்மனையாட்டி"யின் கதை வெளிவந்ததாக எழுதி யுள்ளார். லீவ் நாள் கிடைத்தபோதெல்லாம் சிவ ஸ்தலங்களையும் திருவிழாக்களையும் வெகு ஆவலாய்த் தரிசித்து வந்தனர். இவர் தரிசித்த முக்கிய ஸ்தலங்களும் உற்சவங்களும்

இவையென அநுபந்தத்திற் காட்டி யிருக்கின்றேன். [அநுபந்தம் I, II]. திருத்தணியிற் சிர் கருணீக ஜாதியர் மடத்தைப் புதுப்பிக்க 1881 ஆம் வருடத்திலேயே இவருக்கு எண்ணம் தோன்றிச் சிலதொகை அனுப்பினதாகத் தெரிகிறது. இவ்வருடம் அக்டோபர்மீ 6உ மஞ்சகுப்பத்தில் ஒரு வீடு வாங்கினுர். அப்போது பின்வருமாறு எழுதியுள்ளார்.

"My object in buying the house is not to settle myself here. I want to live comfortably as long as I am here. My desire is to live in Conjeevaram and die there worshipping Ekámbarêswarar.

[இவ்வூரிலேயே தங்குங் கருத்துடன் நான் இவ்வீடு வாங்கவில்லை. இவ்வூரிலிருக்கும் வரையும் சௌகரியமாக இருப்பதற்கே வாங்கினேன். காஞ்சீபுரத்தி லிருக்கவும் அத்தலத்திலேயே ஸ்ரீஏகாம்பரநாதரைத் தரிசித்திருந்து இறத்தலுமே என் ஆசை.]

**1882**வரு ஜனவரி 11, ஏப்பிரல் 11 தேதிகளில் ஜட்ஜ் (Mr. Nelson) நெல்சன் துரை இவருக்கு முனிசீப் வேலை கொடுக்கவேண்டுமென்று சிபார்ஸ் கடிதங்கள் (High Court) ஹைகோர்ட்டுக்கு எழுதினுர். பிப்ரவரிமீ 5உ திருப்பாதிரிப்புலியூரில் வந்திருந்த திருப்புகழ் சுவாமி எனப்படும் தண்டபாணி சுவாமிகளைப் போய்ப் பார்த்தார். பிப்ரவரிமீ 6உ தாம் வாங்கின புது வீட்டுக்குக் குடிவந்தார். சிவபூஜை வேளையிற் பாராயணம் செய்வதற்கு நன்கு பொருந்திய "தோத்திரத் திரட்டு" என்னும் நூல் மஞ்சகுப்பத்தில் துறவறத்திலிருந்த சதாசிவம்பிள்ளையவர்கள் சொந்த உபயோகத்துக்காக இவ்வருடம் அச்சிடுவித்ததில் இவர் உதவினதாகத் தெரிகின்றது. இப்புத்தகத்தில் அச்சு எழுத்துக்கள் மிகப் பெரியனவாய்ப்

படிப்பதற்கு வெகு நேர்த்தியாயிருக்கின்றன. ஜூலை மீ 15உ இவருடைய மாமனார் காலஞ் சென்றனர். செப்டம்பர் 27உ சிவஸ்தல அகராதி என்று ஒருபுத்தகம் எழுதுவதற்கு வேண்டிய விஷயங்களைச் சேகரிப்பதாகப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"I am collecting information for சிவஸ்தல அகராதி which I intend publishing next December."

[அடுத்த டிசம்பர் மீ வெளியிடும் உத்தேசத்துடன் சிவஸ்தல அகராதி என்னும் நூலுக்கு வேண்டிய விஷயங்களைச் சேகரித்து வருகிறேன்.]

இவ்வெண்ணம் 23 வருடங்கள் கழித்து நிறைவேறினதைப் பின்னர்க் கூறுவோம்.

**1883**வரு ஆகஸ்ட்டு மீ 15உ இரண்டாவது புத்திரனாகிய நான் பிறந்தேன். டிசம்பர் மீ 13உ இவர் தகப்பனார் சாமன்று கூடச் சிவபூஜைசெய்து "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்" என்னும் பாடலைத் தமது பிள்ளைக்கும், மருமகளுக்கும் தேறுதலாகச் சொல்லித் தமது 83-ஆம் வயதிற் சிவபதஞ் சார்ந்தனர். அப்பொழுது தந்தை பிரிவாற்றாது நமது சரித்திர கர்த்தா ஆற்றொணாத் துயரம் அடைந்தனர்.

**1884**வரு பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் முதல் முதல் கூடலூர் முன்சீப் வேலை பதில் பார்த்தார்.

**1885**வரு பிப்ரவரி மீ 28உ கும்பகோண மஹாமக தீர்த்த ஸ்நாநம் இவருக்குக் கிடைத்தது. ஜூன் மாதம் மஞ்சகுப்பந் தேவஸ்தான கமிட்டிமெம்பராக நியமிக்கப்பட்டார். செப்டம்பர் மாதம் மறுமுறை கூடலூர் முன்சீப் வேலை பதில் பார்த்தார்.

**1886**ஹ மார்ச்சுமீ சிதம்பரங் கோயில் வழக்கில் இவர் ஒரு சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார். அதைக் குறித்து 27-3-1886 தேதியில் இவர் எழுதியுள்ளதாவது:

"I was examined as a witness in the சிதம்பரம் Temple Case. I said that I considered சிதம்பரம் to be the most important of all the Saiva shrines and that any unnecessary interference with the சிற்சபை would detract from its sanctity."

[சிதம்பரம் கோயில் வழக்கில் என்னை ஒரு சாக்ஷியாக விசாரித்தார்கள். சிவாலயங்களுக்குள் மிகச் சிறந்தது சிதம்பரம் என்றும், சிற்சபையை அதியவசியமின்றித் தொட்டு வேலை செய்வது அதன் மகிமைக்குக் குறைவுண்டாக்கும் என்றுஞ் சொன்னேன்.]

ஜூலைமீ விழுப்புரத்தில் முன்சிப் வேலை பதில் பார்த்தார். ஆகஸ்ட்டுமீ 13௳ இவருக்கு மூன்றாவது புத்திரர் ஆறுமுகம் பிள்ளை பிறந்தார். இப்பிள்ளை இப்போது சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டில் (Small Cause Court) வேலையிலிருக்கிறார். ஆகஸ்ட்டு 31௳ முதல் டிசம்பர்மீ 13௳ வரையும், பின்பு 1887 ஜனவரி 7௳ முதல் மார்ச்சு 6௳ வரையும், கோர்ட்டு சிரஸ்ததார் வேலை பதில் பார்த்து வந்தார். 1886ஹ டிசம்பர் 12௳ தனது நாற்பத்தோராவது வயது ஆரம்பத்திற் பின்வருமாறு எழுதுகிறார்.

"To-day I begin the 41st year of my life. 40 years are gone! I have not done anything useful or important except the publication of பிரமோத்தரகாண்டவசனம்."

[இன்று எனது நாற்பத்தோராவது வயது ஆரம்பம். நாற்பது வருடங்கள் போய்விட்டனவே! பிரமோத்தர காண்ட வசனம் வெளியிட்டதைத் தவிர உபயோகமான விசேட வேலை ஒன்றும் நான் செய்யவில்லையே!]

**1887**௵ ஆகஸ்ட்டு௴ 26௳ முதல் அக்டோபர் 20௳ வரையும் ஷோளிங்கரிலும் (சோழலிங்கபுரம்-Sholingur), அக்டோபர் 26௳ முதல் **1888**௵ ஜனவரி 12௳ வரையும் திருவள்ளூரிலும், பிப்ரவரி 16௳ முதல் ஏப்ரல் 16௳ வரையும் விழுப்புரத்திலும் முன்சீப் வேலை பதில் பார்த்தார். எவ்வளவோ முறை சென்னைக்குச் சென்று ஹைகோர்ட் (High Court) ரிஜிஸ்ட்ராரையும் ஜட்ஜுகளையும் பார்த்தும் மஞ்சகுப்பத்திலிருந்த ஜட்ஜுகள் ஒவ்வொருவரும் அதிக சிபார்ஸ் செய்துங்கிடையாத முன்சீப் வேலை காயமாயிற்று என்று 1888௵ ஏப்ரல்௴ 25௳ தெரியவந்தது. அன்றையதினம் தமது புத்தகத்திற் பின் வருமாறு எழுதுகிறார்:

"I am glad to learn from the Gazette that I am appointed permanent District Munsif of Namakal in the Salem District. . . . The judge Mr. R. S. Benson said that, although he was sorry I was going away, yet it gave him much satisfaction that I got a promotion and he expressed a wish that by diligence and good work I would rise higher. I thanked him for his kind wishes. Perhaps Mr. Johnson has spoken to Mr. Parker about me when he went to Madras. I am glad that at least after so many disappointments I have been provided with a permanent appointment. I tender my humble and heartfelt thanks to ஸ்ரீதணிகையாண்டவர் for His great Mercy towards me. He alone has been my help and I depend upon Him only."

[சேலம் ஜில்லா நாமக்கல்லுக்குக் காயம் முன்சீபாக உத்திரவு கெஜட்டிற் பார்த்துச் சந்தோஷமுற்றேன். நான் பிரிவது தனக்கு வருத்தமா யிருந்த போதிலும் உயர்ந்த உத்தியோகத்துக்கு

நான் போவது தனக்கு அதிக சந்தோஷ மென்றும், சரிவர வேலைசெய்து மேன்மேலும் உயர்ந்த பதவி நான் அடையவேண்டு மென்றும் ஜட்ஜ் பென்ஸன் துரை சொன்னார். அவருடைய அன்பார்ந்த ஆசீர்வாதத்துக்கு நான் வந்தனங் கூறினேன். ஒருவேளை ஜான்ஸன் துரை சென்னைக்குப் போனபோது என்னைப் பற்றிப் பார்க்கர் துரையிடம் சிபார்ஸ் செய்திருப்பார். இத்தனை நாள் பொறுத்தாவது வேலை காயமாயிற்றே என்று சந்தோஷம். எனக்கு என்றும் பெருந்துணையாகவும் எய்ப்பில் வைப் பாகவும் இருக்கும் ஸ்ரீ தணிகையாண்டவரை என் நெஞ்சங் குளிர வணங்கி வாழ்த்துகின்றேன். அவரே எனக்குக் கதி.]

இவர் மஞ்சகுப்பத்தி லிருந்த பதினெட்டு வருஷ காலத்திற் புதிதாகத் தரிசித்த தேவாரம் பெற்ற ஸ்தலங்கள் நாற்பது.

## (ii) **1888—1891.**

### நாமக்கல் வாசம்.

நாமக்கல் முன்சிப் வேலையை 1888ஆு மேயீ 29உ செவ்வாய்க்கிழமை மேற்கொண்டனர். நாமக்கல்லிற் சிவன் கோயில் ஒன்றும் இல்லாதிருந்தது இறைவனது சோதனை போலத் தோன்றி இவர் மனதுக்குத் துயரம் விளைத்தது. மேயீ 31உ இதைக் குறித்து இவர் எழுதுவதாவது:

"It is strange and it is much to be regretted that in such a large town as Namakal there is not a Siva temple or any சைவ temple. There is a பிள்ளையார் in a shed near the pond; this is all for the Saivas of the place."

[பெரிய ஊராகிய இந்த நாமக்கல்லில் ஒரு சிவன் கோயிலோ சைவக்கோயிலோ இல்லாதிருப்பது ஆச்சரியமாகவும் மெத்த வருத்தத்தைத் தரத்தக்கதாயும் இருக்கிறது. குளக்கரையில் ஒரு பிள்ளையார் இருக்கிறார்; இவரே இவ்வூர்ச் சைவர்களுக்குள்ள மூர்த்தி.]

ஜுன்மீ 1௳ வெள்ளிக்கிழமை பின் வருமாறு எழுதுகிறார் :

"இன்று சுக்கிரவாரமாதலால் இரவில் குளத்தடியிலிருக்கும் பிள்ளையாரைப்போய்த் தரிசித்துவிட்டுப் பின்பு நாமகிரியம்மனை யும் நரசிம்ஹ சுவாமியையும் போய்த் தரிசித்தோம்."

சிவாலயம் இல்லாததால் நாமக்கல்லில் இருந்தவரை யும் வெள்ளிக்கிழமைகளிற் செங்கழுநீர்விநாயகர் என்னுந் திருநாமமுடைய ௸ பிள்ளையாரைத் தரிசித்துப் பின்பு ஸ்ரீ ரங்கநாதரையும் ரங்க நாயகியையும், சங்கர நாரா யணரையுந் தரிசித்து வந்தார். ஆருத்ரா, சிவராத்திரி போன்ற விசேஷ தினங்களில் நாமக்கல்லுக்கு 3 மைல் தூரத்திலுள்ள வல்லிபுரம் என்னும் க்ஷேத்திரத்திற்குச் சென்று சிவதரிசனஞ் செய்துவந்தார். ஜுலைமீ 2௳ இருநூறு ரூபா சம்பளங் கிடைத்தபோது

"I drew my salary Rs. 200 to-day for the first time. I tender my heart-felt and humble thanks to ஸ்ரீ தணிகை யாண்டவர் for His great mercy to me."

[முதல் முதல் சம்பளம் 200 ரூபா வாங்கப் பெற்றேன். ஸ்ரீ தணிகை யாண்டவரின் பெருங் கருணைக்கு அடியேனது மனப்பூர்வ வந்தனம்]

என எழுதியுள்ளார். முன்சீப் வேலை காயமானால் திருவள் ளூருக்கு அடுத்த திருப்பாசூரிலிருக்கும் முருகபிரானுக்கு வேல் செய்து வைப்பதாய்த் தாம் முன்பு சொல்லி யிருந்ததால் அவ்வாறே வேலாயுதம் ஒன்று செய்து செப்டம்பர்மீ சமர்ப்பித்தார்.

**1889**ஆம் ஜனவரிமீ 1௳ மஞ்சகுப்பத்தில் தமக் கிருந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு சிறு மனை வாங்கினார்.

ஜூன் மீ 10௳ தமது மூத்த குமாரத்தி வள்ளிநாயகி யம்மாளுக்கு மஞ்சகுப்பத்திற் கலியாணம் நடத்துவித்தார். ஆகஸ்ட்டு மீ 16௳ தமிழ்ப்பண்டிதர் , சேலம் சரவண பிள்ளையுடைய நட்பு கிடைக்கப் பெற்றார். செப்டம்பர் மீ கிருத்திகை விரதம் இருக்க ஞாபக மறதியால் தவற இறைவன் தமது ஒரு பக்கத்திற் பச்சை மயில் ஒன்றை அணைத்துக்கொண்டு இவர், குடியிருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் இருந்த ஓ ரையங்கார் கனவில் லங்கோடும் முள் மிதியடியும் விளங்க ஒரு பரதேசிபோலத் தோன்றி "நான் பழநியினின்றும் திருத்தணிகைக்குப் போகின்றேன். உன் வீட்டுக்கு எதிர் வீட்டிற் சொல்ல வந்தேன். அவ்வீட்டுக் கதவு சாத்தியிருக்கிறது. நீ அவர்களிடம் போய்த் திருத்தணிகைக்கு அவர்களை வரச்சொல்" எனக் கூறி மறைந்தனர். இக்கட்டளையை யறிந்து அதனைச் சிரமேற்கொண்டு மார்கழி மீ திருத்தணிக்குச் சென்று இறைவனைத் தரிசித்து அவர் பேரருளைச் சிந்தித்து மகிழ்ந்தார். டிசம்பர் 25௳ சிதம்பரத்தில் நடராஜ பெருமானைத் தரிசிக்கப் பெற்று,

"தீபாராதனையின்போது நடராஜரைத் தரிசிக்கையில் என் கன்மனமுங் கசிந்து கண்ணீர் பெருகியது. இது ஆச்சரியம். I count this a very happy day" [இன்று எனக்குச் சுதினம்] —என எழுதியுள்ளார்.

**1890**ஆ பிப்ரவரி மீ 23௳ குறித்துள்ளதாவது:—

"Went and saw the Dt. Judge Mr. Weir this morning. He said he was very much pleased with my work done during the year 1889; also with my finding in the பொம்மல்பாளையம் case which I took great trouble to write. I am glad that he has appreciated my work. He was talking to me very kindly for about 15 minutes."

[இன்று காலை ஜட்ஜ் வியர் துரையைப் பார்த்தேன். 1889 ஆம் வருஷத்தில் நான் செய்த வேலை வெகு திருப்திகரமா யிருக்கிற தென்று அவர் சொன்னார். பொம்மல்பாளையம் வழக்கில் நான் வெகு பிரயாசை எடுத்துக் கொண்டெழுதிய தீர்மானங்கள் வெகு நன்றாயிருந்ததென்றுங் கூறினார். என்வேலை தமக்குத் திருப்தி என்று அவர் சொன்னது எனக்குச் சந்தோஷந் தந்தது. என்னுடன் வெகு ப்ரீதியாய் 15 நிமிஷம் பேசிக்கொண்டிருந்தார்.]

மார்ச்சு மீ 3வ திருப்பாசூர் கோயில் எதிரில் கருங் கல் ஸ்தம்பம் நாட்டி விளக்குவைக்க ஏற்பாடு செய்தார். நாமக்கல் செங்கழுநீர் விநாயகருக்குத் திருமஞ்சனத்துக் காக ஒரு குடம் வாங்கிக் கொடுத்தார். மார்ச்சு மீ 25வ திருப்பாதிரிப்புலியூர் சிதம்பரவாத்தியார் திருப்புகழ் பரிசோதிக்க நாமக்கல்லுக்கு வந்தார். இவ்வாத்தியார் செங்கழுநீர் விநாயகர்மீது நவரத்நமாலை என அருமை யான சிறு நூலொன்றியற்றினார். ஒவ்வொரு மாதமுங் கடைசிச் சனிக்கிழமைக்கு முன் சனிக்கிழமை விடுமுறை யாகும் என நவம்பர் மாதம் 11வ கெஜட்டிற் பிரசுரஞ் செய்யப்பட்டது இவருக்கு ஸ்தலங்கள் தரிசிப்பதற்கு அநுகூலமாயிற்று.

**1891** ஆம் வருஷம் ஏப்ரில்மீ 22வ இவர் வீட்டிற் சேலம் பண்டிதர் சரவணபிள்ளை இயற்பகை நாயனார் புராணம் பிரசங்கித்தார். ஜூன் மீ 5வ மஞ்சகுப்பத்திற் சிதம்பர வாத்தியாரைக் கண்டு திருப்புகழ் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய தொகையை அவருக்குத் தந்து அவரால் முதற்பாகம் செம்மைப் படுத்தப்பட்டது. ஜூன் 12வ திருத்தணி கருணீகர்மடம் மராமத்துக்காக பணம் அனுப்பினார். தமிழ் வாத்தியார் நிலையாய் நாமக் கல்லில் தங்காததால் திருப்புகழ் வெளிவருவது தடை

படுகிறதே என் வருந்தினர். டிசம்பர் கடைசியிற் கும்ப கோணத்துக்கு மாற்றப்பட்டார். நாமக்கல்லை விட்டு நீங்கும் பொழுது பசுவின் கன்று ஒன்றை திருச்செங் கோட்டு அர்த்த நாரீசுரருக்கென விடுத்தனர்.

நாமக்கல்லில் இருந்த காலத்திற் புதிதாகத் தரிசித்த தேவாரம் பெற்ற ஸ்தலங்கள் பதினொன்று.

## (iii) 1892—1894.

### கும்பகோண வாசம்.

**1892**ஞு ஜனவரி மீ 2உ கும்பகோணம் முன்சீப் வேலையை ஒப்புக்கொண்டனர். மார்ச்சு 16உ திருத்தணி மடத்துக்காகப் பின்னும் பணம் அனுப்பினர். மார்ச்சு மீ 20உ ஞாயிற்றுக்கிழமை சிவபுரம் என்னும் ஸ்தலத்தைத் தரிசித்து எழுதுவதாவது:—

"I am glad that there are so many சிவஸ்தலங்கள் near கும்பகோணம் and that I make good use of each Sunday in visiting a temple."

[கும்பகோணத்துக்கருகில் இவ்வளவு சிவஸ்தலங்கள் இருப்பது எனக்கு ஆநந்தமாயிருக்கிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு ஸ்தலமாவது தரிசித்து என் வாழ்நாள் பலன் படுகிறது.]

மே மீ 16உ சேலம் தமிழ்ப்பண்டிதர் சரவணபிள்ளை கும்பகோணம் வந்திருந்து திருப்புகழ் அச்சிடத் தயாராயிருந்தவைகளை ஒருமுறை பார்வையிட்டுத் திருத்த வேண்டுவனவற்றைத்திருத்திப் பெரிதும் உதவினர். மே மீ திருத்தணிக்கு வந்து புத்தூரில் வக்கீலாயிருந்த தமது தமக்கை குமாரன் துரைசாமி பிள்ளையின் உதவியால் கருணீகர் மடம் மேலண்டைபாகங் கட்டி முடிந்ததைப் பார்த்து மகிழ்ந்தார். பிறகு சென்னைக்குவந்து திருப்புகழ் முதற்பாகம் அச்சிடுவதற்கு வேண்டிய ஏற்பாடு

செய்தார். கோடைமாத விடுமுறைகள் தோறும் தாம் உத்தியோகத்தி லிருந்தவரையும் ஒவ்வொரு வருஷமும் திருத்தணிக்கு வந்து சுவாமி தரிசனஞ்செய்து "என் ஆண்டவரைக் கண்குளிரக் கண்டு பேரானந்தம் அடைந்தேன்" எனத் துதித்துள்ளார். சென்னைக்கு வரும்போதெல்லாம் மில்லர்துரை யவர்களைக் கண்டு தமது நன்றி செலுத்தி வந்தார். கிருத்திகை தினங்களில் திருத்தணிதவிர வேறு தலங்கள் தரிசித்தாற் கஷ்டம் நேரிடுவது கற்பகபிள்ளை நாள் முதல் இக்குடும்பத்துக்குத் தெரிந்தவிஷயம் ஆதலால் கும்பகோணத்தி லிருந்தவரையும் கிருத்திகை வாராத லீவ் நாள்களிலெல்லாம் ஏதேனுஞ் சிவஸ்தலங்களுக்குப் போய் வந்தார். ஜுலை௴ முதல் (Third Grade) 250ரூபா சம்பளம் ஆயிற்று. ஒவ்வொரு வருஷமுங் கார்த்திகை கிருத்திகை தோறும் "திருவண்ணாமலை தீபதரிசனம் எனக்கென்று கிடைக்குமோ அறியேன்" என ஏங்குவர். 1892௵ டிசம்பர்௴ 11௳ நந்தன௵ கார்த்திகை௴ 28௳ இவருடைய 47-ஆவது வயது ஆரம்பம். அன்றுமுதல் கந்தரநுபூதி பாராயணம் வைத்துக் கொண்டதைக் குறித்துப் பின் வருமாறு எழுதுகிறார் :

"From the beginning of my 47th age, I have made it a rule to recite some stanzas of கந்தரநுபூதி every day and finish the whole on the last day of the week, so that every week the book is finished once. The book consists of 51 stanzas and I have divided them thus, among the 7 days of the week, commencing from Sunday; 12 stanzas for Sunday, 6 for Monday, 6 for Tuesday, 6 for Wednesday, 6 for Thursday, 7 for Friday and 8 for Saturday. I trust in God that this rule will be carried out till the end of my life. 30-12-1892."

[என்து 47-ஆவது வயதாரம்ப்முதற் கந்தாநுபூதி பாரா யணம் வைத்துக் கொண்டேன். மொத்தம் 51 பாடலில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி, ஞாயிறு 12, திங்கள் 6, செவ்வாய் 6, புதன் 6, வியாழன் 6, வெள்ளி 7, சனி 8 பாட்டல்களாக வாரத்துக் கொருமுறை பாராயணம் முடியும். என் ஆயுள்நாள் முடியும்வரையும் இவ்வழக்கம் தடையின்றி நடைபெறுமாறு கடவுளை வேண்டு கின்றேன்.]

இந்த எண்ணம் வீண்போகவில்லை. இவர் இறுதி நாள்வரை இவ்வழக்கந் தவறாது அநுசரிக்கப்பட்டது.

**1893**வரு சிவராத்திரியன்று இன்னம்பர், புறம்பயம், விஜயமங்கை, வைகாவூர் என்னும் நான்கு பாடல்பெற்ற தலங்களைத் தரிசிக்கப்பெற்ற தமது பாக்கியத்தை நினைந்து ஆநந்தித்தார். மார்ச்சு 31௳ திருவாரூர்த் தேர்த் திரு விழாவைத் தரிசித்ததைக் குறித்து எழுதுகிறார்.

"காலையிற் கமலாலயத்தில் ஸ்நானஞ்செய்து தியாகராஜ ருடைய ரதத்தைத் தரிசித்தோம். இரதம் ஓடுவதையுங் கண் டோம். அது மிகவும் கெம்பீரமாயிருந்தது. திரளான ஜனங்கள் கூடி யிருந்தார்கள். திருவாரூரில் ரதோற்சவதரிசனம் அவசியம் செய்யவேணும். "ஆழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே" என்று அப்பர் சுவாமிகள் திருவாரூர்த் தேரைச் சிறப்பித்துப் பாடி யிருக்கின்றார். 'திருவாரூர்த் தேரழகு' என்று பழமொழியும் உண்டு. சுவாமியின் இரதம் ஓடுவதைக் கண்டபோது என் கன் மனமுங் கசிந்துருகிற்று. ஆராமையுண்டாயிற்று. என் பாக்கியமே பாக்கியம்."

தாம் போய்த் தரிசித்த அநேகதலங்களிற் கோயில்கள் கவனிப்பாரின்றிப் பூஜையற்றுக் கிடப்பதைக் கண் ணுற்று மிக வருந்தினர். ஏப்ரில் மீ 26௳ அரிசிற்கரைப் புத்தூர் என்னுந் தலத்தைத் தரிசித்து எழுதுவதாவது:

"கோயில் மெத்த பரிதாபமான ஸ்திதியிலிருக்கிறது. எல்லாம் இடிந்து கிடக்கிறது. குருக்கள் சிறிதுங் கவனிக்கிறதாகக் காணோம். சண்டேசுர நாயனுருக்குப் பூஜையே கிடையாது. அப்படிப் போட்டு வைப்பது அதி பாதக மென்றும் இது முதல் பூஜை செய்துவரும்படிக்குங் குருக்களிடத்திற் சொன்னேன். கோயிலுக்கு 3 வேலி நிலம் இருக்கிறதாம். தர்ம கர்த்தாவும் இருக்கிறாராம். தருமகர்த்தா இப்படியும் சிரத்தையற்றிருப்பாரா! ஐயோ பாபம்!"

ஜூலை மீ 2வ—

"Saw Mr. Ramasami Ayyangar Sub-Judge of Negapatam. He expressed great satisfaction at the soundness of my judgments."

[நாகபட்டினம் சப் ஜட்ஜ் ராமசாமி ஐயங்காரைப் பார்த்தேன். என் தீர்மானங்களின் நியாயப் பொருத்தத்தைக் குறித்து அவர் மிக மகிழ்ச்சி கொண்டனர்.]

—என எழுதியுள்ளார்.

கும்பகோணம் முன்சீப் வேலை எவ்வளவு உபத்திரவமாயிருக்கும் என்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். இந்த உபத்திரவத்துடன் 1893-ஆம் வருஷம் இவர் 23 பாடல் பெற்ற ஸ்தலங்களை முதல் முறையும் 13 பாடல் இலாத தலங்களையுந் தரிசித்தார்.

**1894** வரு பிப்ரவரி மீ 24வ சிவ சிதம்பர முதலியார் சிவகதி யடைந்ததைக் கேட்டுத் திருப்புகழ் அச்சாகி வரும் வரை அவர் இல்லையே என வருந்தினர். இவ்வருஷம் அடிக்கடி கட்டி முதலிய நோயால் வருந்தினர். திருத்தணிகைத் திருக்குளத்தில் மாலையில் அநுஷ்டானஞ் செய்து குளக்கரையி லிருந்தபடியே சுவாமி கோயிலை நோக்கித் தொழுவது இவருக்கு எப்பொழுதும் பேரானந்தத்தை விளைவித்தது. ஜூன் மீ 2வ—

"சாயரக்ஷை திருக்குளத்தில் அநுஷ்டானம் முடித்துக் கொண்டு அங்கிருந்த படியே சுவாமி கோயிலை நோக்கித் தொழுதேன். இப்படிச் செய்வது எனக்கு அதிக பிரியமாயிருக்கிறது"
—என எழுதியுள்ளார்.

கும்பகோணத்திலிருந்த காலத்தில் இவர் புதிதாகத் தரிசித்த தேவாரம் பெற்ற ஸ்தலங்கள் நாற்பத்தாறு.

## (iv) **1894—1897.**

### திருத்தருப்பூண்டி வாசம்.

கும்பகோணத்திலிருந்து திருத்தருப்பூண்டிக்கு மாற்றப்பட்டு 1894ஹு ஜூன்மீ 19உ அங்கு வேலையை ஒப்புக்கொண்டார். அவ்வூரில் ஒரு சிறு பள்ளிக்கூடமே இருந்தமையால் என்னையும் என் தமையனையும் திருவாரூருக்குப் படிக்க அனுப்பினர், நவம்பர் 3உ—

"இன்றிரவு சூரசம்ஹார உற்சவம் நடந்தது. கந்தபுராணம் வாசித்து வருகையில் இன்று சரியாய் சூரன் வதைப்படலம் படித்து முடிக்க நேர்ந்தது. இது ஆச்சரியம்"
—என எழுதியுள்ளார்.

**1895**ஹு ஏப்ரில்மீ 9உ திருப்புகழ் முதற்பாகம் பயிண்டாகிச் சென்னையிலிருந்து பிரதிகள் திருத்தருப்பூண்டிக்கு வந்தன.

"24-வருஷத்துக்குமுன் ஆரம்பித்த வேலை முடிய இந்தக் காலஞ் சென்றது. இப்போதும் பாதிதானே ஆயிற்று"
—என வருந்தி எழுதியுள்ளார். தேவஸ்தானத்தார் விருப்பத்தின்படி திருத்தருப்பூண்டி மான்மியம் என்னும் புத்தகம் எழுதிவந்தார். ஏப்ரில்மீ 15உ அதைக் குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளார்:

I am writing in easy Tamil prose the ஸ்தலபுராணம் of திருத்தருப்பூண்டி which is called வில்வாரணிய க்ஷேத்திரம். It consists of 40 chapters * * I have finished 10 chapters. After the whole is finished, the work is to be printed at the cost of the temple."

[வில்வாரணிய க்ஷேத்திரம் எனப்படும் திருத்தருப்பூண்டி ஸ்தல மான்மியத்தை எளிய வசன நடையில் எழுதி வருகின்றேன். நாற்பது அத்தியாயங்களுள்ளன. பத்து அத்தியாயம் எழுதி முடிந்தது. முழுதும் முடிந்ததும் கோயிற் செலவிற் புஸ்தகம் அச்சிடப்படும்.]

ஏப்ரில் 22உ சேலம் தமிழ்ப்பண்டிதர் சரவணபிள்ளை திருத்தருப்பூண்டிக்கு வர அவரால் திருப்புகழ் ஏனைய பாடல்களையும் இவர் பரிசோதிப்பித்தார். இவரதுவேண்டு கோளால் திருவாரூர்ப் புராணம் அச்சிடப்பட்டது. மேமீ 12உ—

"Saw வடபாதிமங்கலம்—சோமசுந்தர முதலியார் and presented him with a copy of the திருப்புகழ். He gave me 2 copies of திருவாரூர்ப் புராணம் which he has published at my suggestion."

[வடபாதிமங்கலம் சோமசுந்தர முதலியாரைப் பார்த்துத் திருப்புகழ்ப் பிரதி ஒன்று தந்தேன். என் வேண்டுகோட்கிணங்கி அவர் அச்சிட்ட திருவாரூர்ப் புராணம் இரண்டு பிரதிகள் அவர் எனக்குத் தந்தார்].

—என எழுதியுள்ளார். ஆகஸ்ட்டுமீ 16உ "கற்பூரம் பலம் $3\frac{1}{2}$ அணா சொல்லுகிறார்கள். அந்த விலைக்கும் அகப்பட வில்லை. இது என்ன ஆச்சரியம்" என்றெழுதி யிருக்கிறார்கள். இப்போது பலம் ஒரு ரூபாயுஞ் சொல்லு கிறார்களே. இதை என்ன என்று சொல்லுவது!

**1896**ஸ் ஜனவரிமீ 6உ முதல் (300 ரூபா சம்பளத்தில்) இரண்டாவது கிரேட் முன்சீபாகப் பதில் பார்த்து வந்தார். ஏப்ரில் 20உ திங்கட்கிழமை புதிதாகக் கட்டி முடிந்த கட்டடத்திற் கோர்ட்டுவேலை ஆரம்பித்தார். அம்மாதம் அங்கு வந்த பண்டிதர் சரவணபிள்ளையுடன் சென்று எட்டிகுடி சித்ரா பௌர்ணமி உற்சவந் தரிசித்தார். ஜூன்மீ 4உ திருத்தணி கோயில் பலிபீடத் தருகில் தளவரிசை செய்வதற்குங் கருணீகமடத்துக் கிணற்றைப் பழுதுபார்ப்பதற்கும் பணம் அனுப்பினார். அக்டோபர்மீ 29உ கும்பகோணம் நாகேச்ரஸ்வாமி கோயில் அம்மனுக்கு வெள்ளி ஒட்டியாணஞ் செய்து சமர்ப்பித்தார்.

**1897**ஸ் பிப்ரவரிமீ 21உ வேதாரணியத்திற் பண்டாரசந்நிதி யவர்களைப் பார்த்து அவ்வூர் ஸ்தல புராணம் அச்சிடும்படி செய்வித்தார். வேதாரணியத்தைத் தரிசித்து—

" திவ்விய தரிசனம்; மனதுக்கு மிகவும் ஆநந்தமாயிருந்தது- முக்கியமாய் வேதாரணியேசுர ஸ்வாமி சந்நிதி மிக மகிமையுள்ளதாய் விளங்குகிறது. எதிர் பாராமலிருந்தபோது வேதாரணியேசுரர் என்னைத் தம்மிடம் வலுவிலிழுத்து அவருடைய அருமையான தரிசனத்தைத் தந்தது அவருடைய பெருங்கருணைத் திறத்தைக் காட்டுகிறது "

—என மகிழ்ந்து எழுதியுள்ளார். ஏப்ரில்மீ 21உ

" இந்த ஊர் (திருத்தருப் பூண்டி) ஸ்தலபுராணம் வசனமாக நான் எழுதியது அச்சாய் வந்துவிட்டது. இந்தச் சிறு நன்மையாவது நான் செய்யும்படி நேர்ந்தது சந்தோஷமாயிருக்கிறது. The book was printed at the cost of the temple. The temple people gave me 15 copies for my use and for

distribution to my people." [கோயிலார் செலவில் அச்சிடப்பட்டது. கோயிலார் எனக்கு 15 காபிகள் கொடுத்தார்கள்].

எனக் குறித்துள்ளார். மேமீ 1௳ திருமங்கலம் முன்சீபாக மதுரைக்கு மாற்றப்பட்டதைக் கேட்டு எழுதுகிறார்:

"I received intimation to-day that I am transferred to திருமங்கலம், Madura District, with effect from the 5th July 1897. The திருமங்கலம் court is held at மதுரை only. The place is far off but I am glad that I am sent to a very important சிவஸ்தலம் where I can worship God to my heart's content and see his grand festivals to my eyes' content. [மதுரையில் உள்ள திருமங்கலம் முன்சீபாக மாற்றியிருப்பதாக உத்தரவு கிடைக்கப்பெற்றேன். மதுரை தூரமாயிருந்த போதிலும் மஹா சிவக்ஷேத்திர மாதலின் எனக்கு அங்குப்போவது சந்தோஷம். எம்பெருமானையும் அவர் விசேஷ உற்சவங்களையும் என் மனமுங் கண்ணுங் குளிரத் தரிசிக்கும்படியான பாக்கியமும் எனக்குக் கிடைக்கிறதே!] எல்லாம் சிவபெருமானுடைய திருவருளே."

இவர் முன்சீபாயிருந்த ஒவ்வொரு ஊரிலும் இருந்த ஜனங்கள் இவர் மாற்றப்பட்டு வேறு ஊருக்கு வரும் சமயத்தில் மிக்க வருந்தினர்கள். மதுரைக்கு மாற்றப்பட்டபொழுது திருத்தருப்பூண்டி வக்கீல்கள்கூடி இவர் கோர்ட்டில் இருப்பதுபோல ஒரு படம் பிடித்தார்கள். ஊரில் உள்ள நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் கூடிக் கோயிலில் எல்லா சுவாமிகளுக்கும் அபிஷேகஞ் செய்வித்தார்கள். சிலர் சிவபுராண பிரசங்கங்கள் வைத்தார்கள். ஒருவர் ருக்மணி கலியாணம் பாகவதரைக் கொண்டு பிரஸங்கஞ் செய்வித்தார். புறப்படுஞ் சமயத்தில் திருத்தருப்பூண்டி ரெயில்வே ஸ்டேஷனில் இவருக்கு மாலை

யிட்டுப் பிடித்த படமே இப்புத்தகத்தின் முதலிற் சேர்க்கப் பட்டிருப்பது.

திருத்தருப்பூண்டியி லிருந்த காலத்திற் புதிதாகத் தரிசித்த தேவாரம்பெற்ற ஸ்தலங்கள் ஐம்பத்தைந்து.

## (v) 1897—1898.

### மதுரை வாசம்.

1897 ௵ ஜூலைமீ 2உ மதுரை வந்து சேர்ந்தார். இங்கு அதியற்புதமான ராகத்துடன் திருப்புகழ் பாடுந் திறமைவாய்ந்த பேறையூர் ஜமீன்தார் நாகையசாமி தும்பிச்சி நாயகரவர்களுடைய நட்பு நவம்பர் 19உ இவருக்குக் கிடைத்தது. டிசம்பர்மீ 1உ இரண்டாவது க்ரேட் காயமாயிற்று.

**1898**௵ ஜனவரிமீ 9உ ஜட்ஜ் (T. M. Horsfall) ஆர்ஸ்பால் துரையைப் பார்த்தார். அப்போது இவர் எழுதியுள்ளதாவது :

"He told me that in reading the notes of evidence in an appeal case he recognised my hand-writing which was quite legible. He said that my writing was very good."

[ஒரு அப்பீல் கேஸ் தன்னிடம் வந்ததில் நான் எழுதின வாக்கு மூலக் குறிப்புக்களைக்கண்டு என் கை யெழுத்தைத் தெரிந்து கொண்டதாகவும் என் கை யெழுத்து வெகு தெளிவாக வும் நன்றாகவும் இருக்கிறதென்றும் ஜட்ஜ் சொன்னார்.]

தமிழ்ப் பண்டிதர் சிவசிதம்பர முதலியாரியற்றிய "நாமக்கல் செங்கழுநீர் விநாயகர் நவரத்நமாலை" என்னும் நூல் பிப்ரவரிமீ மதுரையில் இவரால் அச்சிடப்பட்டது. அபிஷேகத்துக்குப் பால், தயிர் வைப்பதற்காக ஐந்து வெண்கல கிண்ணங்கள் செய்வித்துத் திருவேடகந்

கோயிலுக்கு மார்ச்சு மீ 4வ அனுப்பினார். இந்த அற்ப தருமமாவது செய்யும்படி சுவாமி அருள் செய்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன் என்றெழுதியிருக்கிறார். மார்ச்சு மீ 12வ சனிக்கிழமை இவருடைய குமாரத்தி மங்களநாயகியம்மா மதுரையிற் சிவபதமடைந்தனர். அப்பொழுது இவர் வருந்தி எழுதியதாவது:

"'நமச்சிவாய வாழ்க' என்னும் திருவாசகம் படித்துச் 'செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரு மேத்தப் பணிந்து' என்று முடிக்கும்போது அவள் பிராணன் போய்விட்டது. சுவாமியிடத்தில் அவளுக்கு உறுதியான பத்தி. மெத்த நெறியானவள். அவள் சுவாமியினுடைய திருவடியைச் சேர்ந்தாள் என்பதிற் சந்தேகமில்லை. அவள் சுகப்பட்டு விட்டாள். We are plunged in grief. Our sorrow is inexpressible. [நாங்கள் துக்க சாகரத்தில் முழுகினோம். எங்கள் துயரஞ் சொல்ல ஒண்ணாது.] என் செய்வேன்! விதியை விலக்க வல்லார் யார்?"

இறந்த நாள் ஞாபகக் குறிப்புக்காகப் பின்வரும் வெண்பா இவர் இயற்றியுள்ளார்.

'ஏவிளம்பி மாசி யிறுதிமுப்ப தாந்தேதி
பாவுசனி வாரமிருட் பஞ்சமியில்—மேவு
விசாகமதில் மங்களமா மெல்லி தணிகை
விசாக னடிமே வினாள்.'

இந்தத் துக்கத்தினாலும் விதிப்பயனாலும் மே-ஜூலை மாதங்களில் இவருக்கு உடம்பு மெத்த பலஹீனப்பட்டு வந்தது. ஜூன் 18வ எழுதுகிறார்.—

"Penultimate Saturday (மூன்றாஞ் சனிக்கிழமை). அமாவாசை. இன்றும் நாளையும் கோர்ட்டில்லை; வேலையுமில்லை. இருந்தும் வெளியே போகக்கூடாத ஸ்திதியி லிருக்கிறேன். தேகம் அவ்வளவு துர்ப்பலமாயிருக்கிறது. இது என்ன பாபம்.

காலம் வீணாய்க்கழிகிறது. உடம்பு நல்ல ஸ்திதியிலிருந்தால் திருப்பூவணத்துக்கும் திருவாதவூருக்கும் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து வருவேன்."

பின்பு நோய் அதிகரித்து உணவு குறைந்து கொண்டே வந்தது. ஜனவரி 29உ—

"The pain in the leg has increased a good deal and my suffering is inexpressible [கால்நோய் மிக அதிகரித்து வலி அசாத்தியமா யிருக்கிறது]. நடக்கவே முடியவில்லை. என் வேதனை என்று தீரும்! சுவாமீ! பட முடியவில்லையே"

—எனத் துக்கித்துள்ளார். ஜூலை 21உ முதல் மூன்று மாதம் லீவ் வாங்கிக் கொண்டார். உத்தியோகத்துக்கு வந்தது முதல் இதுவரையும் (Casual leave தவிர வேறு) லீவே வாங்கினதில்லை. நோய்க்குக் காரணம் வயிற்றில் வலது பக்கத்திற் சீ கட்டிக்கொண்டிருப்பதென்று முனிசிபல் ஆஸ்பத்திரி வைத்தியர் சாமிநாதபிள்ளையவர்கள் கண்டுபிடித்து அதற்கு வேண்டிய சிகிச்சை செய்து ஜூலை 31உ மயக்கங் கொடுத்து கட்டியைக்கீண்டு சீயை வெளிப்படுத்தி நோயை நீக்கிச் சௌக்கியப்படுத்தினார். இந்தப் புண்ணியவானுக்கு எங்கள் குடும்பம் மிகக் கடமைப்பட்டிருக்கிறது. அக்டோபர் 21உ லீவ் முடிய கோர்ட் வேலையை ஒப்புக்கொண்டார். டிசம்பர் 8உ இவருடைய தமையனார் சிதம்பரபிள்ளை இறந்துவிட்டதாகத் தந்திவந்து ஆறாத்துயரம் அடைந்தனர். டிசம்பர் கடைசியில் மதுரையிலிருந்து மாயூரத்துக்கு மாற்றப்பட்டதாக உத்தரவு வந்தது.

மதுரையிலிருந்த காலத்தில் இவர் புதிதாய்த் தரிசித்த தேவாரம் பெற்ற ஸ்தலங்கள் நான்கு.

இவர் அடிநாள் முதல் எழுதிவந்த தின நிகழ்ச்சிக் குறிப்பு என்னும் புத்தகங்களில் (Diaries) ஒவ்வொரு வருஷமுடிவிலும் அவ்வருஷத்திய நிகழ்ச்சிகளின் சுருக்கம் ஒன்று எழுதியுள்ளார். அவை "General (பொது விஷயம்)," Official (உத்தியோக விஷயம்), New Shrines visited (புதிதாய்ப் பார்த்த பாடல்பெற்ற ஸ்தலங்கள், பாடலில்லாத ஸ்தலங்கள்), Shrines revisited (மறுமுறை பார்த்த ஸ்தலங்கள்), Births in the year (பிறப்புக் குறிப்பு), Deaths (இறப்புக் குறிப்பு), Marriages (கலியாணங்கள்), Family affairs (குடும்ப விஷயங்கள்), Conclusion (முடிவுரை-தெய்வ வணக்கம்) என்னும் பகுப்புக்களின் கீழ் எழுதப்பட்டுள்ளன. இப்பகுப்புக்களுள் "முடிவுரை-தெய்வவணக்கம்" என்னும் பகுப்பின் கீழ்த் தாம் அபாயகரமான நோயினின்றுங் கடவுளினாற் காக்கப் பட்ட 1898-ஆம் வருட முடிவுரை இவர் எழுதியதை அன்பர்கள் காணக் கீழ் எடுத்துக் காட்டுவது பொருத்த மெனத் துணிந்தேன்.

" CONCLUSION: I conclude this summary with offering my humble and heartfelt thanks to my Lord ஸ்ரீ தணிகை யாண்டவர் for saving me from the jaws of Death. I take shelter under His Holy Feet. I hope that next year will be a better year and that by His Grace I shall be able to visit more சிவஸ்தலங்கள், although this year I was able to visit only one (திருப்பூவணம்) and that at the end of the year. [இயமன் வாயினின்றும் என்னை மீட்டதற்காக எனது கடவுள் ஸ்ரீ தணிகை யாண்டவருக்கு என் வணக்கமும் நன்றியுங் கூறி இவ்வருட நிகழ்ச்சிச் சுருக்கத்தை முடிக்கின்றேன். அவர் பொன்னார் திருவடியே எனக்குச் சரணம். அடுத்த வருஷம் நல்ல வருஷமாயிருந்து அவாருளால் அதிக சிவஸ்தலங்களைத்

தரிசிக்கும் பாக்கியங் கிடைக்க வேண்டுகின்றேன். இவ்வருஷம், அதுவும் வருஷமுடிவில், ஒரே ஒரு ஸ்தலந்தான் (திருப்பூவணம்) தரிசித்தேன்.] திருத்தணிகேசன் திருவடிகளே சரணம்."

## (vi) **1899—1901.**

### மானாமதுரை வாசம்.

மதுரையை விட்டு 1898 ஆடு டிசம்பர் மீ கடைசியில் நீங்கி, 31 உ திருப்பூவணத்தைத் தரிசித்து, **1899** ஆடு ஜனவரி மீ 2 உ மானாமதுரை வந்து சேர்ந்தார். 1899 ஆடு பிப்ரவரி மீ தமது மூத்த குமாரன் ஷண்முகம்பிள்ளை மதுரையில் F.A. பரீக்ஷை தேறினதும் சென்னையில் தாம் வாசித்திருந்த மில்லர் கலாசாலையிலேயே அவரையும் படிக்கும்படி அனுப்பினார். மில்லர் துரையும் தம் மாணாக்கனுடைய குமாரன் தங் கீழ்ப்படிக்க வந்ததற்கு நிரம்ப சந்தோஷப்பட்டார். நானும் என் தம்பியும் மதுரையிலேயே [Native College-ல்] படித்து வந்தோம். ஏப்ரில் மீ திருச்சுழியல் என்னும் ஸ்தல தரிசனத்துக்காகப் போயிருந்தபொழுது திருப்புகழ் ஓலைப்புத்தகத்துக்காக வழக்கம்போல விசாரித்ததில் திருவுத்தரகோசமங்கை மங்களேசுரி பிள்ளைத்தமிழ் என்னும் நூல் கிடைக்கப் பெற்று,—

"In making enquiries for திருப்புகழ் cadjan books I was able to get மங்களேசுவரி பிள்ளைத்தமிழ். மங்களேசுவரி is the name of the Goddess at திருவுத்தரகோசமங்கை. [திருப்புகழுக்காக விசாரித்ததில் மங்களேசுவரி பிள்ளைத் தமிழ் கிடைத்தது. 'மங்களேசுவரி' திருவுத்தரகோசமங்கைத் தேவியார் திருநாமம்.] வாக்கு நன்றா யிருக்கிறது. I must go through it and see if I can print it. It is a good acquisition. [பார்த்து அச்சிடலாமா என யோசிக்கிறேன். இது கிடைத்தது பாக்கியமே."]

—என எழுதியுள்ளார். என்னைக்குறித்து எந்தையார் எழுதியுள்ள ஒரு விஷயத்தை, அவருக்கு என்மீதிருந்த அன்பின் அளவைக் காட்டுதற் பொருட்டு, இங்கு எழுத விரும்புகிறேன்.

"11—8—1899. The Dt. Collector Mr. Partridge has presented a watch to செங்கல்வராயன் for writing the best essay on the advantages of foreign travel. I am very happy to hear this news. Chengalvarayan is very hard-working and God helps him." ["வெளி நாட்டுப் பிரயாணங்களின் நன்மை" என்னும் விஷயத்தைக் குறித்து நல்ல வியாசம் எழுதினதற்காக டிஸ்டிரிக்ட் கலெக்டர் பார்ட்ரிட்ஜ் துரை செங்கல்வராயனுக்கு ஒரு கடிகாரம் இனும் தந்தனர். இவ்விஷயங் கேட்க எனக்கு வெகு ஸந்தோஷமா யிருக்கிறது. செங்கல்வராயன் மிகக் கஷ்டப்பட்டுழைக்கின்றான். அவனுக்குத் தெய்வந் துணை செய்கின்றது.]

டிசம்பர் 13௳ சேலம் பண்டிதர் சரவணபிள்ளை வந்திருந்து திருப்புகழ் இரண்டாம் பாகத்துக்கு வேண்டிய பாடல்களைப் பரிசோதித்து 30௳ சேலம் சென்றார். அப்போது அவர் பாடின சிறப்புப்பாயிரம் மிக அருமையானது. படிக்க மிக இனிமையாயிருக்கும். அநுபந்தம் IV—காண்க. டிசம்பர்மீ 18௳ மாறுமதுரையில் ஆருத்ரா தரிசனஞ் செய்து பின்வருமாறு எழுதுகிறார் :

"இன்று ஆருத்ரா தரிசனம். கோயிலுக்குச் சென்று நடராஜரையும் சிவகாமியம்மையையும் தரிசித்தோம். அடியார் கூட்டம் அதிகமாயிருந்தது. கொடும்பாவியாகிய எனக்கும் இந்தப் புண்ணியதினத்திலே இப்படிப்பட்ட திவ்யதரிசனம் கிடைத்ததே என்று என் கல்மனமும் உருகிக் கண்ணீரும் பெருகிற்று. எல்லாம் சிவன் செயலே. சிவாநுக்கிரகமே."

தாங் கேட்டுக்கொண்டபடி மதுரைக்கோயில் கீழைக் கோபுரத்தில் **1900**ஸு பிப்ரவரிமீ 16உ முதல் தீபம் ஏற்றிவருகிறார்க ளென்றும் மற்றைக் கோபுரங்களிலும் சீக்கிரத்தில் தீபம் ஏற்றப்படும் என்றும் பெருமகிழ்ச்சி யுடன் பிப்ரவரிமீ 19உ எழுதி யிருக்கின்றார். ஏப்ரில்மீ 21உ திருப்புகழ் இரண்டாம் பாகத்துப் பாடல்கள் சென்னைக்கு அச்சிட அனுப்பினார். மேமீ 20உ மதுரைக்கு வந்தபோது நாலுகோபுரங்களிலுந் தீபம் வைத்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். குருசாமி சாஸ்திரி யார் என்பவரை வைத்துக்கொண்டு வடமொழியிலிருந்த திருப்புனவாயில் ஸ்தல புராணத்தைப் படித்து முடித்ததாக செப்டம்பர்மீ 2உ எழுதி யிருக்கிறார். அதை வசன ரூபமாக இவர் எழுதி வைத்ததிற் சிலபாகங்கள் இன்னும் இருக்கின்றன. எங்கேயாவது சிவலிங்கமோ பிள்ளை யாரோ கவனிப்பாரின்றி வெயிலில் இருந்தால் அம் மூர்த்திக்கு ஒரு கொட்டகையாவது போடும்படி செய் விப்பது இவர் வழக்கம். மானாமதுரை சிவன்கோயில் கோபுரத்திலும் விளக்கு வைக்கும்படி ஏற்பாடு செய்தார். அதற்காகக் கோபுரத்துத் திண்ணையிலிருந்து முதல் நிலைக்கு ஏறுவதற்குப் பலமான மர ஏணி ஒன்று செய் வித்தார். டிஸ்டிரிக்ட் ஜட்ஜுக்கு எழுதி விநாயக சதுர்த்திக்கு லீவ் விடும்படி செய்தார்.

**1901**ஸு ஜனவரிமீ உத்தரகோசமங்கைக்குப் போயிருந்தபொழுது உத்தரகோசமங்கை பிள்ளைத்தமிழ் ஓலைப்புத்தகம் பிறிதொரு பிரதி கிடைத்தது. டிசம்பர் 11உ முதல் பென்ஷன் என்று பிப்ரவரிமீ 18உ உத்தரவு வந்தது. அப்போது இவர் எழுதினது கவனிக்கற்பாலது.

"18 February 1901. Received intimation that I should retire from 11th December next, as I would then complete my 55th year. I am glad that I shall soon be relieved of all official cares and that I can, with God's blessing, devote my time to Him and His Works." [ஐம்பத்தைந்தாவது வயது முடிகின்ற அடுத்த டிசம்பர் 11௳ முதல் பென்ஷன் என்று உத்தரவு இன்று வந்தது. ஆபீஸ் வேலைகள் நீங்கிக் கடவுளருளால் என் முழுப்பொழுதையும் அவருக்கும் அவர் திருப்பணிக்குஞ் செலவிடக்கூடுமெனக் களிக்கின்றேன்.]

இவ்வருட ஆரம்பத்தில் நானும் என் தம்பியும் சென்னைக்கு வந்து மில்லர் ஸ்கூலிற் சேர்ந்தோம். பிப்ரவரி 24௳ மானாமதுரைக்குச் சமீபத்திலுள்ள இளையான்குடி மாறநாயனார் ஸ்தலமாகிய இளையான்குடியைத் தரிசித்ததாகவும், நாயனார் நெல்வாரிவந்து சுவாமிக்கு அமுதளித்த புலம் சாகுபடியில்லாமல் இரண்டு வெற்றிலைத் தோட்டங்களின் நடுவில் இருக்கிறதாகவும், கால் காணிக்குங் குறைவான சிறுபுலம் எனவும், குருக்களுக்குச் சொந்தம் எனவும், அதற்கு "முளைவாரி அமுதளித்த நாற்றங்கால்" என்பது பெயர் எனவுங் குறித்துள்ளார். மேமீ 27௳ திருவுத்தரகோசமங்கை மங்களேசுரி பிள்ளைத்தமிழ் அச்சாகி வெளிவந்தது. இம்மாதம் சென்னையில் லிங்கசெட்டித் தெரு 292-ஆம் நம்பர் வீட்டை வாங்கினார். ஜூன்மீ மானாமதுரை ஸ்தலபுராணம் இவரால் வசனரூபமாக எழுதி முடிந்தது. அம்மாதந்தான் இராமேசுர தரிசனம் இவருக்குக் கிடைத்தது. செப்டம்பர்மீ 15௳ மானாமதுரை சோமநாத சுவாமி கோயிலில் அநேக காலமாக பிரதிஷ்டையில்லாமலிருந்த நடேசமூர்த்தி சிவகாமியம்மை விக்கிரகங்கள் (சிலை) இவருடைய முயற்சியாற் பிரதிஷ்டை செய்யப்பட்டன. டிசம்பர்மீ 11௳ பென்ஷன்

வாங்கிக்கொண்டார். அச்சமயத்தில் இவர் எழுதிய வானரமதுரை ஸ்தலபுராண வசனம் அச்சாகி வந்தது. அப்புத்தகத்தை அநேகருக்கு இனாங் கொடுத்து, அவ்வூரா ரெல்லாம் இனி இத்தகைய புண்ணியவானைக் காண்ப தென்றோ என இரங்க, அத்தலத்து வீற்றிருக்கும் ஸ்ரீ ஆநந்தவல்லியையும் சோமநாதரையும் வணங்கி விடை பெற்றுக்கொண்டு, ஊரினின்றும் 12உ நீங்கி, வழியில் திருப்பூவணநாதனையும், மதுரை மீனாக்ஷிசுந்தரேசுரரையுந் தரிசித்து, திருப்பாதிரிப்புலியூர்வந்து ஸ்ரீ பாடலீசுரருக்கும் பெரியநாயகி யம்மைக்கும் அபிஷேகஞ் செய்வித்துச், சென்னையில் தமது சொந்த வீட்டுக்கு 29உவந்து சேர்ந்தார்.

மானாமதுரையி லிருந்தகாலத்தில் இவர் புதிதாகத் தரிசித்த தேவாரம் பெற்ற ஸ்தலங்கள் எட்டு.

சிவஸ்தலத்தில் உத்தியோகங் கிடைக்காதா என விரும்பின இவருக்குக் கடவுள் சிவன் கோயில் இல்லாத நாமக்கல்லில் முதலில் வேலை கொடுத்தார்.

> "மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
> எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
> கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
> பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்."

என்னும் ஆன்றோர் வாக்கு பொய்யாகா வண்ணம் 3½-வருஷம் நாமக்கல் செங்கழுநீர் விநாயகரைத் தரிசித்து வணங்கினதின் பலனால் அன்றே பின்னர்ச் சோழநாட்டிலும் பாண்டிநாட்டிலும் வேலை கிடைக்கப்பெற்று அநேக சிவஸ்தலங்களையும் திருவிழாக்களையும் கண்ணுறும்படியான பாக்கியம் இவருக்குக் கிடைத்தது!

## III. கடைநாட் பருவம்.

## 1902—1909.

இளைப்பாறவேண்டிய தமது ஈற்றுக் காலத்தில் நோய் எனும் பகைவன் கொண்டொழிந்த நாள்கள் போக ஏனைய காலமெல்லாம் இறைவன் திருப்பணிக்கே இவர் எண்ணியவாறே செலவழித்தனர். இவர் பென்ஷன் வாங்கின பிறகு புதிதாகத் தரிசித்த பாடல்பெற்ற ஸ்தலங்கள் 3; பாடல்பெற்ற ஸ்தலங்கள் 274 க்கு இவர் 176 ஸ்தலங்கள் பார்த்திருப்பதாக ஏற்படுகிறது. இங்கு இவருடைய ஒழுக்க விசேஷத்தைக் குறித்து எழுதுவது மிகப் பொருத்தமாம். அதிகாலையில் எழுந்து வெளியில் உலவி வந்து திருநீறிட்டுக் கந்தரநுபூதி பாராயணஞ் செய்து தேவாரப் பதிகம் படித்துப் பின்பு ஏதேனும் சிவபுராணம் படிப்பார். 8 மணி முதல் 10 மணிவரை உத்தியோகத்திலிருந்தபொழுது கோர்ட்டு வேலையும் பென்ஷன் வாங்கின பிறகு சிவ நூலாராய்ச்சியுஞ் செய்து வந்தார். ஸ்நாநஞ் செய்து அநுஷ்டானம் விநாயகபூஜை முடித்துத் திருத்தணிகேசர் படத்துக்குத் தீபாராதனை செய்து கந்தபுராணம் படித்துப் பிறகு சாப்பிட்டு 11 மணிக்குக் கோர்ட்டுக்குப் போவார். பென்ஷன் வாங்கின பிறகு திருப்புகழோ சிவஸ்தலமஞ்சரியோ இவைகளுக்கு வேண்டியதை ஆராய்ந்து வந்தார். மாலையில் அநுஷ்டானம் செய்து தேவாரம் முதலிய படித்துச் சிவாயலத்துக்குச் சென்று இரவு 8 மணிக்குப் போஜனம் முடித்துக் கொண்டு நித்திரைக்குப் போவதன் முன் "சிவகவசம்" சொல்லிவிட்டு உறங்குவர். அடிநாள்முதல் கடைநாள் வரை தினநிகழ்ச்சிக் குறிப்பும் (Diary) வருவாய் செலவுக் கணக்கும் (Account Book) செம்மையாய் எழுதி

வைத்துள்ளார். பொடிபோடுதல் முதலிய வழக்கங்கள் இவரிடங் கிடையா. எவருடனும் மெதுவான குரலில் திருத்தமான தமிழிற் பேசுவார். பொறுமை, வாய்மை முதலிய சகல நற்குணங்களும் நிரம்பி யாவராலும் நடைச் சிறப்புக்கும் பத்திப் பெருக்குக்கும் பெரிதும் மதிக்கப் பட்டார்.

**1902**வரு ஜனவரிமீ, திருப்புகழ் இரண்டாம்பாகம் வெளிவந்தது. காஞ்சீபுரத்தில் தமது மிகுதிக்காலத்தைக் கழிக்க இவருக்கு அதிவிருப்பம். தகுந்த வீடு கிடைக் காததாலும், அடிக்கடி சுவாமி தரிசனஞ்செய்யத் திருத் தணிக்கும், பிள்ளைகளைப் பார்க்கச் சென்னைக்கும் வர வேண்டி யிருக்குமென்பதாலும், பென்ஷன் வாங்குதலை மாத்திரம் காஞ்சீபுரத்தில் வைத்துக்கொண்டு பன்னாள் திருத்தணியிலும் சின்னாள் சென்னையிலும் பென்ஷன் வாங்குந் தினங்களிற் காஞ்சியிலுமாகக் காலங்கழித்து வந்தார். ஜனவரி 17வ சித்தூர்ஜில்லா புத்தூர் சிவன் கோயிலுக்கு ஒரு வெண்கல விபூதி மடல் வாங்கிக் கொடுத் தார். ஜனவரிமீ முதல் திருத்தணியிலேயே தங்கிப் பலநாள் முயற்சி செய்துவந்த கருணீக மடங் கட்டு வித்தலைத் தொடங்கி முடித்தனர். மார்ச்சுமீ 28வ சென்னைக்கு வந்தபோது டாக்டர் மில்லர் துரையும், இவரும், பிள்ளைகளாகிய நாங்கள் மூவரும், ஆகிய ஐவருடைய படம் (Photograph) எடுக்கப்பட்டது. டாக்டர் மில்லர் துரையுடைய அன்பு என்றும் பாராட்டற் பாலது. டிசம்பர்மீ இவருடைய தமக்கையார் சிவகாமி யம்மாள் காலஞ்சென்றார்.

**1903**வரு பிப்ரவரிமீ 9வ இவருடைய மூத்த குமாரர் ஷண்முகம்பிள்ளையின் கலியாணம் புத்தூரில்

நடந்தது. பிப்ரவரி 27வ 780 பாடலுள்ள திருப்புகழ் ஓலைப் புத்தகம் ஒன்று திருமாகறல் என்னும் ஊரிலிருந்து கிடைக்க அதில் ஒரே ஒரு புதுப்பாடல் கிடைத்தது. மார்ச்சு 22வ ஸ்ரீகாளத்தி நாதருக்குப் பெரிய தாளங்கள் இரண்டு செய்தனுப்பினர். ஜூன் 29வ என் தமையனார் ஷண்முகம்பிள்ளையின் மனைவி சிவபதம் அடைய இவர் துக்கத்துக்காளானார். ஜூலை 28வ கீழைத்திருத்தணி ஆறுமுகசுவாமி கோயிலுக்குப் பெரிய மணி ஒன்று செய்வித்துக் கோயிலிற் கட்டிவைத்தனர். டிசம்பர் 11வ இவர் எழுதியுள்ள குறிப்பாவது—

"சோபகிருது கார்த்திகைமீ 26வ சுக்கிரவாரம் இரவு 9 மணிக்கு திருத்தணி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சந்நிதானத்தில் எரிகிற தூங்கா விளக்கு ஐந்தில் ஒன்றை ரூபா 350 கொடுத்து வாங்கி என்னுடையதாக்கி ஏற்றுவித்தேன். இனி சரியாய் எரிந்து வரும். ஆபத் சகாய விநாயக மூர்த்தி, சுவாமி, தெய்வயானை, வள்ளியம்மை யிவர்களுக்கு அர்ச்சனை செய்வித்துத் தீபம் ஏற்றப் பட்டது. தீபம் எப்போதும் எரிந்துவரவேண்டும். ஷை ரூபா 350-க்கும் நிலம் வாங்கி சுவாமிபேரால் தஸ்தவேசு ஏற்படுத்தி, அந்த வரும்படியிலிருந்து தீபம் ஏற்றுவிக்கப்படும். நெடுநாளாக எனக்கிருந்த இவ்வெண்ணத்தை என் 58ஆம் வயது ஆரம்பமாகும் இன்று நிறைவேற்றுவித்ததற்காக ஸ்ரீ தணிகையாண்டவருக்கு என் மனதார அநேக வந்தனங்கள் அன்புடன் அளிக்கின்றேன்."

**1904**ஆ என் தாயார் அடிக்கடி நோயாய்ப் படுத்துக்கொண்டது இவருக்கு மனதுக்கு மெத்த கவலைக் கிடமாயிருந்தது. ஆகஸ்ட்டுமீ 5வ ஆடிகிருத்திகை யன்று தணிகையெம் பெருமானது தரிசனங் கிடைக்கப்பெற்று,

" சுவாமியைக் கண்ணாரக் கண்டேன். பேரானந்தங் கொண்டேன். அர்ச்சனை செய்துகொண்டு திரும்பினேன். என் அதிர்ஷ்ட

வசத்தால் இன்றும் சுவாமி தரிசனங் கிடைத்தது. என் பாக்கியமே பாக்கியம்"

—என எழுதியுள்ளார். ஆகஸ்ட்டுமீ 15௳

"குரோதிஞு ஆடிமீ 32௳: இன்று காலை திருக்குளத்துக்கு வடவண்டை கரையிலிருக்கும் அரசமரத்தடியில் நாகத்தைப் பிரதிஷ்டை செய்தோம். சுமார் 30 வருஷத்துக்கு முன் செய்த பிரார்த்தனை இப்போது இந்த க்ஷேத்திரத்தில் நிறைவேறியது."

—எனக் குறித்துள்ளார். இந்த மாதம் "சுந்தர விலாசம்" என்றொரு ஓலைப்புத்தகங் கிடைக்க அதைக் காபி செய்து வைத்தார். இது கூடிய சீக்கிரத்தில் அச்சிடப்படும். செப்டம்பர்மீ திருத்தணி சுவாமி பள்ளியறைக்கு படுக்கை, மெத்தை, தலையணைகள் முதலியன செய்வித்துத் தந்தார். இவர் விருப்பத்துக் கிணங்கி மஹாமஹோபாத்தியாயர் சாமிநாதையரவர்கள் அச்சிட்ட திருப்பூவணநாதருலா டிசம்பர்மீ வெளிவந்தது.

**1905**ஞு பிப்ரவரிமீ நான் எம். ஏ. பரீக்ஷையில் தேறினதைக் கேட்டு மகிழ்ந்தார். மார்ச்சு, ஏப்ரில் மாதங்களில் பல வருஷங்களுக்கு முன் தாம் எழுதிவந்த சிவஸ்தல அகராதி என்னும் நூலைத் தயார்செய்து வந்தனர். இந் நூலுக்கு என்ன பெயர் சூட்டலாம் என யோசித்திருந்தார். அப்பொழுது மஹாமஹோபாத்தியாயர் சாமிநாதையர் அவர்களைக் காண நேரிட "சிவதலமஞ்சரி" எனப் பெயரிடலாம் என்று அவர் சொல்ல, "சிவஸ்தலமஞ்சரி" என்று சொல்லலாமா என இவர்கேட்க, அவர் சிவஸ்தல மஞ்சரி என்னும் பெயரே நன்கு பொருந்தும் என அவ்வாறே நூலுக்குப் பெயர் சூட்டப்பட்டது. ஜூலைமீ 6௳ இவருடைய மூத்த குமாரர் ஷண்முகம்பிள்ளைக்கு சென்னையில் (இரண்டாவது தாரம்) விவாகம் நடந்தது.

இந்த மாதம் சிவஸ்தலமஞ்சரி (முதற்பதிப்பு) அச்சாகி வெளிவந்தது. காஞ்சீபுரத்துக் கடுத்த முட்டவாக்கம் என்னும் கிராமத்தில் 2 ஏகரா நிலம் வாங்கினார். ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய பழமுதிர்சோலை கள்ளழகர் கோயிலில் மறுபடியும் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்பதற்கு இவர் மிகுந்த பிரயாசை எடுத்து, "நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களுக்கு ஒரு விண்ணப்பம்" [அநுபந்தம் III.] என ஒரு பத்திரிகை அச்சிட்டு அவர்களுக்கு அனுப்பினார். டிசம்பர் 10வ திருவண்ணாமலைக்குக் கார்த்திகை தீபதரிசனஞ் செய்யச் சென்றார். மலைமேல் தீபந் தெரிந்த பொழுது எல்லாரும் ஹரஹர என்று ஆரவாரித்தார்களாம். அப்பொழுது இவர் தமது கன்னெஞ்சும் உருகிக்கரைந்த தென்று எழுதியிருக்கிறார். டிசம்பர்மீ 13வ (விசுவாவசுஸு கார்த்திகை 28வ) தமது அறுபதாவது வயது ஆரம்பத்தில் திருக்கோவலூர் என்னும் ஸ்தல தரிசனங் கிடைக்கப்பெற்று,

"சுவாமி தயவினால் 60-ஆம் வயது ஆரம்பமாகிற இன்று பாடல் பெற்ற ஸ்தலத்தில் இருக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றேனே!"

என்று சந்தோஷப்பட்டார். கிருத்திகை தினத்தில் திருத்தணி தவிர வேறு தலத்துத் தரிசனம் எங்கள் குடும்பத்துக் காகாது என்றிருந்தும் திருவண்ணாமலை போவாவினுடன் தரிசித்த காரணத்தாலோ வேறு என்ன காரணத்தினாலோ அங்கிருந்து வந்தது முதல் **1906**ஸு முற்பகுதியிற் சென்னையில் நோயா யிருந்து மதுரையில் இருந்தபோது வந்த கட்டிபோல வயிற்றிற் கட்டி கண்டு டாக்டர் எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள் ஏப்ரில்மீ அதைக் கீணிச் சீயை வெளிப்படுத்திச் சிகிச்சைசெய்ய

ஸ்ரீ தணிகேசன் அருளாற் சௌக்கியமடைந்தார். டாக்டர் அவர்கள் பேருதவி என்றும் பாராட்டற்பாலது. ஜூலைமீ திருப்புகழ் மூன்றும் பாகத்துக்கிருந்த எண்பது பாடல்கள் பண்டிதர் பிரமஸ்ரீ அனந்தராமையர் அவர்களைக் கொண்டு திருத்தப்பட்டன. செப்டம்பர்மீ 7௳ வெள்ளிக் கிழமை வெள்ளியாற் செய்யப்பட்டுத் தங்க கில்ட் கொடுக்கப்பட்ட புதிய வேலாயுதத்தைத் தணிகை யெம்பெருமானுக்குச் சமர்ப்பித்தார். அக்டோபர்மீ மறுபடியும் வயிற்றிற் கட்டி புறப்பட்டுத் தானே உடைந்து சீக்கிரத்தில் லகுவாயிற்று. டிசம்பர் 11௳—

"I'll complete my 60th year on the 13th inst. (28th கார்த்திகை). It is my desire to go to திருத்தணி, make அபிஷேகம் to my God and Saviour and offer my humble and heartfelt thanks to Him for having preserved me for the long period of 60 years"

[எனது அறுபதாம் வயது 13௳ முடிகின்றது; அன்று திருத் தணிக்குப் போய் நீண்ட காலமாகிய அறுபது வருஷம் என்னைக் காத்தளித்த பெருங்கருணையைப் பாராட்டி, என்வணக்கத்தையும் நன்றியையுங் கூறி என் குலதெய்வமாந் தணிகைநாதருடைய சரணங்களில் வீழ்ந்து அவருக்கு ஒரு அபிஷேகஞ் செய்ய நான் விரும்புகின்றேன்.]

—என்று எழுதி யிருக்கிறார். அவ்வாறே சென்று சுவாமிக்கு அபிஷேகம் செய்யும்படியான பாக்கியத்தைப் பெற்றார். சஷ்டி பூர்த்தி அங்ஙனம் நிறைவேறிற்று.

**1907**௵ ஜனவரிமீ பிரமோத்தரகாண்ட வசனம் (இரண்டாம் பதிப்பு) அச்சிடப்பட்டு ஏப்ரில்மீ வெளி வந்தது. இவ்வருடம் என்தமையனார் B. L. பரிக்ஷை தேறினதைக் கேட்டு மிக்க சந்தோஷமுற்றார். ஏப்ரில்மீ

முட்டவாக்கத்துக் கடுத்த அகரத்தில் 2½-காணி நிலம் ஒத்திக்கு வாங்கினார். ஜுன்மீ 27உ தணிகையெம் பெருமானுக்குப் பால் காவடி எடுத்து அபிஷேக அலங்கார தீபாராதனைசெய்து அவர் சந்நிதியில் எனக்கு மணஞ் செய்வித்தார். நவம்பர்மீ 21உ என் தமையனாருக்கு ஆண் குழந்தை (மயிலேறும்பெருமாள்) பிறந்தது. பேரன் பிறந்தபொழுது இவர் அளவிலா ஆநந்தம் உற்றார்.

**1908**ஹு மார்ச்சுமீ 23உ திருப்புகழ் முதற்பாகம் இரண்டாம் பதிப்பு அச்சுக்குக் கொடுக்கப்பட்டது. இவ் வருடம் திருத்தணியிலிருந்தபொழுது கடுமையான சுரம் ஒரு முறை வந்தது. அப்போது இவர் வெகுநேரம் மிகப் பலத்த குரலுடன் அநேகந் தேவாரப் பாக்களைப் பாடிக் கதறி—

"ஆகம்பத் தரவணையான் அயனறிதற் கரியானைப்
பாகம்பெ ணாண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
யேகம்ப மேயானை யென்மனத்தே வைத்தேனே."

என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரத்தை யேற்றிற் கூறி முடித்து, இவர் நோய் எவ்வாறு முடியுமோ, இது ஜன்னியோ, என அஞ்சிநின்ற எங்களை நோக்கித் தமக்குத் தற்காலம் சாவில்லை யென்றும், தாம் எங்கே இறந்த போதிலும் தமது எலும்புகளில் ஒன்றையேனுந் திருத் தணிகைக்கு கொண்டுவந்து அதை சுவாமியின் கோபுரத் துக்கு நேரே புதைக்க வேண்டும் என்றுஞ் சொல்லி அவ் வாறே செய்கின்றோம் என எங்களிடம் வாக்குறுதியும் பெற்றுக்கொண்டார். பின்னர் இறைவனருளால் உடம்பு சரிப்பட்டது.

மேமீ திருத்தணி மடத்துக் கிணறு பழுதுபார்க்கப் பட்டது. ஜூன்மீ திருநீரேத் தலபுராணத்தை அச்சிட்டு உலகுக்கு உதவினர். ஜூலைமீ 12வ இவருடைய மூன்றாவது குமாரனுக்கு (ஆறுமுகம் பிள்ளைக்கு)ச் சேயூரிற் கலியாணம் நடந்தது. ஆகஸ்ட்டுமீ 6வ இவருடைய மாமியார் காஞ்சியிற் காலஞ் சென்றனர். செப்டம்பர்மீ திருத்தணி திருப்புகழ் தனியாய் அச்சிடப்பட்டது. டிசம்பர்மீ பழநிக்குச் சென்று இவ்வளவு காலஞ் சென்றேனும் பழநியாண்டவரைத் தரிசிக்கும்படியான பெரும்பாக்கியம் பெற்றேனே எனப் பேரானந்தம் உற்றார்.

தள்ளாமை மேற்பட்டு அடிக்கடி அலைவது கஷ்டமாய்விட பென்ஷன் வாங்குவதை காஞ்சீபுரத்தினின்று சென்னைக்கு **1909**வரு ஜனவரிமீ மாற்றிக்கொண்டனர். 1909வரு மார்ச்சுமீ 24வ சென்னையிலிருந்து கடைசியாகத் திருத்தணிகைக்குச் சென்றார். அங்கு ஏப்ரில் 11வ கடைசியாக மலைக்குச் சென்று திருத்தணிகேசனைத் தரிசித்து ஒரு சஹஸ்ரநாம அருச்சனையுஞ் செய்வித்தார். தமிழ் வருடப் (சௌமிய) பிறப்புக்குத் தம் மக்களுடன் இருக்கக் கருதி ஏப்ரில்மீ 12வ சென்னைக்குத் தஞ் சொந்த வீட்டுக்கு (292, லிங்கசெட்டித் தெரு) வந்து சேர்ந்தார். ஏப்ரில் 16வ வெள்ளிக்கிழமை இரவு படுக்கைக்குப் போவதற்கு முன் என்னைக் கூப்பிட்டுப் பீரவைத் திறக்கச்சொல்லி திருப்புகழ் முதற்பாகம் (இரண்டாம் பதிப்பு) அச்சாகி வந்து அடுக்கி வைத்திருந்ததைக் கண்ணுற்று மிகவும் சந்தோஷத்துடன் வீட்டு மாடியிலுள்ள ஹாலில் கட்டிலின்மேல் மெத்தைமீது வழக்கம்போலச் சிவகவசம் சொல்லிவிட்டு ஒரு நோயுமின்றிப் படுத்துறங்கினர். இரவு 12 மணிக்கு எங்களை எழுப்பித் தமக்கு அதிகமாக

வியர்ப்பதாகச் சொன்னார். ஜன்னல்களைத் திறந்து அவர் உடம்பைத் துடைத்தோம். பின்னர் மார் வலிப்பதாகச் சொன்னார். மான் கொம்பிழைத்துப் பூசினோம். கட்டிற் சட்டங்கள் ஒருவேளை உடம்பை உறுத்துமென்று மெத்தையைக் கட்டிலுக்குச் சமீபத்திற் கீழே விரித்தோம். 'நீங்கள் நல்லவேலை செய்தீர்கள்; எனக்கு மார்வலி நின்றுவிட்டது ; நீங்கள் தூங்குங்கள்' எனச் சொல்லி அவர் படுத்துக்கொள்ள எல்லோரும் படுத்துறங்கினோம். சனிக்கிழமை (ஏப்ரில் 17உ) காலையில் அவர் எழுந்து தமது படுக்கையில் உட்கார்ந்தபடியே "இப்போது மணியென்ன" என்று கேட்டார். ஆறு மணி என்று சொன்னோம். சொல்லி முடியுமுன் உட்கார்ந்திருந்தவர் அப்படியே எங்கள் கைகளிற் சாய்ந்து அறுமுகப்பெருமான் திருவடி நீழலைச் சார்ந்தனர். அறுமுகப்பெருமானைக் கண்டு தரிசித்துச் சஹஸ்ரநாம அருச்சனை செய்வித்த தினத்துக்கு ஆறும் நாள் அவரது திருவடி சேர்ந்தனர். அப்போது எங்கள் துக்கத்தை என்னென்றெடுத்துரைப்பது ? அன்று மாலை 6½-மணிக்கு எல்லோருக்கும் முடிவிடமாம் சுடலை "மூலகொத்தளத்துக்கு" இவரது உடலம் எடுபட்டுத் தகன கைங்கரியம் நடந்தது. காளமேகப்புலவருடைய உடலம் சுடலையில் எரிவதைக்கண்டு "வேகின்றதையையோ மண்டின்ற பாணமென்ற வாய்" என இரட்டைப் புலவர்கள் புலம்பினார்களாம். அதுபோல நாங்களும்,

நூற்றுக் கணக்கா நுதற்கண்ணன் ஆலயங்கள்
போற்றிப் பணிந்த புநித உடலம் எரி
யேற்றித் தொலைகிறதே ! ஈசா ! ஐ யோ ! என்றே
சாற்றிப் புலம்பித் தளர்ந்துருகி நின்றோமே.

பின்னர், ஞாயிறு காலை (18-4-1909) "பால்தெளி" நடந்தவுடன் அவர் எங்களுக்கு முன்பிட்ட கட்டளைப்படி அவர் எலும்புகளை ஒரு மட்பாண்டத்திற் சேர்த்துத் திருத்தணிகைக்குக் கொண்டுபோய் அங்குச் சைவர்களைச் சமாதி வைக்கும் இடம் திருத்தணிகேசன் கோபுரத்துக்கு நேராயிருப்பதால் அங்கே அஸ்திகளை அடக்கஞ்செய்து, அவ்விடத்திற் சிறு கட்டிடங் கட்டி, நந்தி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து, ஒரு சிலையிற் பின்வருமாறு குறித்து வைத்தோம்.

---

உ

சிவமயம்.

திருத்தணி—சீர்கருணீகர் மடோத்தாரணஞ் செய்த

வடக்குப்பட்டு-த-சுப்பிரமணிய பிள்ளை

திருப்புகழ் பதிப்பாசிரியர்

பராபவஞூ கார்த்திகைமீ 28உ செங்கற்பட்டிற் பிறந்தார். டிஸ்டிரிக்டு முனிசீபாகவிருந்து உபகாரச் சம்பளம் பெற்று சென்னபட்டணம் லிங்க செட்டித்தெரு, 292-ஙி. தமது சொந்த கிருஹத்திற் சௌமியஞூ சித்திரைமீ 5உ காலை 6 மணிக்கு மாஞூவஸ்தை யின்றித் தமது வழிபடுகடவுளாகிய திருத்தணிகேசன் திருவடி யடைந்தார்.

---

**VADAKKUPPATTU TANIKACHALAM SUBRAMANYA PILLAI**

EDITOR OF TIRUPPUGAL.

Born, 11th Dec. 1846; Joined Govt. Service, 1st Feb. 1870.

District Munsif, 1888—1901.

Died peacefully at 292, Linga Chetti Street, Madras, 17th April 1909.

திருத்தணிகைக்குச் செல்லும் அன்பர்கள் இதை இன்றுங் காணலாகும். இவர் காயமாகிய வெற்றுடம்பு மாய்ந்த முடிவு இது; எனினும், மலரவன்செய் வெற்றுடம்பு மாய்வதுபோல மாயாத இவர் புகழ் உடம்பு இப்பூவுல குள்ளளவும் நிலவுமன்றோ! இவர் அச்சிட்டு உதவிய திருப்புகழ் சிவனடியார்களுக்கு என்ஞான்றும் புதையல் போன்ற பெருந்தனமாய் விளங்குமன்றோ!

கந்த னூர்புகழ் காட்டுந் திருப்புகழ்
எந்தை நீயிவ் வுலகுக் கிடாறத்
தந்து செய்த உதவி தரணியில்
எந்த நாளும் இனிது நிலவுமே.

திருத்தணிகேசன் துணை.

திதிநாட் குறிப்பு.

சித்திரைஜந் தாந்தினத்திற் சேர்சௌ மியவாண்டிற்
சுத்தகிருஷ்ண பக்ஷந் துவாதசியில்—ஒத்தசனி
வாரம்பூ ரட்டாதி மற்றெந்தை யீசனடி
சேருந்நா ளாமே தெளி.

முடிவுரை.

மன்றுள் நடிக்கும் பெருமானார் மைந்தர் பாத நீழலிலே
நின்று களிக்கும் பெரியோனே! நியம நெறியைக் காட்டுவித்
[தோய்!
உன்றன் மகவா யானுதித்த ஒன்றை நினைந்தே யாநந்தம்
என்றும் எங்கும் எனக்குளதால் இனியான் வேண்டேன் பிற
[பெருமை.

# அநுபந்தம் I.

## சுப்பிரமணிய பிள்ளை தரிசித்த முக்கிய ஸ்தலங்கள்

[உடுக்குறியிட்டன ஒருமுறைக்குமேற் றரிசிக்கப்பட்டன].

[எண்ணிடப்பட்டன தேவாரம் பெற்றவை].

௳ ௴ ௵

**1865**

27-5. *மயிலாப்பூர் (1)

**1866**

28-9. *திருத்தணிகை

**1867**

22-5. வள்ளிமலை

**1868**

*கச்சியேகம்பம் (2)
4-6. *கச்சி வரதர் கோயில்
,, *கச்சிமயானம்
*கச்சிமேற்றளி (3)
24 } -12. *திருப்பாசூர் (4)
31 }
*திருவூறல் (5)
*திருவாலங்காடு } (6)
பழையனூர் }

**1870**

26-1. *அச்சிறுபாக்கம் (7)
,,-2. *திருப்பாதிரிப்புலியூர் (8)

௳ ௴ ௵

[1870 (தொடர்ச்சி.)]

1-6. *சிதம்பரம் (9)
12-6. மயிலம்
... *திருமாற்பேறு (10)

**1871**

30-6. *கச்சி அநேக தங்காபதம் (11)
28-12. *சீகாழி (12)
29-12. *வைத்தீசுரன் கோயில் (13)
,, திருப்புன்கூர் (14)
30-12. *மாயூரம் (15)

**1873**

11-5. திருவிற்கோலம் (16)
12-5. இலம்பையங் கோட்டூர் (17)
30-5. சீகாளத்தி (18)

**1875**

6-3. திருமாணிகுழி (19)
13-6. *திருச்சோபுரம் (20)

௳ ௴ ௸

**1877**

25-3. *திருவதிகை (21)

**1878**

5-5. திருக்கண்டேசுரம்
16-5. குன்றத்தூர்
20-5. *திருக்கழுக்குன்றம் (22)
29-5. திருவிடைச்சுரம் (23)
11-6. திருவெண்பாக்கம் (24)

**1879**

13-4. *திருவாமாத்தூர் (25)
14-4. *புறவார் பனங்காட்டூர் (26)

**1880**

28-3. திருத்தினைநகர் (27)
10-5. விரிஞ்சிபுரம்

**1881**

2-1. கச்சிநெறிக்காரைக்காடு (28)
17-4. திருநெல்வாயில் (29)
,, திருக்கழிப்பாலை (30)
,, திருவேட்களம் (31)
12-6. நல்லூர்ப்பெருமணம் (32)
13-7. திருப்பதி
17-7. *கச்சிக் காரோணம்

**1883**

29-6. திருப்பனங்காடு (33)
8-7. திருவான்மியூர் (34)

**1885**

31-5. குரங்கணின்முட்டம் (35)

௴ ௸

[1885 (தொடர்ச்சி.)]

5-6. வடதிருமுல்லைவாயில் (36)
6-6. திருவல்லம் (37)
16-10. திருவஹீந்திரபுரம்

**1886**

21-2. துறையூர் (38)
23-4. *திருமுதுகுன்றம் (39)
,, வடலூர்
25-4. எருக்கத்தம்புலியூர் (40)
,, பெண்ணாகடம் (41)

**1887**

29-1. திருவக்கரை (42)
8-4. திருநாவலூர் (43)
12-5. *ஓணகாந்தன்தளி (44)
13-5 திருமாகறல் (45)
,, கடம்பர்கோயில்
25-5. திருச்சானூர்
26-8. } *சோளிங்கர்— ஸ்ரீ நாசிம்ஹசாமி }
5-11. *திருவள்ளூர்

**1888**

26-2. *திருவெண்ணெய் நல்லூர் (46)
26-5. ஸ்ரீரங்கம்
,, திருவானைக்கா (47)
27-5. *திரிசிராப்பள்ளி (48)
1-6. *நாமக்கல் ஸ்ரீ நாமகிரியம்மை }
13-7. சேலம் சுகவனேசுரர்
19-8. *திருச்செங்கோடு (49)
19-10. *வல்லிபுரம்

| உ | மீ | ஊர் | |
|---|---|---|---|

**1889**

22-4. பாண்டிக்கொடுமுடி (50)
,, கருவூர் (51)
23-12. *கும்பகோணம் (52)
,, *குடந்தைக் காரோணம் (53)
,, *குடந்தைக் கீழ்க் கோட்டம் (54)
24-12. *சுவாமிமலை
,, *திருவிடைமருதூர் (55)

**1890**

25-12. திருநணா (பவானி)(56)
26-12. பேரூர்
27-12. அவிநாசி (57)
,, திருமுருகன்பூண்டி (58)

**1891**

19-5. திருவோத்தூர் (59)
25-5. திருப்போரூர்
26-5. மஹாபலிபுரம்
29-5. *திருவண்ணாமலை (60)

**1892**

21-2. *தஞ்சை (தஞ்சாவூர்)
28-2. திருவலஞ்சுழி (61)
6-3. கொட்டையூர் (62)
13-3. *கலயநல்லூர் (63)
20-3. சிவபுரம் (64)
15-4. பட்டீச்சுரம் (65)
,, முழையூர்
,, சத்திமுத்தம் (66)
,, பழையாறை வடதளி (67)

| உ | மீ | ஊர் | |
|---|---|---|---|

[1892 (தொடர்ச்சி.)]

10-5. *திருவையாறு (68)
11-5. திருப்பழனம் (69)
,, திருச்சோற்றுத்துறை (70)
,, திருவேதிகுடி (71)
,, *திருக்கண்டியூர் (72)
,, திருநெய்த்தானம் (73)
12-5. *திருப்பூந்துருத்தி (74)
17-7. தாரேசுரம்
20-8. திருநாகேச்சுரம் (75)
,, உப்பிலியப்பர் கோயில்
,, தேப்பெருமாள் நல்லூர்
4-9. கருக்குடி (76)
18-9. திரிபுவனம்

**1893**

13-1. *திருவாவடுதுறை (77)
,, கோடிகா (78)
14-2. இன்னம்பூர் (79)
,, புறம்பயம் (80)
,, விஜயமங்கை (81)
,, திருவைகாவூர் (82)
31-3. *திருவாரூர் (83)
,, *திருவாரூர் அரநெறி (84)
,, *திருவாரூர்ப் பரவையுண்மண்டளி (85)
2-4. விளமர் (86)
26-4. அரிசிற்கரைப்புத்தூர் (87)
,, நறையூர் (88)
,, நாச்சியார் கோயில்
,, பேணுபெருந்துறை (89)
5-5. விளநகர் (90)
,, ஆக்கூர் (91)

| உ மீ | ஞ | |
|---|---|---|
| [1893 (தொடர்ச்சி.)] | | |
| 6-5. | திருக்கடவூர் | (92) |
| ,, | திருக்கடவூர் மயானம் | (93) |
| 8-5. | திருக்கோலக்கா | (94) |
| 18-6. | சேய்நலூர் | (95) |
| ,, | திருவாப்பாடி | (96) |
| ,, | திருப்பனந்தாள் | (97) |
| 27-8. | திருவியலூர் | (98) |
| ,, | திருந்துதேவன்குடி | (99) |
| **1894** | | |
| 13-5. | கருகாவூர் | (100) |
| ,, | திருப்பாலைத்துறை | (101) |
| ,, | நூற்றெட்டு சிவாலயம் | |
| 14-5. | நல்லூர் | (102) |
| 17-5. | திருமங்கலக்குடி | (103) |
| ,, | கஞ்சனூர் | (104) |
| ,, | தென்குரங்காடுதுறை | (105) |
| ,, | திருமாந்துறை | |
| 9-6. | திருமுண்டீச்சுரம் | (106) |
| 8-7. | தண்டலை நீணெறி | (107) |
| 5-8. | கைச்சினம் | (108) |
| 12-8. | *சிற்றேமம் | (109) |
| 28-9. | *திருமறைக்காடு | (110) |
| 29-9. | கோடிக்குழகர் | (111) |
| ,, | அகத்தியான்பள்ளி | (112) |
| 30-9. | ஆதி ரங்கம் | |
| 14-10. | திருக்காறுயில் | (113) |
| ,, | *நாட்டியத்தான்குடி | (114) |
| 19-10. | முகத்தலை (பன்னதரு) | |
| 20-10. | திருவுசாத்தானம் | (115) |
| 21-10. | தில்லைவிளாகம் | |

| உ மீ | ஞ | |
|---|---|---|
| [1894 (தொடர்ச்சி.)] | | |
| 21-10. | *இடும்பாவனம் | (116) |
| ,, | *கடிக்குளம் | (117) |
| 31-12. | திருமழபாடி | (118) |
| ,, | பெரும்புலியூர் | (119) |
| **1895** | | |
| 1-1. | திருவாலம் பொழில் | (120) |
| ,, | திங்களூர் | |
| 4-1. | நாகைக்காரோணம் | (121) |
| 5-1. | திருநள்ளாறு | (122) |
| ,, | தக்களூர் | |
| ,, | தருமபுரம் | (123) |
| ,, | தெளிச்சேரி | (124) |
| 8-2. | தலைக்காடு | |
| 24-2. | திருக்களர் | (125) |
| ,, | *கோட்டூர் | (126) |
| 25-2. | கீழ்க்கோட்டூர் மணியம்பலம் | |
| 3-3. | திருநெல்லிக்கா | (127) |
| ,, | திருத்தெங்கூர் | (128) |
| ,, | கொள்ளிக்காடு | (129) |
| 30-4. | *கோளிலி | (130) |
| ,, | எட்டிகுடி | |
| ,, | திருவாய்மூர் | (131) |
| 1-5. | குண்டையூர் | |
| ,, | கன்றாப்பூர் | (132) |
| ,, | வலிவலம் | (133) |
| ,, | சாட்டியக்குடி | |
| 13-5. | திருச்செங்காட்டங்குடி | (134) |
| ,, | இராமனதீச்சுரம் | (135) |
| ,, | திருக்கண்ணபுரம் | |
| 14-5. | திருமருகல் | (136) |

| உ | மீ | ஒலு |
|---|---|---|
| | [1895 (தொடர்ச்சி)] | |
| 14-5. | திருப்புகலூர் | (137) |
| ,, | திருப்புகலூர் வர்த்த மாணீச்சுரம் | (138) |
| 19-5. | திருவொற்றியூர் | (139) |
| 20-5. | மன்னார்குடி | |
| 20-7. | திருவீழிமிழலை | (140) |
| ,, | திருவன்னியூர் | (141) |
| 22-12. | திருவெண்டுறை | (142) |
| 23-12. | பாதாளேச்சுரம் | (143) |

**1896**

| | | |
|---|---|---|
| 1-1. | திருப்பெருந்துறை | |
| 4-4. | அம்பர் | (144) |
| ,, | அம்பர் மாகாளம் | (145) |
| ,, | திலதைப்பதி | (146) |
| 5-4. | பாம்புரம் | (147) |
| ,, | சிறுகுடி | (148) |
| ,, | மீயச்சூர் | (149) |
| ,, | ,, இளங்கோயில் | (150) |
| 6-4. | வழுவூர் | |
| 7-4. | கயாகரை | |
| ,, | பள்ளியின்முக்கூடல் | (151) |
| 2-8. | குறுக்கை (திருத் தருப்பூண்டிக்குச் சமீபம்) | |
| 31-8. | பேரெயில் | (152) |
| 22-12. | திருக்கொண்டீச் சுரம் | (153) |
| ,, | நன்னிலம் | (154) |
| ,, | திருவாஞ்சியம் | (155) |
| 23-12. | திருப்பனையூர் | (156) |
| 24-12. | தேவூர் | (157) |
| ,, | கீழ்வேளூர் | (158) |
| ,, | சிக்கல் | (159) |

| உ | மீ | ஒலு |
|---|---|---|
| | **1897** | |
| 21-3. | வெண்ணி | (160) |
| 16-5. | வெள்ளிகரம் | |
| 17-5. | நெடியம் | |
| 4-6. | திருக்கச்சூர் | (161) |
| 21-6. | காமேசுரம் | |
| 2-7. | *மதுரை | (162) |
| 25-7. | திருவேடகம் | (163) |
| 8-8. | ஆப்பனூர் | (164) |
| 24-8. | *திருப்பரங்குன்றம் | (165) |
| 26-12. | கள்ளழகர் கோயில் | |
| ,, | மதுரை வட ஆலவாய் | |

**1898**

| | | |
|---|---|---|
| 30-12. | திருப்பூவணம் | (166) |

**1899**

| | | |
|---|---|---|
| 2-4. | திருச்சுழியல் | (167) |
| 19-5. | திருக்கானப்பேர் | (168) |
| 21-5. | திருவாடானை | (169) |
| 23-5. | திருப்புனவாயில் | (170) |
| 25-5. | கோயிலூர் | |
| 26-5. | குன்றக்குடி | |
| 27-5. | வயிரவன்பட்டி | |
| ,, | திருப்புத்தூர் | (171) |
| 28-5. | கொடுங்குன்றம் | (172) |
| 29-5. | திருக்கோட்டியூர் | |

**1901**

| | | |
|---|---|---|
| 3-1. | திருவுத்தரகோசமங்கை | |
| 24-2. | இளையான்குடி | |
| 7-4. | திருவாதவூர் | |
| 16-6. | தேவிபட்டினம் | |
| 17-6. | இராமேசுரம் | (173) |

| ௳ ௴ | ஸ்தலம் |
|---|---|
| | [1901 (தொடர்ச்சி.] |
| 18-6. | தநுஷ்கோடி |
| 24-6. | திருப்புல்லணை |

**1905**

2-5. திருவலிதாயம் (174)
12-12. அறையணிநல்லூர் (175)
13-12. திருக்கோவலூர் (176)

**1908**

12-7. சேயூர்
27-12. பழநி

### சுருக்கம்.

| நாடு | | தேவாரம் பெற்றவை | இவர் தரிசித்தவை |
|---|---|---|---|
| ஈழ நாடு, மலை நாடு, வட நாடு, துளுவ நாடு | ... | 9 | ... |
| தொண்டை நாடு | ... | 32 | 28 |
| நடு நாடு | ... | 22 | 17 |
| சோழ நாடு | ... | 190 | 113 |
| கொங்கு நாடு | ... | 7 | 6 |
| பாண்டி நாடு | ... | 14 | 12 |
| | | 274 | 176 |

## அநுபந்தம் II.

### இவர் தரிசித்த முக்கிய உற்சவங்கள் முதலிய.

[உடுக்குறி யிட்டன ஒருமுறைக்குமேற் றரிசிக்கப்பட்டன.]

| ௳ ௴ | ஸ்தலம் |
|---|---|
| | **1869** |
| 25-3. | மயிலை அறுபத்து மூவர் |
| | **1870** |
| 28-6. | திருவள்ளூர் ஆனி அமாவாசை தெப்பம் |
| | **1871** |
| 27-12. | *சிதம்பரம் ஆருத்ரா |

| ௳ ௴ | ஸ்தலம் |
|---|---|
| | **1874** |
| 1-6. | நாராயணவனம் கருடசேவை |
| | **1876** |
| 5-6. | *காஞ்சி கருடசேவை, |
| | * ,, வரதர் ரதோத்ஸவம் |
| | **1879** |
| 14-4. | புறவார் பனங்காட்டூர் சூரிய பூஜை |

உ மீ ௵

**1880**

24-4. கச்சி நடபாவி உற்சவம்

**1881**

12-6. ஆச்சாபுரம் சம்பந்தர் திருமணம்
20-7. *திருத்தணி ஆடித் தெப்பம்

**1882**

25-8. காஞ்சீபுரம் ஆருத்ரா

**1885**

1-1. *திருப்பாதிரிப்புலியூர் ஆருத்ரா
28-2. கும்பகோணம் மஹாமகம்
30-5. *காஞ்சி ஏகாம்பரேசுரர் சர்வதீர்த்த தெப்பம்

**1886**

12-5. *திருப்பாதிரிப்புலியூர் ரிஷபவாகனம்
... சிதம்பரம் ஆனித்திரு மஞ்சனம்

**1887**

30-12. *திருவாலங்காடு ஆருத்ரா

**1888**

12-1. திருவள்ளூர்கருடசேவை
10-2. விருத்தாசலம்சிவராத்திரி
13-4. *புறவார் பனங்காட்டூர் நிரைமணி சேவை

உ மீ ௵

**1890**

26-12. பேரூர் ஆருத்ரா

**1892**

22-4. *குடந்தைக் கீழ்க் கோட்டம் சூரிய பூஜை
5-5. கும்பகோணம் கருட சேவை
11-5. திருவையாறு சப்த ஸ்தானம்
31-7. கும்பகோணம்—ஆடிப் பதினெட்டாம்பெருக்கு.
...-9. ,, நவராத்திரிவேடிக்கை
13-11. ,, ஐப்பசி கடைமுழுக்கு

**1893**

29-1. திருவிடைமருதூர் ரதம்
14-2. வைகாவூர் சிவராத்திரி
31-3. *திருவாரூர் ரதம்
,, ,, தியாகராஜர் பாத தரிசனம்.
1-4. ,, நடன பந்தர்க் காக்ஷி.
2-5. கும்பகோணம் சப்த ஸ்தானம்.
3-5. ,, சாரங்கபாணி ரதம்

**1894**

21-1. திருவிடைமருதூர் தைப்பூசம்.
26-2. *கும்பேசுரர் தெப்பம்
5-3. கும்பகோணம் சிவராத்திரி
28-9. வேதாரணியம் மாளய அமாவாசை கடல் ஸ்நானம்

உ மீ ஞூ

**1896**

1-1. திருப்பெருந்துறை ஆருத்ரா.
27-4. எட்டிகுடி சித்ரா பௌர்ணமி.
21-12. திருவாரூர் ஆருத்ரா

**1897**

13-3. ஆரூர் ரிஷபவாகனம்
5-9. மதுரை குதிரை கயிறு மாறுதல்.
6-9. ,, பிட்டுத் திருநாள்

**1898**

6-1. மதுரை ஆருத்ரா
12-1. ,, கல்லானைக்குக் கரும்பளித்தல்.
30-1. ,, சமணரைக்கழு வேற்றல்.
5-2. ,, தெப்பல்
19-2. ,, சிவராத்திரி
8-4. திருப்பரங்குன்றம் தெய்வயானையம்மை திருக்கலியாணம்
2-5. மதுரை மீனாக்ஷியம்மை திருக்கலியாணம்
3-5. ,, ரதோத்ஸவம்
6-5. ,, அழகர் உற்சவம்
3-6.* திருப்பாதிரிப்புலியூர் ரதம்

உ மீ ஞூ

**1899**

20-5. காளையார் கோயில் ரிஷபவாகனம்
23-5. திருவாடானை ரதம்
,, திருப்புனவாயில் ரதம்

**1900**

4-2. காளையார்கோயில் கும்பாபிஷேகம்

**1901**

4-1. உத்தரகோசமங்கை ரிஷபவாகனம்

**1902**

8-3. திருத்தணி சிவராத்திரி

**1904**

3-1. திருத்தணி ஆருத்ரா
1-4. ,, ஆற்றுத்திருநாள்
31-7. புத்தூர் நெருப்புத் திருவிழா

**1905**

5-12. திருவண்ணாமலை ரிஷப வாகனம்.
10-12. ,, கார்த்திகைதீபம்

**1908**

1-3. காஞ்சீபுரம் சிவராத்திரி.

# அநுபந்தம் III.

## நாட்டுக்கோட்டை செட்டிமார்களுக்கு ஓர் விண்ணப்பம்.

(பழமுதிர்சோலை)

நான் இதனடியிலெழுதும் சங்கதிகளைக் கவனித்துப் படித்துச் செய்ய வேண்டியதை அவசியஞ் செய்து, அதனால் பெரும் புண்ணியத்தையும் அழியாப் புகழையும் அடைவதோடு மற்றச் சைவர்களையும் பெரும்பேறு அடையும்படிச் செய்வீர்களென்று முழுமையும் நம்பியிருக்கிறேன்.

நம்முடைய அருமை நாடாகிய பரதகண்டத்திலே எத்தனையோ சிவாலயங்களும், சுப்பிரமணிய ஆலயங்களும் இருக்கின்றன. அவைகளைக் கட்ட எவ்வளவோ பணம் பிடித்திருக்கும். கட்டி அதிக நாளாய் விட்டமையால் அவைகளில் அநேகம் பழுதாய்ப் போயின. அப்படிப் போனவற்றிற் பலவற்றை எவ்வளவோ பணம் செலவுசெய்து ஜீர்ணோத்தாரணஞ்செய்து, முன்னிருந்த நிலையைப்பார்க்கிலும், மேலான ஸ்திதிக்குக் கொண்டுவந்தீர்கள். அவைகளில் ஒன்றைப் புதுப்பித்தல் என்றாலும் ஏனையோரால் இப்போது முடியுமா? மிகவும் மேலான புண்ணியத்தினால் உங்களுக் குண்டான அரும்புகழுக்கு ஓர் அளவும் உண்டோ? இதுநிற்க.

கலியுக வரதாகிய ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கு ஆறு படை வீடுகள் உண்டென்று சைவர்கள் எல்லோருக்குந் தெரியும். அவைகள் திருப்பரங்குன்றம், திரு ஆவினன்குடி அல்லது பழநி, திருச்செந்தூர், திருவேரகம் அல்லது சுவாமிமலை, குன்று தோறாடல், பழமுதிர் சோலை என்பனவாம். குன்று தோறாடலில் திருத்தணி, விராலிமலை, கொடுங்குன்றம், குன்றக்குடி முதலிய சேர்ந்துள்ளன. பழமுதிர்சோலை நீங்கலாக ஏனைய ஐந்து படைவீடுகளும் கூடியவரையில் நல்ல ஸ்திதியிலிருக்கின்றன.

ஆருவதாகிய பழமுதிர்சோலையோ, அந்தோ! இப்போது இல்லாமற் போயிற்றே! அதற்குப் பக்கத்தில் "கள்ள அழகர் கோயில்" என்னும் விஷ்ணு க்ஷேத்திரம் இருக்கிறது. இது மதுரைக்கு வடகிழக்கு 12 மைல் தூரம். நான் மதுரையில் முன்சீபாக இருந்த போது இதைப்போய்ப் பார்த்தேன். அங்கே ஊர் ஒன்றுங் காணேம். பழமுதிர்சோலை காட்டிலிருந்தபடியாலும், அக்காலத்தில் வைணவர்களுக்குச் செல்வாக்கிருந்தபடியாலும் ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயத்தை அவர்கள் இடித்து நிரவிவிட்டார்கள். விக்கிரகங்களை என் செய்தார்களோ தெரியவில்லை. பெருமாள் கோயில் மட்டுந்தான் இப்போதிருக்கிறது. இது என்ன அநியாயம்! முருகக் கடவுளுடைய ஆறுபடை வீடுகளில் ஒன்று போய்விட்டதே! பரிதாபம்! பரிதாபம்! இதுபோய் இப்போது சுமார் 400 வருஷங்களுக்கு மேலாகிறது. இவ்வரும்பதிக்கு ஸ்ரீ நக்கீர தேவருடைய திருமுருகாற்றுப்படையும், அருணகிரி நாதருடைய திருப்புகழ் முதலானதும் இருக்கின்றன. இதுவரையில் இக்கோயிலை மறுபடி கட்ட முயன்றாரில்லை. அதைக்கட்ட வேண்டுமென்கிற சிரத்தை கூட ஒருவருக்குங் கிடையாது.

இதை நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்களாகிய உங்களுக்கு அறிவித்தால் நீங்கள் இதைக்கட்ட முயலுவீர்களென்று நம்பி உங்களுக்கே இவ்விண்ணப்பம் செய்துகொள்ளத் துணிந்தேன். வேறெவரால் இது முடியும்? ஆதலால், கனவான்களே! உங்களால் தான் இப்பெரும் புண்ணியம் நிறைவேறவேண்டும். திருக்குளம் ஒன்று அங்கே யிருக்கிறது. அது சுப்பிரமணிய சுவாமியினுடையது என்று சொல்லுகிறார்கள். அதைப் பழுது பார்த்து, அதன் பக்கத்தில் கோயில் ஒன்று கட்டி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியினுடைய திருவுருவமும், தெய்வயானையம்மை, வள்ளியம்மை திருவுருவங்களும் அமைப்பித்து பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம் செய்யவேண்டுவது தான். விநாயகர் உருவமட்டும் அழகர் கோயிலிலிருக்கிறது. அவர் வலம்புரி விநாயகர்: நான் பார்த்திருக்கிறேன். வைணவர்களைக் கேட்டு வாங்கி அவரையும் பிரதிஷ்டை செய்துவிடலாம். இவைகளெல்லாம் செய்ய ஒரு லக்ஷ

ரூபாய்க்கு மேலே பிடிக்காது. செட்டிமார்களுக்கு இது லக்ஷியமா? இப்பெரும் புண்ணியத்தைக் கைவிடாதீர்கள். உங்களில் யாரே னும் ஒருவர் இந்த தருமத்தை யெடுத்துக்கொண்டு செய்து விட லாமே. இதைச் செய்துமுடித்தால் ஆறுபடை வீடுகளும் சரியா யிருக்குமே. பழமுதிர் சோலை என்னும் பழம்பதியைப் போய்த் தரிசித்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியை வணங்கலாமே! பழமுதிர் சோலைக்குள்ள திருப்புகழ் முதலிய பாடல்களைச் சொல்லி அவரைத் துதிக்கலாமே! இந்தப் புண்ணியங்கள் எல்லாம் இக் கோயிலைப் புதுப்பிக்கும் புண்ணியவானுக்கல்லவோ கிடைக்கும்.

இனிக் காலதாமதஞ் செய்யாமல் இப்பெரும் புண்ணியத்தை ஆரம்பித்துச் செய்து முடித்து சிவனடியார்கள் அனைவருக்கும் அளவில்லா மகிழ்ச்சியை யுண்டுபண்ணி, நீங்கள் பேரானந்தத்தை யும் பெரும் புகழையும் அடையும்படி முருகக்கடவுள் திருவருள் புரிவார் என்று அவருடைய ஸ்ரீ பாதாரவிந்தங்களை மிகவும் தாழ்மை யாய்ப் பணிகின்றேன்.

☞ வ. த. சுப்பிரமணியபிள்ளை.

## அநுபந்தம் IV

### சிறப்புப்பாயிரம் முதலியன.

(1)

மஹா மஹோபாத்தியாயர் பிரமஸ்ரீ

உ. வே. சாமிநாதையரவர்கள் இயற்றியவை. [14–10–1920]

விருத்தம்

பூவரு மமல னயிற்கரச் செவ்வேள் பொன்னடி யேநினைந் துருகித்
தாவரு மருண கிரிப்பெருங் கவிஞன் சாற்றிய திருப்புகழ் பலவும்
மேவரு நிலையை யுணர்ந்தவ னருளே மெய்த்துணை யாக்கொடுதேடி
யாவரும் பெறச்செய் சுப்பிர மணிய வேந்தல்சீ ரியம்புறற்பாற்றே.

தக்கசீர் நீதிபதியெனத் தான்சேர் தலந்தொறு முளசிவா லயத்தின்
மிக்கசீர்த்தமிழ் நூல்பலவெளிவர்ச்செய் மேதகை யானடிநினைந்தே
நெக்கசி ருளத்த னவனடி யவர்பா னேயமிக் குடையவ னெங்குந்
தொக்கசீர் மிகுத்த சுப்பிர மணிய சுகுணவேள் போல்பவர் யாரே?

---

## (2)

### சேலம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சரவணபிள்ளை அவர்கள் இயற்றியவை.

### (i) திருப்புகழ்ச் சிறப்புப் பாயிரம்

வேதமுதற் பொருளியல்பைப் பரமனிரு செவிமடுப்ப விளம்புஞ் [செவ்வேள்
மேதகுமெய்ப் புகழுயர்ச்சி திருப்புகழென் றொருபெயரால் [விளங்கக் காட்டிப்
பூதலத்தி லருணகிரி நாதர்திரு வாய்மலர்ந்த புனிதப் பாடல்
ஏதமறு பதினாறு யிரமென்பா ரதன்பெருமை யியம்பற் பாற்றோ.

அன்னவற்றி லொருசிலவே அச்சுவா கனத்துலவ அவற்றை நாளு
மன்னியவன் பாலோதி யுளமுருகிப் பாராட்டி வருங்கா லின்னும்
பன்னுபல பாடலுள வெனும்பான்மை தெரிந்தவையும் பயில [வேண்டும்
இந்நிலத்தி லெனுங்காதல் முதிர்தரலா லியன்றமுயற் றிழைப்பா [மென்றே. (உ)

மூவாரு ளியவாக்கிற் சிலகேட்டுக் கனிந்துருகி முழுதுங் காணற்
காவல்பெரு கியவளவர் கோன்முயன்ற திறநிகர்ப்ப அரிய பாடல்
மேவுதிருப் புகழ்முறைக ளிருக்குமிட னினிவினவி விருப்பாற்றேடித்
தாவிலா திருந்தபல பிரதிவா நோக்கியின்பச் சலதி மூழ்கி. (௩)

ஆங்கவற்றி லடங்கியநற் பனுவலளா வீரறுநா ருக வுள்ளம்
எங்கியே யேனையவை எக்கதிபுக் கனவோவென் றினைந்து ஞானத்
தோங்குமறு முகப்பரமன் திருவருள்போன் மிதுவெனத்த னுள்ளந்
[தேறிப்
பாங்குபெற வவையெங்கும் பயின்றின்ப மிகவிளைக்கும் பான்மை
[நாடி. (ச)

செல்லேறிப் பலவகைய வழுஉப் பொதிந்து சிதைந்துமுறிந்
[தகவை நீண்ட
புல்லேட்டைத் தக்காரைக் கொடுதிருத்தி யுறத்திருத்திப்
[பூம்பா வைப்போர்
வில்லேறு மதிமுகத்தாள் பொடியினின்று மேலெழுந்த வியப்பீ
[தென்ன
மல்லேறுந் திருப்புகலூர்த் தேம்பாவை யச்சியற்றி வழங்கி னுறல்.

மன்னுசிவ புண்ணியமா மிப்பணியைக் கடப்பாடாய் மதித்துச்
[செய்த
அன்னபெருந் தகையாரென் னிடிற்புகல்வேந் தொண்டைநாட்
[டகத்து மேவிக்
கன்னியுமை யறம்வளர்க்குங் கச்சிநகர் மேல்பாலுங் கவின்வன்
[றொண்டர்க்
கன்னமறி யாப்பரம னன்னமிரந் தூட்டுகச்சூ ரதுகீழ் பாலும். (சு)

விடக்குப்பட் டொளிர்வேலோன் சூர்முதலைப் பொருதழித்த வீர
[மாறக்
கடக்குப்பட் டணிந்ததெனத் திகழ்முலையா ரிருவரொடுங் களிப்பு
[நீடித்
தடக்குப்பட் டலர்முப்பூத் தவறாது சூடுதிருத் தணியாம் வெற்பு
வடக்குப்பட் டிடவுநின்ற *வடக்குப்பட் டெனும்பதியில் வந்த
[தூயோன். (எ)

---

* வடக்குப்பட்டு எங்கள் முன்னோர்களிருந்த ஊர்.

பரவுபுகழ் பெருகியசீர் கருணீக மரபுதித்தோன் பாரி லாசை
விரவுதாரக் கௌதமனார் கோத்திரத்தான் முரணிருவர் மேலுங்
[கீழும்
துருவியுநா டருமருணைப் பரமனடிப் புகழ்நாளுந் தூய வன்போ
டுரைசெய்தணி காசலப்பேர்ச் சுகுணனுனற் றியதவத்தி னுருவாஞ்
[சீலன். (அ)

இலக்கணமுற் றிடக்கமலை முனமளித்த மாரனுரு விழந்தோ னாகி
அலக்கணுற்ற திறநோக்கி யவனிலுமிக் குயர்சேயை யாய
[நோன்பால்
நலக்கவளித் தெனக்கணவன் மொழிகடவா விருந்தோம்பு
[நலஞ்சால் கீர்த்தி
இலக்குமியாம் பெண்ணரசி யீன்றெடுத்த தனிப்பால னின்னுங்
[கேண்மின். (கூ)

நலமருவு வாய்மைமுதற் பலகுணமு நிறைந்துசிவ ஞானம் பத்தி
இலகுழப்பூண் டகங்கார மறவிடுத்துத் துலாக்கோலி னியல்பீ
[தென்ன
நிலமிசையோர் புகழ்ந்துரைப்ப நீதிபதி யதிகார நிகழ்த்து சீரான்
வலமருவு தணிகேச னடிபணிசுப் பிரமணிய மகிபன் றானே.(கo)

(ii) திருத்தருப்பூண்டி மான்மியச் சிறப்புப்பாயிரம்.

மறைமுடியிற் பொருளான வில்வவனப் பெருமான்றன் மான்மி
[யத்தைத்
தறையிலுள்ளா ரெளிதுணரக் கத்தியரூ பத்தாற்செந் தமிழிற்
[செய்தான்
நிறைமதியன் மெய்ப்புகழ்சேர் நீதிபதி யதிகார நிகழ்த்து மேலோன்
நறையொழுகு கடம்பணிவே லடிபணிசுப் பிரமணிய நயவான்
[மன்றே.

(3)

திருப்பாதிரிப்புலியூர் இயற்றமிழாசிரியர்
க. ரா. சிவசிதம்பர முதலியார் இயற்றியது.

பிரமோத்தர காண்ட வசனச் சிறப்புப்பாயிரம்

உலகிற் சான்றோ ருடைத்தெனுஞ்சொல் லோங்குந் தொண்டை
[நன்னாட்டில்
ஒப்பில் காஞ்சிப் பதிக்கணித்தா யுறுஞ்செங் கற்பட் டெனுமூரில்
இலகும் புகழ்சீர்க் கருணீக மரபிற் றணிகா சலவேந்தற்
கினிய சுதனாய்ச் சுப்பிரம ணியப்பேர் பெறுசற் குணசீலன்
நிலவுந் தனிக்கோல் வரதுங்க ராம நிபுணன் நிகழ்த்துசிவ
நெறியார் பிரமோத் தரகாண்ட நிறைந்த பொருளை நெடியகடல்
சுலவும் புவியோ ரெளிதுணரத் துகடீர் வசனத் தமிழ் நடையாற்
சுருங்க எழுதி யச்சியற்றித் தந்தா னுலகந் துதித்திடவே.

(4)

சிவஸ்தல மஞ்சரியைக் குறித்த அபிப்பிராயங்கள்.

(i) மஹாமஹோபாத்தியாயர் - உ. வே. சாமிநாதஐய ரவர்கள் :-

" இப்புத்தகத்திற் பாடல்பெற்ற சிவஸ்தலங்களின் பல விசேடங்களைப் படிப்பவர்கள் எளிதிலறிந்து கொள்ளும்படி வகைப்படுத்தித், திருத்தமாகத் தாங்கள் செய்திருக்கும் அமைப்புக்கள் மிகப் பாராட்டற்பாலன. தேவாரம் முதலிய தக்க ஆதாரங்களைக் கொண்டு ஸ்தல விசேடங்களைச் சுருக்கமாக அங்கங்கே வெளிப்படுத்தி யிருத்தல் பெரிதும் ஆநந்தத்தை விளைவிக்கின்றது. பலவருடங்களாக மிக முயன்று யாத்திரைசெய்து விசாரித்துத் தாங்கள் விளங்க அறிந்த அரியபெரிய விஷயங்களைச் சிவநேசச் செல்வர்கள் யாதொரு வருத்தமுமின்றி அறிந்து யாத்திரை செய்து உய்யும்வண்ணம் இப்புத்தக மூலமாக வெளிப்படுத்திய மகோபகாரவிஷயத்தில் இத்தமிழ்நாடு மிகவும் நன்றி பாராட்டற்குரியது " [1905ளு]

(ii) ஸ்ரீமான் - பொ. பாண்டித்துரைத்தேவ ரவர்கள் :—

" தாங்கள் வரைந்துள்ள இந்நூல், சிவஸ்தலங்களின் அருமை பெருமைகளையும் அவற்றின் வரலாறுகளையும் சுருங்க விளங்க வுரைப்பதோடு, தலயாத்திரைபுரியும் அடியார்கட்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. இத்தகைய நூல், சைவராயி ஞர் ஒவ்வொருவர் கையினும் தவறாதிருத்தற்குரியது என்பதில் ஐயமில்லை." [1905௵]

(5)

## TESTIMONIALS &c., OF V. T. SUBRAMANYA PILLAI

---

The bearer of this, V. T. SUBRAMANYA PILLAI, has been a scholar of the Free Church Mission School in Chingleput for about 5 years, and a teacher in the same for about 2 years. The undersigned has superintended him for the last 5 months, and been satisfied with his good behaviour, regularity, and diligence.

CHINGLEPUT, *January* 30*th*, '65. (Signed) **G. J. METZGER**, *Missionary*.

---

FREE CHURCH MISSION HOUSE,
21*st February* 1867.

V. T. SUBRAMANYAN has been for many years a pupil in our schools, and was for a short time also a teacher. He has just passed the F. A. Examination (first class). I have a very high opinion of his character and abilities.

(Signed) **WILLIAM MILLER.**

CHURCH OF SCOTLAND MISSIONARY
INSTITUTION.
MADRAS, *September 26th*, 1867.

**Subramanya Pillai** was a Teacher in the Church of Scotland Mission School for a period of six months. I found him quite a trustworthy man and a good useful Teacher. He was punctual and unfailing in his attendance: he often supplied the place of others less regular than himself, but his own place was never vacant. He has solid qualifications and he did his work painstakingly. I was sorry when he saw fit to leave our school.

(Signed) **GEORGE ANDERSON**,
*Missionary*.

---

FREE CHURCH MISSION HOUSE,
MADRAS, *August 11th*, 1869.

I have known **V. T. Subramanyan** for nearly five years, and have pleasure in bearing testimony to his intelligence and good character. He was a student in the Free Church Mission Institution when I first knew him, and from the first I formed a favourable opinion of him, which I have through close acquaintance with him since only got confirmed. As a teacher he discharged his duties faithfully and efficiently and when I wanted a trustworthy clerk, I appointed him to the office. In it he has conducted himself to my entire satisfaction, and has always proved himself a faithful and conscientious servant.

(Signed) **WILLIAM STEVENSON M.A.**,
*Missionary of the Free Church of Scotland*.

I appointed this officer who was a Clerk in the Free Church Mission School (Madras) as 2nd Writer and then promoted him to his present post of Head Clerk. He is methodical and does his work very efficiently.

(Signed) **W. HODGSON**

14*th February* 1872. *Civil Judge.*

---

**V. T. Subramanya Pillai** has been Head Writer of the District Court during the time I have been Judge (February 1872—April 1874). He is a man of unpretending manners, but an excellent public servant: regular and very accurate, very few errors in a draft escape him; though of comparatively recent employment in a Court, he has acquired a discriminating knowledge of all its departmental procedure. * *

(Signed) **R. SWINTON**

24*th April* 1874. *Dt. & Session Judge.*

---

**V. T. Subramanya Pillai** has been Head Writer during the entire five years that I have been Judge of this Court. His diligence, talents, and rectitude entitle him to a far better position in the Judicial Service than he at present holds, and I am satisfied he would make an excellent Munsif.

(Signed) **O. B. IRVINE**

30*th August* 1879. *Dt. & Session Judge.*

---

*Extract from a letter to the High Court dated the 1st September 1879, No. 29.*

I wish to bring the names of the following gentlemen prominently to the notice of the High Court with a view to their being appointed District Munsifs as occasions offer.

* * * *

V. T. Subramanya Pillai has been the Head Clerk of the Court throughout the five years that I have presided in it, and for some years previously. He has qualified for the office of District Munsif, and his long service in the Judicial branch of the service has gained for him experience which would eminently fit him for the Munsif's office. Subramanya Pillai is a very hard working man, has excellent business habits, and is also well spoken of for his strict integrity.

I earnestly trust that in due course all my nominees may be provided for by the High Court.

(Signed) **O. B. IRVINE**
*Dt. Judge.*

---

*Extract from a letter to the High Court dated 11th January 1882, No. 1.*

* * * *

His service in the Judicial Department extends over a space of 12 years, during the last 10 years of which he has been Head Clerk and performed the duties of his post to the satisfaction of successive Judges, including myself. I think well of the applicant's capacity and character, and accordingly I have the honour to request that the

High Court will be pleased to consider his claims when a District Munsif's place falls vacant.

*                *                *                *

(Signed) **J. H. NELSON**

*Dt. Judge.*

---

*Endorsement on an application to the District Judge of North Tanjore for the post of Sheristadar in that Court.*

I consider the applicant perfectly qualified in every way for the post sought and hope he may get it.

(Signed) **J. H. NELSON**

*8th June* 1882.                *Dt. Judge.*

---

Subramanya Pillai has behaved uniformly well up to the date of my giving over charge. I have nothing to add to my previous certificates in his behalf.

(Signed) **J. H. NELSON**

CUDDALORE,
*17th December* 1882.                *Judge, Chingleput.*

---

*Extract from a letter to the High Court dated the 10th September 1883, No. 54.*

*                *                *                *

I have the honour to express a hope that, should the office of District Munsiff of Vriddhachalam fall vacant, the appointment may be conferred upon one or other of the three candidates marginally noted, all of whom I consider fully competent for the discharge of the duties of the office.

1. **V. T. Subramanya Pillai**, Head Clerk, Dt. Court.
2. *    *    *
3. *    *    *

(Signed) **J. HOPE,**

*Dt. Judge.*

*Extract from a letter to the High Court dated the 10th May 1886, No. 49.*

As the District Munsiff of Viluppuram retires from the public service from the 1st July 1886, I request that the High Court will be good enough to take early steps towards filling the vacancy.

My Head Clerk **V. T. Subramanya Pillai** has acted as District Munsif of Cuddalore on 3 occasions during the last two or three years and acquitted himself to my entire satisfaction in the discharge of the work. He has held the post of Head Clerk in this Court with great credit to himself for no less a period than 14 years, and is entitled to promotion.

* * * * *

Since I joined this District (now 3½ years ago) no District Munsif has been permanently appointed on my recommendation, and I therefore trust that on this occasion my nominee **V. T. Subramanya Pillai** may be appointed.

(Signed) **J. HOPE**,
*District Judge.*

---

*Letter to High Court dated the 30th October 1886, No. 87.*

As the time is approaching when the District Munsif of Chidambaram N. Appavaiyar will retire from service, I have the honor to draw the attention of the High Court to the claims of my Head Clerk **V. T. Subramanya Pillai** to succeed him, or at least to be appointed a permanent District Munsif in the arrangement that will be made. He has on four occasions acted as District Munsif for

short periods during the last few years in this District, and acquitted himself entirely to my satisfaction.

(Signed) J, **HOPE**,
*District Judge.*

Extract from the Administration Report of the District Court for 1886, dated Cuddalore, 13th April 1887.

* * * *

40. The number of suits disposed of by District Munsifs in the District during 1886 was as follows:—

| ORIGINAL SUITS. | Pending at the beginning of 1886. | For disposal in 1886. | Disposed of in 1886. | Pending at the end of 1886. |
|---|---|---|---|---|
| 1. Cuddalore. ... | 130 | 1022 | 899 | 123 |
| 2. Chidambaram. | 198 | 1036 | 787 | 249 |
| **3. Villuppuram.** | **345** | **1353** | **1100** | **253** |
| 4. Vriddhachalam. | 176 | 873 | 662 | 211 |
| 5. Tirukkovalur. | 240 | 975 | 787 | 188 |
| TOTAL ... | 1089 | 5259 | 4235 | 1024 |
| SMALL CAUSES. | | | | |
| 1. Cuddalore ... | 39 | 1758 | 1627 | 131 |
| 2. Chidambaram ... | 34 | 442 | 408 | 34 |
| **3. Villuppuram** | **140** | **903** | **818** | **55** |
| 4. Vriddhachalam | 50 | 514 | 426 | 88 |
| 5. Tirukkovalur. | 56 | 590 | 548 | 42 |
| TOTAL ... | 319 | 4207 | 3857 | 350 |

41. The foregoing tables show that of the 5 Courts in the District the Viluppuram Court had the largest file during the year. It had the largest number of pending cases at the beginning of the year, (Original Suits 345 and

Small Causes 140); the largest number of cases for disposal during the year, (Original Suits 1353 and Small Causes 903); and it showed the largest number of disposals at the end of the year, (Original Suits 1100 and Small Causes 848), still leaving the largest number of Original Suits (253) pending at the end of the year.

42. During the year under review this Court was presided over by three District Munsifs, and the returns show that the disposals during the 1st and 2nd Quarters were less than the disposals during the 3rd and 4th Quarters, the largest number of disposals viz., 396 Original Suits (including 29 suits which had been pending for more than one year) and 294 Small Causes being during the 3rd Quarter, and the greater part of these disposals including the 29 older suits being during the 1st and 2nd months of that Quarter when the Court was presided over by the Acting District Munsif **V. T. Subramanya Pillai**.

* * * *

(Signed). **J. HOPE.**
*District Judge.*

I continue to have the same high opinion of **V. T. Subramanya Pillai.** This has been well tested during the past year, for the greater portion of which he has acted as Court Sheristadar as well as District Munsif (for 2 months). I hope he will soon be appointed permanently as District Munsif, a post for which I consider him well qualified.

(Signed) **J. HOPE.**
18. 4. 87. *District Judge.*

No. 469.

Proceedings of the High Court of Judicature at Madras, 24th February 1890.

*　　　*　　　*　　　*

3. The High Court observes with satisfaction that the work done by the *District Munsif, Namakal*, is creditable in quality as well in the number of cases disposed of, no less than 74 *per cent.*, of his decisions having been confirmed on appeal.

*　　　*　　　*　　　*

(True Extract)

(Signed) **H. W. FOSTER**,
*Offg. Registrar, A. S.*

---

*Extract from History of Services of Gazetted Officers.*

---

## Vadakapat Tanikachalam Subramaniyam Pillai.

*Joined the Service, 1st Feb. 1870; Born, 11th Dec. 1846.*

| *Station.* | *Substantive appointment* | *Date.* | *Officiating appointment* | *Date.* |
|---|---|---|---|---|
| Cuddalore | .. 2nd Engl. Writer, Civil and Sessions Ct. | 1st Feb. 1870.. | | |
| Do. | ..Head Writer. | 1st Dec. 1871.. | | |
| Do. | ..Head Clerk and Nazir. | 1st April 1879. | | |
| Do. | .. Do. | .. — | Dist. Munsif .. | 4th Feb. 1884. |
| Do. | .. Do. | ..12th Mar. 1884. | | |
| Do. | .. Do. | .. — | Dist. Munsif .. | 2nd Mar. 1885. |
| Do. | .. Do. | ..23rd Mar. 1885. | | |
| Do. | .. Do, | .. — | Dist. Munsif .. | 17th Sept. 1885. |
| Do. | .. Do. | ..14th Oct. 1885. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| Viluppuram | Head Clerk and Nazir | — | Dt. Munsif 4th Grade. | 10th July 1886. |
| Cuddalore | Do. | — | Sheristadar Dist. Court. | 31st Aug. 1886. |
| Do. | Do. | 14th Dec. 1886. | | |
| Do. | Do | — | Sheristadar | 7th Jan. 1887. |
| Do. | Do. | 7th Mar. 1887. | | |
| Sholingar | Do. | — | Dt. Munsif, 4th Gr. (sub *pro tem*). | 26th Aug. 1887. |
| Tiruvallur | Do. | — | Dt. Munsif, 4th Grade. | 26th Oct. 1887. |
| South Arcot | Do. S. Arcot. | 19th Jan. 1888. | | |
| Viluppuram | Do. | — | Dt. Munsif, 4th Grade. | 16th Feb. 1888. |
| South Arcot | Do. | 17th Apl. 1888. | | |
| Namakal | Dist. Munsif, 4th Grade | 29th May 1888. | | |
| Kumbakonam. | Do. | 3rd Jan. 1892. | | |
| Do. | Do. 3rd Gr. | 1st July 1892. | | |
| Tiruturaipundi. | Do. | 20th June 1894. | | |
| Tirumangalam. | Do. | 5th July 1897. | | |
| Do. | Do. 2nd Gr. | 29th Sep. 1897. | | |
| Manamadura. | Do. | 2nd Jan. 1899. | | |

**Retired from Service—11th December 1901.**

---

## PROCEEDINGS OF THE MADRAS GOVERNMENT.

### Order No. 163, 18th March 1902.

Under articles 509 and 518 (*b*) of the Civil Service Regulations (3rd edition), His Excellency the Governor in Council is pleased to grant to M.R.Ry., **Vadakapat Tanikachalam Subramania Pillai** Avergal, late District Munsif of Manamadura, a retiring pension of Rupees (145-15-11) one hundred and forty five, annas fifteen, and pies eleven *per mensem* payable at Conjeevaram from the 11th December 1901 in consideration of his

qualifying superior service of 31 years, 10 months and 10 days.

(True Extract)

(Signed) **A. T. PRINGLE,**

*Assistant Secretary to Government.*

**[Certificate and report from the Accountant General, No, A. D. J./544, dated 13th March 1902. Letters from the District Judge, Madura, No. 1348, dated 5th March 1902 and No. 2472, dated 26th March 1902.]**

## அநுபந்தம் V

### சரமகவி.

### அறுசீரடி விருத்தம்.

திருத்தணிகைப் பெருமானே விண்ணப்பம் ஒன்றுண்டு [செப்பு கின்றேன்
அருத்தியினோ டெனைவளர்த்தே ஆதரித்த எந்தையிந்த [அவனி விட்டே
திருத்தமதாம் முத்தியதாம் நின்சரணஞ் சேர்ந்தனரோ [செப்ப வேண்டும்
பொருத்தமதாம் ஒருதுணிவுந் தோன்றாது திகைத்தேங்கிப் [புலம்பு கின்றேன். (1)

மையாருங் கண்டத்தர் மைந்தாநந் திருத்தணிகை மலையில் வாழும்
ஐயாநின் திருப்புகழை அன்புடனே அச்சிலிட்டே அவனி யுள்ளோர்
பொய்யான நெறிநீங்கி மெய்யான வழிபற்றும் போக்கைத் தந்த
மெய்யாள ரெந்தந்தை எங்குற்றார் எங்குற்றார் விளம்பல் வேண்டும்.

---

இந்நேரம் ஆயிற்றா ஆபீஸி லிருந்துவர என்று கேட்கும்
அந்நேயச் சொற்கள்பல இனியென்று கேட்பேன்நான் அந்தோ [அந்தோ
தன்னையத் தாயிழந்த கன்றெனவே தனியேனுந் தளரா நின்றேன்
உன்னையத் திருப்புகழெனுங் குளதோஎன் றுசாவுதற்கோ உம்பர்ச் [சென்றாய். (3)

நெஞ்செல்லாம் புண்ணானோம் கண்ணெல்லாம் நீரானோம் [நினைக்குந் தோறும்
எஞ்செல்வா எங்குற்றாய் என்றழுவோம் என்செய்தும் [இனியாம் என்றோ
அஞ்சொல்லாய் உனைக்காண்ப தென்றிரங்கி நைகின்றேம் [ஆத லால்நீ
செஞ்சொல்லா லுறுதிநிலை யொன்றெமக்குத் தேர்ந்துணரச் [செப்பாய் செப்பாய். (4)

மூச்சற்றுப் பேச்சற்று நீகிடந்த கிடக்கையையாம் முன்னுந் தோறும்
ஆச்சற்ற தெம்வளமெல் லாமன்றோ டெனக்கவன்றும் அத்தன் [சீர்த்திப்
பாச்சொற்ற திருப்புகழே எந்நாளுஞ் சிந்தனைசெய் பண்ப னின்றன்
ஏச்சற்ற தூமொழியைக் கேட்பதென்றோ எனக்கவன்றும் ஏங்கு [கின்றேம். (5)

துடிதுடித்தோம் பதைபதைத்தோம் செயலழிந்தோம் நெஞ்சமது [துளங்கி ஏங்கிக்
கடிதடிப்பக் கருத்தழிந்தோம் கண்ணாஎன் அண்ணா! மின் காணா [முன்னம்
இடியிடித்த செயலெனவே இப்போது மணியென்ன என்று கேட்டு
நொடிபடுமுன் நீமறைந்த மாயமதை யெண்ணி மனம் நொந்து [நொந்தே. (6)

சில்லென்று நினதுடலம் ஆனதைக்கண் டையோஎஞ் செல்வா [என்றேம்
கல்லென்று கதறியழு தலமந்தே இதுநனவோ கனவோ என்றேம்
இல்லென்ற இதுமாயை எனவோநீ யிவ்வுலகம் இகந்தாய் என்றேம்
அல்லென்ற மணிமிடற்றோன் அருள்புதல்வன் அருளிதுவோ [அந்தோ என்றேம். (7)

அப்பாநின் னருளிதுவோ ஒருவார்த்தை யுரையாடா தகன்று
[யென்றேம்
இப்பாரில் உண்மைநெறி நிற்பாருள் உனைப்போல்வார் யாரே
[என்றேம்
மெய்ப்போத நெறிகாட்டுந் திருப்புகழை யச்சிலிட்ட மேலோய்
[என்றேம்
எப்பாடு மில்லாது சுகமுடிவு கண்டவரே என்றேம் என்றேம். ()

பற்றுள்ள அடியார்நிதம் பயிலுதற்குத் திருப்புகழிற் பாவா திங்கு
மற்றுள்ள பாடலெலாம் யாண்டுளதென் றறுமுகன்பால் வழியே
[கேட்டும்
உற்றுள்ள துள்ளபடி மறுபிறப்பே னும்மெடுத்தே உலகுக் கீவேன்
கற்றுள்ள அன்பர்களே இதனுண்மை காண்பிரெனக் கடந்தாய்
[கொல்லோ! (9)

கன்னேரு மென்னெஞ்சுங் கரைந்துருகத் தேவாரங் கனிவி
[லோதும்
மன்னேநின் பத்தியெனுங் கடலினுக்கோர் கரையுண்டோ மாசில்
[லாதோய்
பொன்னேநின் மொழிகளெலாம் புகழேநின் திருவுடலம் பூதி
[சான்றோய்
என்னேநின் னருட்பெருமை என்னேநின் குணசீலம் என்னே
[என்னே! (10)

காற்றுள்ள போதேநீ தூற்றிக்கொள் எனுமுறையைக் கருதி வேலை
யாற்றிவரும் நாளில்ராஜாக் காலமெலாம் சிவதலங்கள் அன்பிற்
[சென்றே
போற்றிமதி சூடிதல விளக்கநூல் வெளியிட்ட பூபா உன்றன்
ஆற்றலதை என்னென்றே எடுத்துரைத்துப் புகழ்வேன்நான் அப்பா
[அப்பா! (11)

## கட்டளைக் கலித்துறை.

துப்பான மார்க்கஞ் செலவெனத் தணிகைத் தயாபரனுக்
கொப்பான தெய்வமொன் றில்லை யதனு லுவன்புகழை
எப்பாடு பட்டும் பெருக்குவ னென்றே யிவணுதித்த
அப்பா உனைவிட் டிருப்பதெவ் வாறே அருளுதியே. (12)

அறுசீரடி விருத்தம்.

இதுவோ தேடித் தேடிவெளி யிட்டு மகிழ்ந்த திருப்புகழ்நூல்
இதுவோ அன்போ டெழுதிவெளி யிட்ட பிரமோத் தரகாண்டம்
இதுவோ நீயச் சேற்றிவெளி யிட்ட நீடூர்ப் புராணமது
இதுவோ ஈசன் தலவிளக்கம் யிதுவோ பூண்டி மான்மியநூல். ()

இதுவோ அவ்வா னரமதுரை யென்னுந் தான மான்மியநூல்
இதுவோ நீவேண் டியவண்ணம் எழுந்த ஆநூர்ப் புராணநூல்
இதுவோ உன்சொல் வழிவந்த எந்தை பூவண் ணத்தருலா
இதுவோ ஆரல் நாள்தோறும் இங்கு நீசெய் தனிப்பாடல். (14)

தங்கு புகழோய் உன்சொல்வழித் தணிகை யமக அந்தாதி
இங்கு வந்த திதுவேயோ இதுவோ தணிகைத் திருப்புகழ்நூல்
சங்கை யறநீ பதிப்பித்துத் தந்த திருவுத் தரகோச
மங்கை மங்க ளேசுரியின் மதித்த பிள்ளைத் தமிழிதுவோ! (15)

---

## அநுபந்தம் VI

சுப்பிரமணியபிள்ளை அவர்கள் இயற்றிய

## தனிப் பாடல்கள்.

### விநாயகர்

[மஞ்சகுப்பம் கடைத்தெருவி லிருக்கும்
விக்கினேசுரர்மேற் பாடியது.]

வெண்பா.

செல்வக் கணபதியே சீரளிக்குந் தெய்வமே
கல்விக் குறுதுணையே கற்பகமே—நல்லவர்வாழ்
மஞ்சகுப்பந் தன்னில்வளர் மாமணியே யென்றுமெங்கள்
நெஞ்சகத்தி லேயுறைவாய் நீ. (1)

செஞ்சரணந் தந்துஞ் சிறியேந் தமையாண்டும்
எஞ்சலிலாப் பேரின்பம் என்றருள்வாய்—மஞ்சைவளர்
கோவே அடியர் குறைகள் தவிர்த்தருளும்
தேவே அருஞ்செல்வ மே. (2)

மூலமாய் நின்றருளு மூர்த்தியே முக்கணனும்
ஆலமார் கண்ட னருள்வோனே—சீலமார்
போதத்தாய் என்றுமன்பர் போற்றிப் பணியும்பொற்
பாதத்தாய் நீகடைக்கண் பார். (3)
பார்மீதி லென்போற் பரிதவித்து நிற்போர்கள்
யார்தா னிருக்கின்றார் எங்கோவே—சீர்தானம்
இல்லா எனக்கும் இபமுகத்தெந் தாயிரங்கிச்
சொல்லாயோ உய்யுந் துறை. (4)

### அறுசீரடி விருத்தம்.

யாதியற்றும் போதுமுதற் றொழப்படுநம் மிறையவனை
எழிலார் பாதப்
போதகத்து மறவாமற் பத்தியுடன் பூசனைகள்
புரியுந் தொண்டர்
தீதகற்றும் பெருமானைச் சிவபெருமான் சிவகாமிச்
செல்வன் தன்னைத்
தாதுகுக்கும் பொழிற்றணிகைச் சண்முகற்கு மூத்தவனைச்
சார்ந்து வாழ்வாம். (5)

### எழுசீரடி விருத்தம்.

எந்தகா ரியத்தை எவர்களே எனினும்
எடுப்பரேல் இனிததை முடிக்க
முந்தவுன் செந்தா மரைப்பதம் பணிந்தே
முயலுக என்றா னார்தாம்
சிந்தையில் மகிழ்ந்து செப்பின தால்நின்
சேவடி யென்றும்நான் மறவேன்
வெந்துயர் தீர்த்து வீடுபே றருள்செய்
வேழமா முகப்பெரு மானே. (6)

### கலிவிருத்தம்.

வித்தை அத்தம் விரும்பிய யாவையும்
சித்தி யாகவும் சீருடன் வாழவும்
முத்தி யென்னுநன் மோக்ஷ மடையவும்
அத்தி மாமுகத் தண்ணலை யேத்துவாம். (7)

ஆன இன்பம் அனைத்துமுண் டாகுமால்
ஞான மும்பல நன்மையு நன்கெய்தும்
வான நாடர சாளவும் வந்திடும்
யானை மாமுக னைப்பணிந் தேத்தவே. (8)

இரக்குந் தேவர்க் கிரங்கியோர் மாணியாய்
அரக்கர் கோனிடம் எய்தி அவன்செயல்
தரிக்கொ ணுவணஞ் செய்த தயாளனைங்
கரக்க ளிற்றினைக் காப்புக்கொள் வாமரோ. (9)

## சிவபெருமான்.

### கோயில்.

ஏக னுயுல குக்கெ லாமொரி றைவ னுயிம வான்மகள்
பாக னுய்ப்பரஞ் சோதி யாய்ப்பசும் பால்வெண் ணீறு விளங்கிய
தேக னுய்ச்சிவ லோக னுயெந்த தேவர் கட்குமொர் தேவனுய்
மோக னுய்மன்று ளாடு வான்எங்கள் முதல்வ னுகிய மூர்த்தியே. ()

### திருப்பாதூர்.

வெள்ளந் தங்கிய செஞ்சடையானை
விரும்பி வந்தருள் செய்யும் வேதியனை
கள்ளந் தங்கிய நெஞ்சுடை யார்கள்
கனவிலுஞ் சற்றுங் காண்பரி யானை
உள்ளந் தங்கிய அன்பினே டுருகி
யோது முத்தமர் தமைப்புரப் பானைப்
பள்ளந் தங்கிய நீருடைப் பாதூர்ப்
பரம யோகியைப் பணிந்துய்யென் மனனே. (2)

## திருப்பழனம்.

வேட னாகியே வில்லெடுத் தானை
வேங்கை யின்னத ளரையுடுத் தானை
மூட னந்தக்கன் மகங்கெடுத் தானை
முன்னம் பன்றிக்கு முலைகொடுத் தானை
கூடு சுந்தரர் மணந்தடுத் தானைக்
கூறு சேரன்பால் கவிவிடுத் தானைப்
பாட னட்டியம் ஓய்ந்திடாப் பழனப்
பரம யோகியைப் பணிந்துய்யென் மனனே. (3)

## சீகாழி.

காம னைக்கண்ணி னலெரித் தானைக்
கரியி னைக்கரத் தாலுரித் தானைச்
சோம னைத்திரு முடிதரித் தானைச்
சூர்யனைப் பற்கள் தாம்நெரித் தானை
ஏம னைக்கழ லாற்சரித் தானை
இடர்செய் கங்கைக்குச் சடைவிரித் தானை
பூம னைச்சிரம் ஒன்றறுத் தானைப்
புகலியிற் சென்று போற்றிஉய் மனனே. (4)

## திருவாலங்காடு.

சோதி யாகிய நல்லுரு வானைத்
தொல்லை யெல்லையில் தூய்மையி னானை
நீதி யாகிய செந்நெறி யானை
நித்தனை நிரை வளையணி மடந்தை
பாதி யாகிய பரமனை யன்பர்
பத்தி யாம்வலை யிற்படு வானை
ஆதி யாகிய அம்மையப் பனைத்தென்
னாலங் காடுசென் றடைந்துய்யென் மனனே. (5)

## இடும்பாவனம்.

கொடும்பா தகமே புரியுங் கொடியேன்
படும்பா டுகளோ பகர்தற் கரிதால்

விடும்பான் மையிதென் றறியேன் வெறியேன்
இடும்பா வனம்வா ழிறையே அருளே. [20-11-1896] (6)

கடிக்குளம்.

படிக்குளென் போலொரு பாவியிலை
இடுக்கண் தவிர்த்தெனை யென்றருளாய்
பொடிக்கொளு மேனியெம் புண்ணியனே
கடிக்குள மேவிய கற்பகமே. [20-11-1896] (7)

தண்டலை நீணெறி.

அண்டர் பிரானரி வாட்டாயன்
தொண்டை யுவந்தருள் தொல்பதியாம்
தண்டலை நீணெறி சார்ந்திடநம்
பண்டை வினைகள் பறந்திடுமே. [22-11-1896] (8)

திருவுசாத்தானம்.

கருவினிற் பலதரங் கட்டுண்டு கலங்கித்
திருடனைப் போலத் தியங்குமென் நெஞ்சே
ஒருவிசைப் பணியினும் உயர்கதி கொடுக்குந்
திருவுசாத் தானமே சென்றடைந் துய்யே. [4-12-1896](9)

திருக்கேதாரம்.

வேதாமுத லானோர், தாதார் மலர்தூவுங்
கேதார மெனீரே, ஆதார மதாமே. [—4-97] (10)

திருவாரூர்.

திருவாரூர் வாழுஞ் சிவனேநின் தாளை
மருவாரூர் மாளவைத்த மன்னு—கருவாரூர்
வீழாமற் குன்றன் விரைமலரை நாயேற்குத்
தாழாமற் றந்தருள்வாய் தான். (11)

## போது.

தில்லைக் கரசே திருவால வாயி லமர்ந்த செங்கரும்பே
வல்லத் தொளிர்செய் மாமணியே மாற்பே றுறையு மணிகண்டா
தொல்லைப் பிறவித் தீமையெனுந் தொடக்கா லந்தோ துறைகாணு
அல்லற் கடலி லலையுண்ணும் அடியேற் குன்சே வடியருளே. (12)

அருவே சரணம் அடியார்கட் கமுதே சரணம் அறியொண்ணு
உருவே சரணம் உத்தமர்க ளுவப்பே சரணம் உயர்நால்வர்
குருவே சரணம் வானவர்கள் கோவே சரணங் குறைவில்லாத்
திருவே சரணம் யாவர்க்குந் தேவே சரணஞ் சரணமே. (13)

வாழ்வு வந்து மன்னவர்கள் போல வாழ்ந்தே யிருந்தாலும்
தாழ்வு வந்து தரித்திராய்ச் சல்யப் பட்டே யுழன்றாலும்
தாழ்ந்த சடையான் ஒருவனிரு தாளே சதமாஞ் செல்வமென
ஆழ்ந்த அறிவோ டவற்பணியும் அடியார்க் கடியே னடியேனே. ()

ஐய னடியை யடைந்தவர்க ளஞ்சார்கள்
வெய்ய கொடுங்காலன் வெம்பி வரும்போது
செய்ய கமலச் சிவனடியைச் சேராதார்
ஐயோ அவர்க ளடையுங் கதியாதோ ! (15)

என்னை யாளுடை யீசனை யெம்பெரு மானை
தன்னை யேநிகர் சங்கர மாமணி தன்னை
பொன்னை யேயொத்த மேனியெம் புண்ணியன் புநிதன்
தன்னை யேசரண் அடைவது தக்கவர் கடனே. [18-10-1897]()

மாணிக்க வாசகரை வாழ்வித்த வல்லவரை
பேணிப் பணிந்துநல்ல பேறுபெறல் எக்காலம் ! (17)

பிறவாமை யும்பிறந்தால் பெம்மான் சிவனை
மறவாமை யும்பெற்று வாழுவதும் எக்காலம் ! (18)

நாதா அடியார்கள் நாளும் பணிந்தேத்தும்
வேதாஇவ் வேழை விருப்பெய்தல் எக்காலம்! (19)

ஏேன்றதெல்லாஞ் செல்லச் சிலகால மானாலும்
உன்றன் கழலிணையை உன்னுவதும் எக்காலம்! (20)

காலமெலாம் வீணே கழித்துவிட்டேன் ஐயாவே
சீலமுடன் உன்னையினிச் சிந்திப்ப தெக்காலம்! (21)

அல்லும் பகலும் அலைச்சலல்லால் வேறிலையென்
தொல்லையெலாம் நீங்கிச் சுகித்திருப்ப தெக்காலம்! (22)

எண்ணிறந்த நன்மைகளை என்றனக்குச் செய்தவுன்றன்
தண்ணளியைப் பாடிச் சதாமகிழ்வ தெக்காலம்! (23)

சஞ்சலமெல் லாமொழியச் சம்புவே உன்றனிடந்
தஞ்சமென யான்வந்து சாருவது மெக்காலம்! (24)

கண்டதைச்சொல் லிச்செய்து காலங் கழிப்பேனுன்
தொண்டனாய் நின்று துதிசெய்வ தெந்நாளோ! (25)

அல்லற் படுமிவ் வடியேனை ஐயாநீ
நல்ல நிலைதனிலே நாட்டுவது மெந்நாளோ! (26)

எண்ணற் கருந்துயரால் ஏங்குமெனைக் கைவிடுதல்
புண்ணியமோ ஓர்சொல் புகலாய் பராபரமே! (27)

நீரறியா தொன்றும் நிகழாதிந் நீணிலத்தில்
ஆரறிவா ரும்மகிமை ஐயா பராபரமே! (28)

என்னஇடர் வந்தாலும் ஏக்கமிக வுற்றாலும்
உன்னைநம்பி நானிருப்ப துண்மை பராபரமே! (29)

உன்பாத மேதுணையென் றுன்னை யடைந்தேன்நான்
என்பாவந் தீர்ப்பாய் இறைவா பராபரமே! (30)

அன்னைநீ பிள்ளைநான் ஆண்டவன்நீ நானடியேன்
என்னையீ டேற்றாத தென்னோ பராபரமே ! (31)

என்னசெய்கு வேனென் றிரங்கிநிற்கும் என்றனக்குத்
தன்னைநிக ரில்லாத் தயாபரநீ ஆதரவு ! (32)

முத்திக் கொருவித்தே மூன்னுக்கெல் லாம்முன்னே
பத்திக் கிலக்கே பசுபதியே—எத்திக்கும்
ஆயவனே உன்னை அடைந்தோர்க்குப் பெற்றஅருந்
தாயவனே நீயே சரண். (33)

## உமாதேவியார்.

தாயே திரிபுர சுந்தரி யேநின்றன் தாளிணைக்கண்
பாயே உருகி அலர்தூவி அஞ்சலி செய்தெனக்கு
நீயே கதிமற்றி யாருண்டு நின்மலை யேயிரக்ஷிப்
பாயே எனஅரு ளாயே பரம்பரை யேபரிந்தே. (1)

சிவசாம் பவியே சரணஞ் சரணம்
த்ரிபுராந் தகியே சரணஞ் சரணம்
பவநா சகியே சரணஞ் சரணம்
பரமேஸ் வரியே சரணஞ் சரணம்
தவமார் பயனே சரணஞ் சரணம்
ஜகதம் பிகையே சரணஞ் சரணம்
அவமா யுழல்வேன் தனையாண் டருள்வாய்
அமுதாம் பிகையே சரணஞ் சரணம்.

[23-11-1896] (2)

# முருகர்

[*உடுக்குறியிட்டன கிருத்திகை தினங்களிற் பாடிய தோத்திரப் பாடல்கள்.]

**வெண்பா.**

*அப்பா உனையன்றி ஆத ரவுவேறே
இப்பாரில் யாருண் டெளியேற்குச்—செப்பாய்
அருந்தணிகை மாமலைவாழ் ஆறுமுகத் தேவே
வருந்துமெனை யாதரிக்க வா.

[பிரஜோத்பத்தி ௵ ஆனி 30உ புதன்கிழமை; மஞ்சகுப்பம்.
12 ஜூலை 1871.] (1)

*துன்பந் தனையொழித்துத் தொல்பிறவி வேரறுத்தே
இன்பம் பெறலாமென் றெண்ணியே—வம்புந்துன்
தாளைநினை யாநிற்குந் தாசன் தனையிரங்கி
யாளநினை யாய்தணிகை யா.

[பிரஜோத்பத்தி௵ ஆடி மீ 26உ புதன்கிழமை; மஞ்சகுப்பம்.
9 ஆகஸ்டு 1871.] (2)

வேறு தாவுண்டோ மேதினியி லென்றனக்குக்
கூறாய் தணிகைவரைக் கொற்றவா—நீறுநான்
போமுன்னே யென்றனக்குப் போதிப்பாய் 'நின்பதத்தைத்
தாமுன்னே' யென்றிறைஞ்சத் தான். (3)

எந்தநாள் என்றன் இடர்யாவுந் தீருநாள்
எந்தநாள் இன்பம்வந் தெய்துநாள்—எந்தநாள்
உன்ற னடிபாவி உய்யுநாள் தென்றணிகைக்
குன்றுறையு மென்துரையே கூறு. (4)

பாவி யிவன்முகத்தைப் பார்க்கவுமொண் ணாதெனவே
நீவிடுவ துந்தகுமோ நீதியோ—தேவனே
இக்குவல யந்தனிலே எற்குனையல் லால்வேறு
திக்குளதோ தென்றணிகைச் சேய்! (5)

இறப்புதருஞ் சென்மம் எத்தனையெ டுப்பேன்
சிறப்புதருந் தென்றணிகைத் தேவா—வெறுப்புதரும்
இச்சென்மம் யாவுமொழித் தென்றுமின்புற் றேயிருக்கும்
அச்சென்மம் எற்கருளா யா. (6)

என்னதான் செய்தாலும் ஏழைக் குனையன்றிப்
பின்னையார் தென்றணிகைப் பெம்மானே—நின்னையே
நம்பி யிருக்கின்ற நாயேனை ஐயவுன்றன்
செம்பொற்றா ளுக்காளாச் செய். (7)

நீயே துணையல்லால் நீணிலத்தி லேயிந்தப்
பேயேனுக் கார்தணிகைப் பெம்மானே—நாயேன்முன்
செய்த பவமெல்லாந் தீரும் படிக்குமின்பம்
எய்தும் படிக்குமரு ளே. (8)

பன்னிபன்னி யென்குறையைப் பல்லா யிரந்தரம்நான்
சொன்னாலுந் தென்தணிகைத் தோன்றலே—இன்னாவைப்
போக்கவிலை யென்னையுன் பொன்னார் திருவடிக்கா
ளாக்கவிலை யீதநியா யம். (9)

தண்டா மரையானுந் தண்டுளவத் தாரானும்
கொண்டாடுந் தென்தணிகைக் கோமானே—பண்டாய
வெவ்வினையா லேழைபடும் வேதனைநோ யெல்லாமிங்
கெவ்விதமாத் தீரும் இயம்பு. (10)

இயம்ப முடியாத இன்னலெனக் கிட்டாய்
சுயம்புவே தென்தணிகைச் சோதீ—தியங்கித்
திரிகின்ற எற்குன் திருவா ளருளைப்
புரிகின்ற தெந்நாள் புகல். (11)

என்னு தாரவே எனாதரணே எந்தையே
அன்னாய் திருத்தணிகை அண்ணலே—எந்நாளோ
ஏகுமென தின்னலெலாம் இன்பமென்ப தெந்நாளுண்
டாகு மதைநீ அறை. (12)

விநாடிக் கொருகோடி வெந்துயருண் டென்று
சொனாலுந் தகுந் தணிகைத் தோன்றால்—எனாலிங்குப்
பட்டு முடியவிலை பாழும் அவத்தைகளைக்
கொட்டுதற்குக் காட்டோர் குழி. (13)

அன்றசுர ரைக்கொன் றமரா வதிகாத்த
வென்றிமயி லூர்தணிகை வேலவா—என்றென்றும்
அன்னாயன் னாயென் றழுதழுது நின்றுமென்றன்
இன்னா ஒழித்திலையீ தென்? (14)

முருகா குமரா முதல்வா முகுந்தன்
மருகா திருத்தணிகை வள்ளால்—ஒருகால்
முருகா எனவோதி முத்திநெறி கூடத்
தருவாய் வரமெனக்குத் தான். (15)

இன்பம்வரும் நெஞ்சதனில் எண்ணியவை கைகூடும்
துன்பமக லுந்தணிகைத் தோன்றலே—நின்பதமே
கூடு மடியார் குறைவின்றி யேவாழ்ந்து
வீடும் பெறுவரிது மெய். (16)

எந்நேரந் தீமையையே எண்ணுமென்றன் பாழ்நெஞ்சே
எந்நேரம் நன்மையையே ஏனெண்ணாய்—முன்னே
கனியிருக்க நீயேனோ காய்வேண்டு கின்றாய்
முனியுனைப்பி டித்திருக்கு மோ. (17)

ஐய னருளிருந்தால் ஆகாத தொன்றிலைமற்
றையன ருளின்றியொன்று மாகாது—மெய்யிதுவே
ஐயனடி பற்றுவதே அல்லலெலாந் தீருமா
றுய்யுமா றும்மதுவா கும். (18)

வாணாளை யெல்லாம் வகைதெரி யாதந்தோ
வீணாச் செலவழித்து விட்டேனே—காணாத்
திரவியமே தென்தணிகைத் தேவநினைப் போற்றும்
வரமருளாய் சித்த மகிழ்ந்து. (19)

மக்களுயர் வாகவெனு மாநலங்க ளொன்றுமிலேன்
எக்கணமும் யான்படுவ தின்னலே—இக்கணமே
வாராய் கிருபையுடன் வந்தென் பழவினைகள்
தீராய் திருத்தணிகைச் சேய். (20)

ஐயா வுனையன்றி ஆதரவு வேறுண்டோ
மெய்யா திருத்தணிகை வேலவா—நையா
திருக்கும் படியெனக்குன் இன்னருள்தா னென்று
சுரக்கும் படியிருக்குஞ் சொல். (21)

நேரார் புரமெரித்த நித்தன் திருப்புதல்வா
சீரார் திருத்தணிகைத் தேசிகா—வீராநீ
வாராய் மயிலேறி வந்தேயென் வல்வினையைத்
தீராய்நின் சித்தமகிழ்ந் தே. (22)

மூவா முதல்வனே மொய்ம்புடைய வேல்முருகா
தேவா திருத்தணிகைந் தேசிகா—ஓவாத
அன்போ டுனைவணங்க ஆண்டவனே நீயருளில்
என்போற் பயன்பெற்றார் யார்? (23)

வானுட ரும்புவியில் வாழ்வார்க ளும்பணியுந்
தேனார் பொழிற்றணிகைத் தேசிகா—மானார்
விழியால் மதிமயங்கி வெய்யதுயர்க் காளாய்க்
கழியா தெனையிரங்கிக் கா. (24)

பத்தியுட னேபணியும் பத்தர்க்கு முத்தியெனுஞ்
சித்திதருந் தென்தணிகைத் தேசிகா—பத்திநிலை
இன்னதென்று மேயறியா ஏழையே னைக்காக்க
உன்னதுள மென்றுருகு மோ? (25)

நாவார நின்புகழை நாளுஞ் சொலித்துதிப்பேன்
தேவா திருத்தணிகைத் தேசிகா—மூவா
உனையே மிகநம்பி உன்றா ளடையும்
எனையேன்று கொள்ளா யினி. (26

நன்னெறிகாட் டென்றுன்னை நாடும் அடியவரைச்
செந்நெறிசேர்க் குந்தணிகைத் தேசிகா—அந்நெறியில்
ஆத னொழுகுவதற் காசைப் படுகின்றேன்
கோத னெனையுவந்தாட் கொள். (27)

சீருஞ் சிறப்புமுயர் தெய்வீக முந்திருவும்
சேருந் திருத்தணிகைத் தேசிகா—பார்முழுதுங்
கொள்ளா தடியேன் குறைக ளவைதீர்த்துத்
தள்ளா தருள்புரிவாய் தான். (28)

நாடும் பொருள்நல்லார் நம்மதல்ல வென்றறிந்தோர்
தேடுந் திருத்தணிகைத் தேசிகா—வாடுங்
கொடிபோல வேதுயரால் குன்றினே னந்தோ
அடியேனை யாதரியா யா. (29)

ஆதார மில்லா தலைவேனை ஆதரித்தல்
தீதா திருத்தணிகைத் தேசிகா—கூதாள
கட்டியணைத் தாலும்நீ கைநழுவ வேவிட்டே
எட்ட இருந் தாலும்நீ யே (30)

பேயேன் பெரிதும் பிழைகளே செய்கின்றேன்
தீயேன் திருத்தணிகைத் தேசிகா—நாயேனும்
புன்மையெலாந் தீர்ந்துன்றன் பொன்னடிக்கா ளாயிருக்கும்
நன்மைபெறல் எந்நாள் நவில். (31)

மாறிவரி னும்முலகம் வல்வினையெல் லாமென்மேல்
சீறிவரி னுந்தணிகைத் தேசிகர்—தேறும்வழி
கண்டே னதுநின் கழல்சிக் கெனப்பிடித்துக்
கொண்டே உயும்நற் குணம். (32)

எப்பொழுதும் இன்னலால் ஏழை படும்பாடு
செப்பரிது தென்தணிகைத் தேசிகா—இப்பரிசே
கண்டே னடியேனிக் காசினியி லேயிறந்தே
உண்டோ சுகம்வே றுரை. (33)

னையாம லேயிருக்க நாயேற் கிரங்கியருள்
செய்யாய் திருத்தணிகைத் தேசிகா—ஐயாவே
புண்ணியமு மாமிந்தப் பூவுலகி லேயுனக்குக்
கண்ணியமு மாமிதனைக் காண். (34)

பூவாருந் தேனே பொருளேயெம் புண்ணியமே
தேவா திருத்தணிகைத் தேசிகா—நாவாரப்
பாடேனோ நின்புகழைப் பத்தியோ டேவல்செயக்
கூடேனோ தொண்டர் குழாம். (35)

கட்டளைக் கலித்துறை.

*பெருவாழ்வு மக்களும் பெண்டிருஞ் சுற்றமும் பின்னுமுள்ள
திருவா மெவையும் ஸ்திரமென்று நம்பித் திகைக்குமிந்தக்
கருவாழ்வு தன்னிலே வீழாம லுன்றன் கழலிணையே
தருவா யருள்புரி வாய்தணி காசல சண்முகனே.

[பிரமோதூதவஸு மார்கழிமீ 22உ, திங்கட்கிழமை, மஞ்சகுப்பம்.
2 January 1871. திருத்தணிகேசன் திருவடிகளே சரணம்.
வ. த. சுப்பிரமணியன்.] (36)

*நீரே துணையன்றி வேறே துணையிந்த நீணிலத்திற்
பாரே னொருவரை அந்தோ எனக்குப் பரிபவரும்
ஆரே இனியா கிலுமரு ளீரழ கார்கடப்பந்
தாரே புனையுந் தணிகா சலமுறை சற்குருவே.

[பிரமோதூதவஸு தைமீ 19உ திங்கட்கிழமை. மஞ்சகுப்பம்
30 January 1871.] (37)

*மண்ணாசை யென்கின்ற மாயையில் வீழ்ந்து மதிமயங்கி
எண்ணா துனைமறந் தேயிருந் தேனினி யாகிலுமென்
அண்ணாவுன் றன்பொன் னடிக்கம லம்வந் தடையும்வண்ணந்
தண்ணா ரருள்புரி யாய்தணி காசல சண்முகனே.

[பிரமோதூதவஸு மாசிமீ 16உ; ஞாயிற்றுக்கிழமை. மஞ்சகுப்பம்.
26 February 1871.] (38)

*வாராத வல்வினை அந்தோ எனதிடம் வந்துமிகப்
போராடு கின்றது போகேனென் கின்றது புண்ணியனே
தீராத இவ்வினை தீர்ந்துய்யு மாறுன் திருவடியைத்
தாரா யருள்புரி யாய்தணி காசல சண்முகனே.

[பிரமோதூதஞு பங்குனிமீ 13உ சனிவாரம். மஞ்சகுப்பம்.
25 March 1871.] (39)

*நோயால் முழுது நிறைந்த சரீரமும் நுன்திருத்தாள்
தோயாத நெஞ்சமுங் கொண்டுழல் வேனிந்தத் தொல்லுலகில்
மாயா முனமுன் றனைவந் தடையுநன் மார்க்கமதைத்
தாயா யருள்புரி வாய்தணி காசல சண்முகனே.

[பிரஜோத்பத்தி ஞு சித்திரைமீ 10உ வெள்ளிக்கிழமை;
21 April 1871, சிதம்பரம்.] (40)

*மனையாளை மக்களை மாநிதி தன்னை மதித்துநின்தாள்
நினையாமல் என்சிறு வாழ்நாளை வீணில் நிதங்கழிப்பேன்
தினையா மளவன்பும் இல்லே னெனினுந் திருவருள்கொண்
டெனையாள நீநினை யாய்தணி காசல ஈசுரனே.

[பிரஜோத்பத்திஞு வைகாசிமீ 7உ வெள்ளிக்கிழமை;
—திருத்தணிகை. 19 May 1871.] (41)

*வாவா முருக மயில்மீதி லேயேறி வந்தென்றனைக்
காவா யுனது கழலிணைக் காட்கொள்ளு வாயென்றுநான்
ஓவா துரைத்துமே உன்னெஞ் சுருகிலை உன்கருணைக்
காவா இதுவு மழகோ திருத்தணி ஆண்டவனே

[பிரஜோத்பத்திஞு ஆனிமீ 3உ வியாழக்கிழமை;
கருக்கம்பட்டு குளக்கரை. 15 June 1871.] (42)

*ஆதார மிந்த அகிலந் தனிலெனக் குன்றனம்பொற்
பாதார விந்தம தல்லாமல் வேறில்லை பத்தர்நெஞ்ச
மேதான மாக்கொண்டு வீற்றிருப் பாய்வினை யால்விளைந்த
தீதா னதையொழித் தாள்வாய் திருத்தணித் தேசிகனே.

[பிரஜோத்பத்திஞு ஆவணிமீ 22உ செவ்வாய்க்கிழமை;
மஞ்சகுப்பம். 5 September 1871.] (43)

*பல்லா யிரத்துக்கு மேற்பட்ட பாவம் பலபுரிந்து
சொல்லா ளவு படாத்துய ரத்திற் சுழலுமிந்த
பொல்லாத பாவியு முன்றாட் கடிமை புகுந்துய்வனோ
எல்லாஞ் செயவல்ல வாதணி கேச எனதரசே
[பிரஜோத்பத்தி௵ மாசிமீ 6௳ வெள்ளிக்கிழமை; மஞ்சகுப்பம்.]
(44)

*திருமுரு கா! அடி யேன்துயர் தீரத் திருவருளைப்
புரிமுரு கா! நின பொன்னடிக் கன்புடை யோர்க்கிரங்கி
வருமுரு கா! வந் திடர்தீர்த் தவர்க்கு வரம்பிலின்பந்
தருமுரு கா! கும ரா! சண் முகா! தணி காசலனே.
[பிரஜோத்பத்தி௵ பங்குனி 3௳ வியாழக்கிழமை; மஞ்சகுப்பம்.]
(45)

*வாதா நினது மலர்த்தா ளிணையை மதியிலிமேல்
வாதா உனக்குமோ நின்மகி மைக்கிது சற்றுமுத
வாதா கொடுமைய தாகுமன் றோமற் றெவர்க்குமிறை
வாதா னவர்கால னேதணி காசல வானவனே. (46)

(இதன் பொருள்.)

எல்லோருக்கும் இறைவனே! அவுணர்களுக்கு இயமனே! தணிகாசலக்கடவுளே! (நீ) வந்து (அடியேனுக்கு) உன்னுடைய மலர்போன்ற இரண்டு திருவடிகளையுந் தந்து (ரக்ஷிக்கவேண்டும்). மதியிலியாகிய ஏழைமீது உனக்குக் கூடவா வாது? வாது செய்தல் உன் பெருமைக்குச் சற்றும் உதவாது. ஆ! அது கொடுமையல்லவோ, மற்று அசை. திருத்தணிகேசன் திருவடிகளே சரணம்.
[பிரஜோத்பத்தி௵ பங்குனிமீ 30௳ புதன்கிழமை; மஞ்சகுப்பம்.]

பண்ணிலும் பார்க்க இனிதா மெனுமொழிப் பாவையர்தங்
கண்ணிலுங் கூந்தலி லும்மவர் காமக் கலவியிலும்
எண்ணில்பல் நாள்தொலைத் திட்டா யினியா யினுமெனெஞ்சே
தண்ணரு ளான்தணி காசலன் பாதஞ் சரணடையே. (47)

மண்ணு ஆசையில்மக்கள் மாநிதி ஆசையில் வாங்கரிய
பெண்ணாசை யென்கின்ற பேயா சையிலே பெருமகிழ்ச்சி
உண்ணுநின் றேன்மெய் யுணர்வெய்தி யேயுய்யு மாறுளதோ
அண்ணு அருள்புரி யாய்தணி காசல ஆரமுதே. (48)

சாமி குமர முருக சரவண சண்முக நன்
னேமிய மால்மரு காதணி காசல நின்மலனே
ஆமிது தீய தகற்றென்று சொல்லும் அறிவிருந்துங்
காம விகாரத்தை நீக்ககில் லேனென்ன கர்மமிதே! (49)

நல்லா யுனைநம்பு மெல்லார்க்கு நன்மைக ணல்குமுனை
யல்லால் துணைசிறி தில்லாத யானென தல்லலெல்லாம்
பல்லா யிரந்தரஞ் சொல்லியுஞ் சற்றும் பரிந்திலைநீ
கல்லா வுனதகஞ் சொல்லாய் திருத்தணிக் காவலனே. (50)

கந்தாசற் றும்நீ யு,கந்தா யிலைநின் கருணைகொண்டென்
சிந்தா குலந்தனைச், சிந்தாய் நினது திருவடியைத்
தந்தாண் டுயர்ந்த ப,தந்தா தணிகை முருகவென்றி
ரந்தாலு மந்த வ,ரந்தா னளித்திலை ராவுத்தனே. (51)

கலிவிருத்தம்.

* ஆதா ரமிலா அடியேன் நிதமுன்
பாதாம் புயமே பணியக் ருபைசெய்
தீதா னதொழித் திடுதே சிகனே
வேதா தணிகா சலவே லவனே.

[பிரஜோத்பத்திஸு புரட்டாசிமீ 18உ திங்கட்கிழமை
மஞ்சகுப்பம். 2nd October 1871.] (52)

எனதா தரவே எனதா ருயிரே
மனதார் புவிமா யைகள்மா யும்வணம்
இனிதா வருள்செய் யெழில்வே லவவுன்
றனதாள் மறவேன் தணிகா சலனே. (53)

ஏழா முலகுங் கொளுமோ எளியேன்
பாழான மனம் படுதீ மைகள்தாம்
வாழா யெனநீ யினியே னும்வரந்
தாழா தருள்வாய் தணிகா சலனே. (54)

மனமா கியவோர் மறுப்பூ மியிலே
சினமா தியவாம் பலதீச் செடிகள்
வனமா வளரா மலளித் தடியேன்
தனையாண் டருள்வாய் தணிகா சலனே. (55)

போரா தபெருந் துயரால் மனமும்
நீரா யுருகுற் றதுநின் மலனே
வாரா யினியா கிலும்வந் துவரந்
தாராய் முருகா தணிகா சலனே. (56)

நானே துதுயர் நலியப் படினும்
ஏனோ எனநீ யுமிருப் பதெனெங்
கோனே குருவே குலதெய் வமேநீ
தானே துணைநந் தணிகா சலனே. (57)

ஏதுக் குமேநீ தளரே லெனவுன்
பாதத் தையேபற் றெனவே யருள்வாய்
ஓதற் கரிதாம் உபதே சமதைத்
தாதைக் கருளுந் தணிகா சலனே. (58)

உன்னைப் பணியா தபடிக் குலகிற்
பொன்னைப் புவிபூ வையரைப் பொருளா
என்னைக் கருதச் செயுமிம் மருளூழ்
தன்னைத் தவிராய் தணிகா சலனே. (59)

கலங்கும் மெலியேன் கனிவெய் திடவே
இலங்குன் னடியென் றருள்வா யிறைவா
நலங்கள் பலவற் றையுநல் கியேசஞ்
சலங்கள் ஒழிக்குந் தணிகா சலனே. (60)

ஒருவா றகம்நைந் துருகும் மவர்முன்
குருவாய் வருவாய் குறைதீர்த் தருள்வாய்
பெருவாழ் வருளும் பிறவா நிலைநீ
தருவாய் எனையாள் தணிகா சலனே. (61)

பொல்லா தகொடும் பவமே புரிதற்
கல்லா தெனகம் அறநன் னெறியிற்
செல்லா திதனுக் கெனசெய் குவன்யான்
சொல்லாய் தணிகா சலசுந் தரமே. (62)

வேலா நினதன் பர்கள்மே வுமநு
கூலா உமையாள் பெறுகுஞ் சரமே
பாலார் மொழிமங் கையர்பங் கமகா
சீலா தணிகா சலதே சிகனே. (63)

ஒருவே லையுமின் றியுழன் றிடும்யான்
இருவே லையுமெண் ணுகேனோ அபயந்
தருவே லையுறுந் தணிகைப் பதியைக்
கருவே லையைவென் றுகளித் திடவே. (64)

இதன்பொருள்.

வாளா திரிதரும் அடியேன் (வெல்லுதற்கரிய) பிறவிக்கடலை வென்று, பேரின்ப வாழ்வெய்தும்படிக்கு 'அஞ்சேல்' என்று அபயமளிக்கும் வேலாயுதக் கடவுளானவர் வீற்றிருக்குந் திருத் தணிகாசலத்தைக் காலையு மாலையுந் தியானிக்கேனோ! வேல்= வேலாயுதம்; ஐ=கடவுள்.

வேறு.

உன்னை யன்றிமற் றேதுணை யொன்றிலா
என்னை யிங்ஙன் இடருறச் செய்தையே
அன்னை யேயினி யாரை அடைகுவன்
கன்னல் சூழ்தணி காசலக் கர்த்தனே. (65)

கரும நோயவை யாவுங் கருகச்செய்
திருமு ருகனைத் தென்றணி கேசனை
அரிம ருகனை அப்பனை ஐயனை
ஒரும னத்துடன் உன்னிநான் உய்வனே. (66)

அந்த மில்லியை ஆதியைச் சோதியை
எந்தை யைத்தணி கேசனை யிப்புவிப்
பந்த மற்றுப் பரகதி யெய்திடச்
சிந்தை செய்குவன் சின்னஞ் சிறியனே. (67)

ஐய னேதணி காசலத் தப்பனே
மெய்ய னேயிந்த மேதினி தன்னிலே
செய்யொ ணாப்பெருந் தீமைகள் செய்தஇவ்
வெய்ய னேனையும் உய்விக்க வேண்டுமே. (68)

என்னை வாட்டும்இன் னலைப் பிறருக்குச்
சொன்ன தாலொர் சுகிர்தமுங் கண்டிலேன்
உன்னை யேதுணை யென்னநான் உன்னினேன்
என்னை யஞ்சலென் பாய்தணி கேசனே. (69)

நாத னைத்தணிகாசலம் நண்ணுமெய்ப்
போத னைப்பொரு ளைப்பெரும் புண்யனை
வேத னைத்தணி காசல மேவுபொற்
பாத னைத்தொழப் பாறும்நம் பாவமே. (70)

அற்பன் நானுன் னடியடை கின்றிலேன்
நிற்பன் நானென்றும் நீச நிலையிலே
தற்பரா நந் தணிகை யெனும்உயர்
வெற்ப நானெவ ணெய்துவன் வீட்டையே. (71)

பாவ மான பரவையை நீந்தியான்
ஆவ லாயுன் னடியடைந் துய்வனோ
தேவர் போற்றுந் திருத்தணி மாமலை
மேவி வீற்றிருக் கும்வெற்றி வேலனே. (72)

ஐய வோஎன் றழுதே யநுதினம்
நைய வோஎனை ஞாலந் தனில்வைத்தாய்?
மெய்ய வோஎன்றன் வெவ்வினை தீரஎன்
செய்ய வோசெப்பு தென்தணி கேசனே. (73)

அத்த னேதணி காசலத் தையனே
முத்த னேமுரு காஎன் றுருகிடும்
பத்தர் கட்கருள் செய்திடு பீண்பனே
கர்த்த னேகடை யேனையுங் காத்திடே. (74)

தேவ தேவனைத் தென்றணி கேசனைப்
பாவ நாசனைப் பத்தர்கள் நேசனை
ஆவி போன்றஎன் ஐயனை அன்பிலாப்
பாவி யேன்பணி யேனென்ன பாவமே. (75)

வேறு.

பொய்த்தாரணிப் போகந்தனிற் புந்திமிக அழுந்தி
எய்த்தே னுன்றன் மெய்த்தாளுக்கா ளென்றுவனோ அறியேன்
அத்தாகரு தடியாரிடர் அகற்றும் அருட் கடலே
சத்தாகிய பொருளேதிருத் தணிகாசல அமுதே. (76)

வஞ்சிவிருத்தம்.

பிணிபா வமெலாய்-நணுகா தருள்செய்
தணிகா சலனைப்-பணிவாய் மனமே. (77)

கோச்சகக் கலிப்பா.

சஞ்சலங்க ளெண்ணிறந்த தாலே இடர்ப்பட்டு
நெஞ்ச மெலிந்திருந்த நீணிலத்தில் நிற்குமியான்
தஞ்சமொன் றுங் காணாதுன் தாமரைத்தாள் வந்தடைந்தேன்
அஞ்சலென்பாய் தென்தணிகை யப்பா அடைக்கலமே. (78)

பண்ணாத பாவமெலாம் பண்ணினேன் பாழ்நெஞ்சில்
எண்ணாத தனவெல்லாம் எண்ணினே னேஅந்தோ!
அண்ணாநான் உன்பொன் னடியை யடைவேனோ
தண்ணார் பொழில்சூழ் தணிகைமலை வேலவனே! (79)

---

காமாந்த காரக் கடலில் விழுந்தடியேன்
ஏமாந்தே அந்தோவுன் இணையடிக ளைமறந்தேன்
நாமார்ந்த என்மனதுன் நல்லடிபெற் றுய்யுவதற்
காமா றருள்தணிகை யம்பதிவாழ் அறுமுகனே. (80)

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

எந்தையே இமையோர் கோவே இறைவனே கறையார் கண்டன்
மைந்தனே மயில்மீ தேறி வந்தருள் புரியா நின்ற
கந்தனே கடவு ளேயென் கவலைதீர்ந் திடநின் பாதம்
தந்தருள் புரிய வேண்டுந் தணிகைமா மலையு ளானே. (81)

அண்ணலே அமரர் கோவே ஆறுமா முகப்பி ரானே
பண்ணிலேன் அருந்த வங்கள் பணிகிலேன் நினது பாதம்
எண்ணிலேன் உய்யு மாற்றை ஏழையேற் கிரங்கி நீதான்
தண்ணருள் புரிய வேண்டுந் தணிகைமா மலையு ளானே. (82)

கருணைவா ரிதியே யுன்றன் கழலிணை பணியும் அன்பர்
அரணமே! அல்லல் தீர்க்கும் அப்பனே ஒப்பி லானே!
மரணமே வருமுன் நின்தா மரைப்பதந் தந்து காக்க
தருணமீ தருள வேண்டுந் தணிகைமா மலையு ளானே. (83)

கஞ்சனைச் சிறையிற் போட்டாய் கடவுளர் சிறையை மீட்டாய்
செஞ்சுடர் வேலி னாலே தீயசூர் முதலைச் செற்றாய்
அஞ்சலென் பாரைக் காணா தல்லலில் உழல்வே னுக்குத்
தஞ்சம்நீ யருள வேண்டுந் தணிகைமா மலையு ளானே. (84)

பூசனை செய்யும் போதுன் பொன்னடி நினைந்தி டாமல்
யோசனை மேலும் மேலும் ஓய்வின்றிச் செய்வன் அந்தோ!
நாசன மடைவு தன்றி நற்கதி யெய்து வேனோ!
தாசர்கள் வணங்கி யேத்துந் தணிகைமா மலையு ளானே. (85)

வள்ளிதெய் வானை யென்னு மங்கையர் மருவு நேசா!
புள்ளிமா மயிலின் மீதே வந்தருள் புண்ணிய மூர்த்தி!
கள்ளன்நா னென்று முன்றன் கழலிணை பணியே னென்றுந்
தள்ளிநீ விடிலென் செய்வேன் தணிகைமா மலையு ளானே! (86)

இருக்குநா ளளவும் பாரில் இன்பமே பருகி மெத்தப்
பெருக்கவே வேண்டு மென்னும் பேய்பிடித் தாட்ட அந்தச்
செருக்கிலே அலைந்து கெட்டேன் சீர்ப்பட அருள்செய் யாயோ
தருக்களும் புனலுஞ் சூழுந் தணிகைமா மலையு ளானே. (87)

ஆற்றொணாத் துயர்கொண் டேழை அலைகிறேன் அவனி தன்னில்
தேற்றுவார் ஒருவ ரேனுந் தேடியுங் காண கில்லேன்
போற்றுவேன் பத்தி யோடுன் பொன்னடி களையே என்றும்
சாற்றுவாய் உய்யு மாற்றைத் தணிகைமா மலையு ளானே. (88)

மாதர்கள் மோகந் தன்னில் மயங்கியே வீழ்ந்தி டாமல்
போதநன் னெறியைப் பற்றிப் புண்ணியந் தனையே செய்துன்
பாதமே கதியென் றெண்ணிப் பத்தியாய்ப் பணியும் நல்ல
சாதகம் வருவ தென்றோ தணிகைமா மலையு ளானே. (89)

பத்தியாய் நாளு முன்றன் பதந்தனைப் பணிந்தி டாமல்
பித்தனாய் ஐயோ இந்தப் பேதையேன் திரிந்து ழன்றேன்
அத்தனே அடிய னேனுன் அடியிணை யடையும் அந்தத்
தத்துவ மருள்செய் யாயோ தணிகைமா மலையு ளானே. (90)

கள்ளத்தைக் குணமாக் கொண்டான் கணிகையர் மோக மென்னும்
பள்ளத்தில் வீழ்ந்த நேக பாவங்கள் செய்தான் மேலும்
உள்ளத்தில் அன்பே யில்லா உலோபியா மென்றே யென்னைத்
தள்ளத்தான் நினைக்கின் றாயோ தணிகைமா மலையு ளானே. (91)

அன்னையே அன்னை போல அடியரை ஆத ரிக்கும்
உன்னையே தேடு வோனை உத்தமச் செல்வ னென்பேன்
பொன்னையே மண்ணை யேமெய்ப் பொருளெனத் தேடு மூடன்
தன்னையே ஏழை என்பேன் தணிகைமா மலையு ளானே. (92)

வேதனை விளைவே யென்றும் விளைக்கின்ற கொடிய பாவத்
தீதினை யொழித்து விட்டுச் சிறியனேன் கடைத்தே றும்மா
றீதென அருள வேண்டும் எத்திசை தன்னி லும்பூந்
தாதினை யுகுக்கும் பூவார் தணிகைமா மலையு ளானே. (93)

பேய்போலும் பேதை போலும் பித்தனைப் போலுந் துட்ட
நாய்போலும் உழன்றே ஆயுள் நாளெலாங் கழித்த தல்லால்
சேய்போலன் புற்றே யுன்றன் திருவடி சேவி யேனைத்
தாய்போல்வந் தாள வேண்டுந் தணிகைமா மலையு ளானே. (94)

மூடனா கியநான் உன்னை மூதறி வாளர் போலப்
பாடவே புகுதல் பேடி பைங்கிளி யன்னாள் தன்னைக்
கூடவே முயலு கின்ற கொள்கையை ஒக்கும் அன்றோ
காடுவேற் கரத்தாய் ஒப்பில் தணிகைமா மலையு ளானே. (95)

முத்தேநன் மணியே ஆதி மூலமே அடியேற் குற்ற
பற்றேயென் பாவ மெல்லாம் பற்றறுத் திடும ருந்தே
இத்தேகம் விழுமுன் நானுன் இணையடிக் கமலஞ் சேரச்
சற்றேநீ யருள்செய் யாயோ தணிகைமா மலையு ளானே. (96)

வினைக்குவை பலவா லென்றும் வெந்துய ரினையே யெய்தும்
எனக்குவ கையுமுண் டாக எந்தையே அருள்கூர்ந் தேயென்
மனக்கவ லைகள்யா வும்போம் மார்க்கமொன் றுரைத்தி டாயோ
தனக்குவ மையே யில்லாத் தணிகைமா மலை யுளானே. (97)

தேன்படு கடப்பந் தாராய் தேவர்கள் தமக்குத் தேவே
யான்படு கின்ற பாட்டை யாருடன் சொல்லில் தீர்ப்பார்
ஊன்படு வலிபோய் என்றன் உள்ளத்தின் வலிபோ யின்னந்
தான்படு வேனோ சொல்லாய் தணிகைமா மலையு ளானே. (98)

எத்தனை தரந்தான் என்றன் இடுக்கணை எடுத்து ரைப்பேன்
அத்தனே வாய்நோ கின்ற தையனே என்ன செய்வேன்
பித்தனா னாலும் பொல்லாப் பேயனா னா லுந்தான்
சற்றுநீ யருளொ ணாதோ தணிகைமா மலையு ளானே. (99)

காலத்தை வீணுப் போக்குங் கடையனேன் எந்த நாளுன்
கோலத்தைக் கண்டு கண்கள் குளிர்வதோ அறிகி லேனே!
ஞாலத்தி லுன்ப தத்தை நண்ணுகாம லெனைச்செ யிந்த்ர
சாலத்தை என்ன என்பேன் தணிகைமா மலையு ளானே. (100)

தரித்திரம் நோய்பொல் லாத தன்மையெக் காலு நெஞ்சை
வருத்துந்தீ ராத தொல்லை வாய்விட்டுச் சொல்லொ ணாத
பெருத்தபாழ்ங் கவலை யித்தால் பெரும்பாடு படுத லேயென்
சரித்திரங் கண்டா யப்பா தணிகைமா மலையு ளானே. (101)

அன்புடன் என்று முன்னை அஞ்சலி செய்வோர் தங்கள்
துன்பம்யா வையுமொ ழிந்து சுகத்தையே யனுப விப்பர்
இன்பமே நிறைந்த மோக்ஷம் என்கின்ற அரிய தாமுன்
தன்பதம் அடைவர் திண்ணந் தணிகைமா மலையு ளானே. (102)

திருத்தணி மலையாய் போற்றி தேவர்கட் கதிபா போற்றி
பருத்தமா மயிலாய் போற்றி பத்தர்கட் கருள்வாய் போற்றி
ஒருத்தருந் துணையி லாஎன் ஊழ்வினை போக்கி யுள்ள
வருத்தமு நீக்கி யுன்றன் மலரடி சேர்த்தி டாயே. • (103)

## வேறு.

கண்ணே கண்ணின் மணியேநற் கனியே கரும்பே கசிதேனே
விண்ணோர் போற்றும் வேலவனே விமலா மேலோர் மேலவனே
பண்ணே யனைய மொழிவள்ளி பங்கா தணிகைப் பதிவாழென்
அண்ணு உனையே வந்தடைந்தேன் அடியேன் உய்யு மாறருளே. ()

மாதா வும்நீ மக்களுநீ மற்று முள்ள சுற்றமுநீ
யாதா யினுமெற் கீவோனும் நீயே யன்றோ இறையவனே
வேதா வீர சிங்கமே விண்ண ளாவுந் தணிகைமலை
நாதா வுனையே வந்தடைந்தேன் நாயேன் உய்யு மாறருளே. (105)

ஒப்பா ரில்லா உத்தமனே உம்பர் கோவே உயிர்க்குயிரே
இப்பா ராசை யெனுங்கடலில் ஏழை வீழ்ந்தே யிடருற்றுத்
தப்பா நிற்கும் வகையறியேன் தஞ்ச மாகுந் தணிகைமலை
அப்பா உனையே வந்தடைந்தேன் அடியேன் உய்யு மாறருளே. ()

பொல்லாப் பாவஞ் செய்தோமே போகும் வழியே தென்றிடிந்து
சொல்லாத்துயரால்நடுங்கியுன்றன் துணைத்தாட்கமலம்வந்தடைந்து
'வல்லாய் அடியேன் உய்யவொரு மார்க்கம் அருளாய்' என்றிரந்தும்
நல்லாய் இரங்கா" ததுவென்கொல் நவிலாய் தணிகை நாயகமே. ()

அந்தோ அடியேன் அல்லலினால் ஆழித் துரும்பு போலடிபட்
டுந்தாள் சரணென் றேயடைந்தும் உள்ளம் உருகா திருக்கின்றீர்
எந்தாய் இதுவும் உமக்கழகோ ஏழைக் கிங்கா ருமையன்றிச்
செந்தே னொழுகும் பூஞ்சோலை திகழுந் தணிகைத் தேசிகரே. ()

கந்தா முருகா கண்மணியே கருணைக் கடலே பலவான
சிந்தா குலத்தால் வருந்துகிறேன் தேற்று வாரிங் கொருவரிலை
எந்தாய் இன்னும் எத்தனைநாள் ஏங்கி நிற்பேன் எனக்கின்பந்
தந்தா லென்ன குறையுண்டோ தணிகை வாழுந் தற்பரனே. ()

இடுக்க ணேமேன் மேலும்வந் தெய்த லாலே ஏழையேன்
நடுக்க முற்றுத் திகைப்புற்று நாய்போ லங்கிங் குழலுகிறேன்
திடுக்கிட் டலறச் செயுமிந்தத் தீமைக் குழியி னின்றென்னை
எடுக்க வல்லா ருனையல்லால் யாரே தணிகைப் போரேறே. (110)

செய்யா தென்ன செய்தேனோ செப்பொ ணாத பெருந்துயரால்
நொய்யா யிடிந்து நொந்தனன்யான் நுன்றாள் சரண மென்றடைந்
[தேன்
ஐயா யினியா கிலுமெனைநீ ஆண்டு கொள்ள நினைத்தருள்வாய்
மையார் தடங்கண் மடவார்கள் வாழுந் தணிகை மலைமருந்தே. ()

பண்ணாப் பாவஞ் செய்தபெரும் பாவி நானென் றாலும்வந்
தண்ணா என்னைக் காவென்றுன் அடியில் வீழ்வே னாகிலருட்
கண்ணா லென்னைப் பாராயோ கவலை யனைத்துந் தீராயோ
தண்ணார் பொழில்கள் பலசூழுந் தணிகை வாழுந் தற்பரனே. ()

கற்று மறியேன் நின்புகழ்நின் கழலுக் கடிமை யாம்பாக்யம்
பெற்று மறியேன் நினைவணங்கும் பெருஞ்சீ ருடைய அன்பர் குழாம்
உற்று மறியேன் உய்யுவதற் குண்மை யான நெறியதனைச்
சற்று மறியேன் தவிக்கின்றேன் அருளாய் தணிகைச் சண்முகனே.

சீகா ழியின்கண் அவதரித்த தேவே அடியார் செல்வமே
நாகா சலத்தி லினிதுறையும் நாதா அரிய நான்மறையைப்
பாகா யினிக்குந் தேவாரப் பதிக மாகப் பாடினவி
சாகா அடியேன் நின்சரண்என் றனைக்கா தணிகைச் சண்முகனே.

ஐயா அடியேன் படும்பாடிவ் வகிலந் தனிலே யொன்றுந்தான்
மெய்யாய்ப் படவே மாட்டாதென் விதிவலிக்கென் செய்வேன்நான்
னையா தினியா கிலும்வழை நன்மை யெய்தும் படிக்கருள்நீ
செய்யா திருத்தல் ஞாயமோ செப்பாய் தணிகை அப்பாவே. ()

அன்பைப் பணியாப் பூண்டவர்தம் அகத்தி லுறையு மருமருந்தே
என்பைப் பெண்ணு யாக்குவித்த எந்தா யுமையாள் மைந்தாஎன்
கன்மச்சிரமந்தனைத்தவிர்த்தென்கவலைக்கடலைச்சுவற்றியென்றன்
துன்பச் சுமையை யொழித்தெனக்குச் சுகந்தா தணிகை யுகந்தாயே

நானே கொடியன் மிகுகொடியன் ஞாலந் தனிலென்போலொருவர்
தானே யில்லை யில்லையிது சத்யம் மூன்த னைப்பணியா
தேனே ஒதிபோ லிருக்கின்றேன் இனிநீ யருள்செய் யாவிழுலும்
வேனே துணையும் வேறுண்டோ விரையார் தணிகை வரையானே.

பெண்கள் மோக வலைதனிலே பித்தாய் விழுந்து மயங்கியிரு
கண்கள் கெட்டாப் போலமதிக் கண்கெட் டலைந்து கவலைகளாம்
புண்கள் நிறைந்த நெஞ்சுடையிப் புலையேன் புண்ய னுவனே
எண்கள் கொள்ளாப் பேரிறைஞ்சும் இறைவா தணிகையுறைவாயே.

உன்னை யுருவ மாக்கியென துள்ளக் கோயில் தனிலிருத்தி
என்ன திருகண் ணுலிகொடுன் இருதாள் களையும் அலம்பிநிலை
இன்ன தெனவே யறியாத இன்ப அன்பா மலர்தூய்உன்
தன்னைத் தொழுநா ளெந்நாளோ சாற்றுய் தணிகை யேற்றுயே.

தீராத் துயரம் வைத்தாயே திக்கில் லாத பாவிக்கு
நீராக் கரைந்தே உருகுமென்றன் நெஞ்சம் இதனை நினையாது
போராக் கோபங் கொண்டுநீ பின்னு மிந்தப் பேதையின்மேல்
போராச் செய்தல் புண்ணியமோ புகலாய் தணிகை அகலாயே.

ஏழைக் குற்ற துணையேயென் இறையே என்றன் ஊழ்ப்பயனால்
வாழ்வுக் கென்று நினைத்தேயென் வாணாளெல்லாம்வகையின்றிப்
பாழுக் கிறைத்து விட்டேனே பாவி யேனும் இனியுன்பொற்
றாளுக் காளாய் உய்வழிதான் உண்டோ தணிகைக் குன்றேயோ.

எந்நே ரமுநின் னிணையடியை யிதயந் தனிலே யிருத்தேனோ
எந்நே ரமுநின் திருப்புகழை என்வா யாலே யியம்பேனோ
எந்நே ரமுநின் னடியவருக் கேவல் செய்தே வாழேனோ
எந்நே ரமுமிங் ஙனமிருப்ப தென்னே தணிகை நின்றோயே. (122)

ஐயா என்றன் அல்லலெல்லாம் அறிந்தே யிருந்தும் அழகியவேற்
கையா என்னைக் கைவிடலுன் கருணைக் கழகோ கருதாயோ
மெய்யா வெய்ய துயர்தீர்த்து விருப்ப மெய்த இரங்கியருள்
செய்யா விடில்நான் என்செய்வேன் செப்பாய் தணிகை அப்பாவே.

பாட அறியேன் நின்தாளைப் பணியும் பத்தி நெறிதனிலே
கூட அறியேன் தீராத குறைகள் யாவுந் தீரும்வழி
தேட அறியேன் திகைக்கின்றேன் சித்த மிரங்கி யருளாயோ
வேடர் மகளை மணம்புரிந்த வேலா தணிகை மேலானே. (124)

ஓவா தலைக்குங் கவலையினால் உடையாய்நொந்தேன் என்செய்வேன்
*பாவா வரையிற் பாரதமாம் பாவி படுமிப் பாடனைத்தும்
தேவா நீதான் பார்த்திருந்துஞ் சித்த மிரங்கா ததுவென்கொல்
ஆவா இதுவும் உன்கருணைக் கழகோ தணிகைப் புகழோனே. ()

மிடியாற் பிணியால் துயராலே மிகவாய் மெலிந்தும் உன்னிடம்வந்
தடையா திருக்கின்றேனேயென் அறிவைஎன்னென் றறைவனியான்
கடையார் தம்மிற்கடையேன்நான்கருணைக்கெங்ஙன்உரித்தாவேன்
உடையா யருள்கூர்ந் துய்யுநெறி உரைப்பாய் தணிகைப் பொருப்
[பாயே. (126)

---

* பாவா=பாவாக; பாட்டாக ; வரையில்=எழுதப்புகில்.

பொன்போலொளிசெய்மேனியனேபுலவர்போற்றும்புண்ணியனே
மின்போல் மிளிரும் பாதனே வேல னேயிம் மேதினியில்
என்போற் றுயரப் படுவோரும் இருக்கின் றரோ நீயலதென்
தன்பா லிரங்கு வாருண்டோ சாற்றாய் தணிகை யேற்றாயே.(127)

வேலா அடியர் துயர்தீர்க்க வெற்றி மயில்மே லேறிவரு
பாலா நினது பாதமெனும் பதும மலரைப் பத்தியொடு
நூலா ராய்ச்சி யில்லாஇந் நுளைய னேனுந் தொழவருள்வாய்
மேலா னவர்கள் பணியவளர் வெற்பாந் தணிகை நிற்பானே. ()

இறையே என்றன் இடுக்கணெலாம் என்று தீர்ப்பா யென்றடியேன்
முறையே யிட்டுக் கொண்டாலும் மோன மாநீ யிருப்பதன்றிக்
குறையே தெனவே கேட்டிலையென் குறையை யினியா
[ரிடஞ்சொல்வேன்
மறையே பணியுந் தென்தணிகை வரையா யுமா றரையாயே. ()

வாழு மாக்கள் தமையுலகின் வஞ்ச மாயை யெனுமோர்பேய்
ஆழுந் துயராம் ஆழியிலே அமிழ்த்து கிறதே அந்தோஇப்
பாழும் பேயை யேதுக்குப் படைத்தா யோநா னறிகிலேன்
மாழ்கு மன்த்தேன் உய்வழிமற் றுண்டோ தணிகை நின்றோயே.

இன்னல் பலவால் வருந்துகிறேன் என்னைக் காவென்
[றுனையடைந்தால்
இன்னல் தீர்க்கா தவைகளை நீ இன்னம் அதிக மாக்குகின்றாய்
உன்னைத் தஞ்ச மென்றடைவோர்க் குண்டாம் பலனு மிதுதானோ
அன்னை யென்னும் உனக்கிதுவும் அழகோ தணிகைப் புகழோனே.

உன்னை நம்பி னோரெல்லாம் உள்ள கவலை தீருகிறார்
பின்னு மவர்க ளின்பெய்தி பெருமை யோடே வாழுகிறார்.
அன்னையேநானுனையடைந்தென் அல்லல்பலகாலெடுத்துரைத்தும்
என்ன என்றுங் கேட்டிலையீ தென்னே தணிகை மன்னேநீ. (132)

வாந்தா வாந்தா என்றென்றென் வாயும் நோவ வேமுறையிட்
டிராந்தா லும்முன் மனமட்டும் இரங்கு கிறதே யிலையிவண்நீ
காந்தா லிதுவுங் கருணையோ கருணைக் கடலே நான்கலங்கி
யிருந்தாலதனாலுனக்கின்பம் என்னே தணிகைப் பொன்னேசொல்

துன்புற் றழலும் அடியேனுன் தூய பாத கமலங்கட்
கன்புற் றழலின் மெழுகேபோ லகமைந் துருகிப் பணியேனோ
உன்பொற் றிருத்தாள் துணைகொண்டேன் உண்மையாகநற்கதிபெற்
றின்புற் றிருக்கு மாறருள்செய் எந்தாய் தணிகை மைந்தாவே. ()

கோவேஅடியர்குறைதீர்க்கும் குணக்குன்றேயெங் குலக்கொழுந்தே
சேவே நீசன் மகிழ்ந்தளித்த செல்வக் கனியே செவ்வேளே
போவேன் வருவேன் பொய்யுரைப்பேன் இங்ஙன் காலம் போக்கு
[வேன்
தேவே நானும் உய்யஅருள் செய்யாய் தணிகை ஐயாவே. (135)

யானே தேது சொல்லினும்நீ யாதுங் கேளா ததுபோலத்
தானே மௌனஞ் சாதித்தல் தகுமோ உனக்குத் தகுமோதான்
ஊனே உருக உளமுருக உரோமஞ் சிலிர்ப்ப அடியேன்எம்
மானே உன்னை வணங்குதற்காம் வாந்தா தணிகை இருந்தாயே. ()

மானேர் விழியார் வலைப்பட்டு வனவே டன்றன் வலைப்பட்ட
மானே போல மதிகலங்கி வருந்து வேன்மா ளாமுனமெம்
மானே உன்றன் மனமிரங்கி வந்தாட் கொள்ளா யோஎங்கோ
மானே வள்ளி மணவாளா மைந்தா தணிகை எந்தாயே. (137)

புத்தி யளிப்பா யென்றுமுயர் புண்ய கரும மேபுரியப்
பத்தி யளிப்பாய் நின்னுடைய பாத பத்ம மேபணியச்
சித்தி யளிப்பாய் நினதுபுகழ் செகத்தி லோங்க வேசெய்வாய்
முத்தி யளிப்பாய் காத்திடுவாய் முருகா தணிகை வருகோவே. ()

பாட அறியேன் திருத்தணிகைப் பரமா உனையன் பாய்ப்பணியக்
கூட அறியேன் தொண்டர்குழாம் குலவும் இடந்தா னேதென்று
தேட அறியேன் உனதுதிரு வடியே நிஜமாஞ் செல்வமென்று
நாட அறியேன் எவனுய்வேன் நாதா நீதா னருளாயே.

[23-11-1896.]—(139)

## வேறு

*என்போலு முழுமூடன் என்போலும் பெரும்பாவி எங்கு மில்லை
நன்போதம் நானெய்தி யுய்யுநெறி தனைச்சாரும் நாளு முண்டோ?
மின்போலும் இடைமடவார் இருமருங்கும் வீற்றிருப்ப வேல்கைக்
[கொண்டே
அன்பேயோ ருருவாகத் தணிகையினின் றருள்சுரக்கும் அமரர்
[கோவே.
[ஏவிளம்பிஸு ஆவணிமீ 6உ 20-8-1897.] —(140)

## எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

வேதனே தமிழில் வேதமுண்டாக்கும் விமலனே வெங்குருவேந்தே
போதனே ஞானப் புநிதனே ஒப்பில் புண்யனே பொன்னென
[மிளிரும்
பாதனே பாவப் பிணிக்கொரு மருந்தே பாரெலாம் போற்றுநற்
[றணிகை
நாதனே யிந்த நாயினே னுய்யும் நன்னெறி யேததை நவிலே. ()

பிள்ளைகள் தமக்கோர் குறையிருந் தாற்றம் பெற்றவ ரிடத்திலேயிற்
[சென்றே
உள்ளதையுரைக்கஅவரிவர்தம்மை உவப்பித்த லுலகினில்முறைமை
வள்ளலேயுன்றன் மலரடிதந்தாள் என்றுநான்மனங்குழைந்தழுதும்
எள்ளளவேனும் இரங்கலை தணிகையிறைவனே யெம்பெருமானே.

மோகமாங் கடலைக் கடந்தமா தவத்து முனிவர் தொழுமுழு முதலே
வேகமாச் செல்லு மயிலுவந் தேறும் வேலனே விண்ணவர் வேந்தே
தேகமா னதுவீழ்ந் திடுமுனே உன்றன் றிருவடி யடையுமாறருளாய்
ஏகனே எவரு மிறைஞ்சுநற் றணிகை யிறைவனே எம்பெரு மானே.

அரும்பொரு ளேயென் னப்பனே யிந்த அகிலவா சைகளவை
[யனைத்தும்
துரும்பென மதித்துன் தூயடி களையெட் டுணையுமே மறந்திடா
[திறைஞ்சி
வரும்படி யான வரந்தனை யடியேன் தனக்குநீ மகிழ்ந்தருள் புரியாய்
இரும்பய னளிக்கும் எழில்திருத் தணிகை யிறைவனே எம்பெரு
மானே. (144)

துன்பமே யிதுகா றும்மநு பவித்தேன் சுகமினி யாகிலு மடைய
என்பவமொழித்துன் இணையடிகளுக்கே என்னையாளாக்கநீயிரங்காய்
தன்பெய ரோதித் தன்னடி பணியும் சாதுக்க ளுக்குவீ டெனும்பே
ரின்பமே யளிக்கும் எழில்திருத் தணிகை யிறைவனே எம்பெரு
[மானே. (145)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நன்மை யென்பதோ ரணுவள வில்லா
நானும் ஐய இஞ் ஞாலத்தின் கண்ணே
புன்மை யென்பதோ ரணிகலம் பூண்டுப்
புல்ல ரிற்சிறந் தேபொலி கின்றேன்
இன்மை யென்பதே எனைவிடே னென்றே
என்னு டன்குடி கொண்டிருக் கிறதென்
தன்மை யென்பநீ துனக்குரைத் தேனென்
தன்னை யாண்டருள் தணிகைமன் னவனே. (146)

* கற்று வந்ததோர் ஞானமு மில்லேன்
கடையனே னென்றன் காயந்தன் னுடனே
பெற்று வந்ததோர் நல்லறி வில்லேன்
பேதை யேன்பல பிறவிக டோறும்
உற்று வந்ததோ ரூழ்வினை யாலே
உன்ன ரும்பிணிக் கன்னமாய் நின்றேன்
சுற்று வந்துநீ யருள்செயி லுய்வேன்
தணிகை யங்கிரிச் சண்முகத் தேவே.
[பிரஜோத்பத்தி௵ ஐப்பசி௴ கூடு௳, திங்கட்கிழமை,
மஞ்சகுப்பம், 30 October 1871] (147)

* பத்தி யென்பதோ ரணுவள வில்லாப்
பாவியே னுன்றன் பாதபங் கயத்தைச்
சித்தந் தன்னிலோ ரிமைப்பொழு திருத்தேன்
செம்மை யொன்றிலாத் தீயரிற் றீயேன்

முத்தி யென்பதா மதனை யெண்ணுவது
முடவன் கொம்புதே னுக்கவா வுதலாம்
சித்தம் வந்துநீ யருள்செயி லுய்வேன்
திருத்த ணிப்பொருப் பமர்ந்தசெவ் வேளே.

[பிரஜோத்பத்தி௵ கார்த்திகைமீ கஉவ, ஞாயிற்றுக்கிழமை,
மஞ்சகுப்பம், 26 November 1871] (148)

வேறு

ஆவியா யுயிர்கடொறும் அமர்ந்தாய் போற்றி
அயனகந்தை அடக்குவித்த ஐயா போற்றி
தாவரிய கடனடுவே மரமாய் நின்ற
சதுரனையும் வேற்படையாற் றடிந்தாய் போற்றி
பாவியரிற் பெரும்பாவி யான இந்த
பதகனுக்கும் பத்திநெறி யருள்வாய் போற்றி
தேவர்சிறை மீட்டபெரு மாளே போற்றி
திருத்தணிகை மலையானே போற்றி போற்றி. (149)

எத்திசையும் புகழ்படைத்த இறையே போற்றி
என்றுமிளை யோனாய் இருப்பாய் போற்றி
முத்திதனைத் தரவல்ல மூர்த்தீ போற்றி
மூவுலகுந் தொழநின்ற முருகா போற்றி
பத்திதனை யறியாத பாவி யேற்குன்
பாதமலர் தந்துபணி விப்பாய் போற்றி
சித்தர்மனங் குடிகொண்ட தேவே போற்றி
திருத்தணிகை மலையானே போற்றி போற்றி. (150)

திருத்தணிகேசன் துணை

# கீர்த்தனை.

—oo:o—

தோப்பை யுடையநம்
அப்பனைத் தினமுநி
னைத்தரு வினைகளை
னைத்து மறுப்பாம்.

## 1. பல்லவி.

திருத்தணியே தினம் பணியே—மனமே
திருத்தணியே தினம் பணியே.

### சரணங்கள்.

க. ஒருத்தரு மறியாப்—பெருத்த மொழிக்கன்று
அருத்த முரைத்தநங்—கருத்த னுறைதரும்— (திரு)

உ. புள்ளி மயிலைவிட்டு—நள்ளி ரவினில்வந்து
வள்ளியைத் திருடின—கள்ள னுறைதரும்— (திரு)

ங. ஆரு மெதிர்க்கரும்—போர்புரி யுங்கொடுஞ்
சூரனை வென்றஅதி—வீர னுறைதரும்— (திரு)

ச. ஒருகா லரிதிரு—மருகா எனவுளம்
உருகா சொல்அருள்—முருக னுறைதரும்—(திரு) (151)

---

## 2. பல்லவி.

தஞ்சமருள் ஐயா—எனக்குன்
தஞ்சமருள் ஐயா.

### சரணங்கள்.

க. மஞ்சு தவழுந் தணிகை மலையாய்
நெஞ்ச முருகி நிற்கும் எனக்குன்— (தஞ்சம்)

உ. பஞ்சு மிந்தப் பாடு படுமோ
என்செய் வேனிவ் வேழை யேற்குன்— (தஞ்சம்)

ங. தளர்ந்து வந்துன் சரணடைந்தேன்
உளந்த னில்நான் உவகை யெய்தத்— (தஞ்சம்

ச. மனது நொந்து நினை யடைந்தேன்
எனது துயரம் யாவுந் தீரத்— (தஞ்சம்) (152)

---

## 3. பல்லவி.

சும்மா இருக்கலாமோ—மனமே—நாம்
சும்மா இருக்க லாமோ

### அநுபல்லவி.

எம்மான் எவருந் தொழும் பெம்மான் பெருந்தவர்கள்
தம்மான் தணிகை யமர் அம்மான் என்னுமலே— (சும்மா)

க. வெம்மாயை தன்னில் சிக்கினோம்—அதை
விட்டுவர என்ன பக்குவம்—
வேதா—விண்ணோ ரவர்க்குத் தாதா—தணிகைமலை
நாதா—நளினமலர்ப் பாதா என்றேபணி— (சும்மா)

உ. நித்யா னந்தத்தை மறந்தோம்—நாம்
நிஷ்டை யடியோடே துறந்தோம்—
நீவா—நினைக்குமெனைக் காவா—கிருணைசெய்து
வாவா—வளர்தணிகைத் தேவா என்றேசிந்தி— (சும்மா)

ங. காலம் வீணுகக் கழித்தோம்—நாம்
கடவு ளடியாரைப் பழித்தோம்—
கண்யா—கனசுத்தசாட்—குண்யா—குறைவில் தணிகைப்
புண்யா—புகழ்சுப்ர—மண்யா என்றே வணங்கு— (சும்மா)
(153)

---

## 4. பல்லவி.

என்ன செய்யலாம்—மனமே—நாம்
என்ன செய்யலாம்.

### அநுபல்லவி.

பன்னி பன்னி மிக பாவங்கள் செய்தோம்
பாம னடிபணியும் பத்தரை வைதோம்— (என்ன)

### சரணங்கள்.

க. ஊழ்வினை யேபாலப்பட்டது—நமக்-குள்ளநற் குணமுங்கெட்டது
தாழ்மை யான புத்தி நம்மை தாறு மாறுச் செய்யச் சொல்ல
சற்றும் யோசியாமற்செய்து தவிக்கின்றோம் நற்கதியிற் செல்ல
—(என்ன)

உ. காமம் ஓங்கி வளர்கின்றதே—நங்—கடவு ளன்பு தளர்கின்றதே
கால கோடி விஷம தாமக் காமம் வேரோ டறுவதற்கும்
கடவு ளன்பைப் பெற்று மோக்ஷ கதியில் என்றும் உறுவதற்கும்
—(என்ன)

ங. துஷ்ட யோசனைகள் தொடுத்தோம்—நாம்— தூயநெறி
யனைத்தும் விடுத்தோம்
துஷ்டத்தனம் எனும்பேய் தலையைச் சுழற்றிக் கொண்டே
[ஓடுதற்கும்
சுப்பிர மண்ணியன் பதத்தைப் பற்றி சுகத்தை யென்றுங்
[கூடுதற்கும்—(என்ன) (154)

---

## 5. பல்லவி.

தயவாய் நீ யிருப்பாய்—என் தன்னை—ஆதரிப்பாய்

### சரணங்கள்

க. அயன்முத லமரர்கள் அநுதினம் அருமையா
அண்டத் திருந்து வந்து தெண்ட னிட்டு வணங்கும்
ஐயா—தணி—கையா (தயவாய்)

உ. இலகுன தடியிணை களைத்தின மும்பணி
என்ற னுக்கு முன் சிந்தை மகிழ்ந்தருள்
ஈசா—தணி—கேசா— (தயவாய்)

ரு. மரைமல ரனவுன திருவடி களைத்தினம்
வந்தனை செய் கின்ற என்ற னிடமுஞ் சற்று
வாவா—தணிகைத்—தேவா—(தயவாய்) (155)

## 6. பல்லவி.

பத்தி யருள வேண்டும்—உன் பாதம் பணிய
பத்தி யருள வேண்டும்.

அநுபல்லவி.

எத்திசையும் புகழ் முத்தி தருந் தணிகை
எந்தை யெனுங் குகனே—ஈச னருள் மகனே— (பத்தி)

சரணங்கள்.

க. முத்திநெறி யோசற்றும் அறியேன்—உயர்
முனிவர் தவநிலையுங் குறியேன்
பித்தன் கண்ட படி பிதற்றுகிறேன் வெறியேன்
பேரா னந்தத்துக்கோ பேதைமிகு சிறியேன்
பேதை யாகிலு மென் தாதையே என்றன்
மீது கிருபை செய்தே ஆதர வாகவே— (பத்தி)

உ. சத்திய நெறியிலே நில்லேன்—உயர்
சற்சனர் குழுவிலுஞ் செல்லேன்
நித்திய முன்புகழை நேசமுடனே சொல்லேன்
நீயே கதியென் றுன்றன் நீள்கழல்களைப் புல்லேன்
நீச னுகுமென்றன்—மாச கலமிகும்
ஆசை யுடனே உப—தேசஞ் செய்து நல்ல— (பத்தி)

ரு. பஞ்சு போல மெத்த நொந்து போனேன்—பார்க்கும்
பலர்க்கும் பழிப்புக்கா ளானேன்
தஞ்சமாக வுன்றன் தாளையடைய லானேன்
சல்லியந் தீராமல் நான் இன்னந்தான் தளர் வானேன்?
தஞ்ச மென்ற என்றன்—நெஞ்சங் குறைதீர
மஞ்சு தவழ் தணிகை—குஞ்சரமே யிரங்கிப்— (பத்தி)

## 7. பல்லவி.

சுத்த மாக் கையா—மனதைப்—பரி
சுத்த மாக் கையா.

### அநுபல்லவி.

வெற்றி புரியும் வேலன் தணிகை
அத்த னென்று நித்தம் பணியச்— (சுத்தம்)

### சரணங்கள்.

க. பத்தி யான பயிரை வளர்த்து
பாவ மான களையைத் தொலைத்து
முத்தி யான பலனை யெடுக்க
முருக உன்னைத் துணை யடுக்கச்— (சுத்தம்)

உ. காம மான காட்டை யழித்துக்
கடுமை யென்னுங் கூட்டை யொழித்துக்
கங்குல் பகல்நின் கழ லிணையைக்
கருதிக் காத லுடன் அணையச்— (சுத்தம்)

ரு. துன்பம் என்பதி யாவுந் தீர்ந்து
தூய நன் னெறியிற் சேர்ந்து
சுப்ர மண்யனே நின் பாதம்
தொழவும் பெறவும் வரப்ர சாதம்—(சுத்தம்) (157)

---

## 8. பல்லவி.

வேலாயுத தேவா—இனி
மேலாயினுங் காவாய்.

### அநுபல்லவி.

ஆலாலம் உவந்தே யுண்ட அரனார் செல்வ புத்ரா
அன்பாய் மலர்தூவி அருச்சிப்போர் பிரிய மித்ரா.

க. ஆதி பராபர, மான மஹாசிவ, தேவ பிரானருள்
பால க்ருபாகர— (வேலா)

உ. ஓவெனைக் காவென, தேவர்குழாமழ, தாவி அபயந்தந்து,
ஆவி அவர்க்கருளும்— (வேலா)

ரு. அந்தக ஞர்க்குயிர், சொந்தமா முன் உன்சு, கந்த அடிஅா,
விந்தம் பணிய அருள்— (வேலா)

சா. வேதனை யால்மிக, வாடி வருந்துகிற, பாதக ஞமிந்த,
பாவிக் கிரங்கியருள்— (வேலா) (158)

---

## 9. பல்லவி.

தேவ தேவ திருத்தணி காசலத்துறை
செல்வனே எனையாளே.

### அநுபல்லவி.

மூவருந் தொழ நின்ற முதல்வனே
மொய் குழ லுமை யம்மை புதல்வனே
முருகா என, ஒருகால் மனம்,
உருகா சொலத் தருவாய் வரம்— (தேவ)

### சரணங்கள்.

க. காவி விழியர் மயற் கண்ணியி லகப்பட்டு
கடையனுய்க் கெட்டேனே
கருணை செய்தெனைக் காத்திரக்ஷி யென்றுன்
கழலிணை கிட்டேனே— (தேவ)

உ. நாவி ஞலுன்றன் நல்ல திருப்புகழை
நாயினேன் துதியேனே
நன்மை யென்பதை நணுக ஒட்டாப் பவம்
நாடும் விதியேனே— (தேவ)

ரு. சேவி யாம லென்றன் சென்மத்தை வீணுகச்
சிறியேன் கழித்தேனே
திருவடியே சர ணென்றுனை யடைதலைச்
சிரித்துப் பழித்தேனே— (தேவ)

ச. தாவியபய மென்றன் தாளிணை யடைந்தேன்
சரவண பவ முருகா
தருண மிது எனக்குன் சரண மருளுதற்குச்
சண்முக அரி மருகா— (தேவ) (159)

---

## 10. சரணங்கள்.

க. பாது காத்து ரக்ஷிப்ப துன்கட னென்று
பன்னினேன் பலீதரமே
பன்னியும் உன்மனம் இரங்கலை யேயென்ன
பண்ணுவேன் என்துரையே.

உ. தாயைப் போல என்னைக் காத்திடு வான்துணி
காசலன் என்றேனே
சற்றுமே யிரங்காம லிருக்கி லென்ன
சதியிது என்பேனே.

ங. தஞ்ச மெனக்குத்துணி காசல னுடையபொற்
றுளே யென்றேனே
தமிய னேனை ரக்ஷியாமற் கைவிடுதல்
தகுமோ எங்கோவே.

ச. பிள்ளை தப்பு செயிற் பெற்றவர் தாமதைப்
பெரிதா நினைப்பாரோ
பேதையேன் செயும் பிழையைமன் னித்தாலுன்
பெருமைக்குக் குறைவாமோ.

ரு. கவலைக் கடல்நடுவில் கலங்கி நிற்குமிந்தக்
கடையனைக் காவாயோ
கருணைக் கடலெனும் பெயரைப் படைத்துமெனைக்
கைவிட்டு விடுவாயோ. (160)

---

## 11. பல்லவி.

துணிகே சனைத்தொழு மனமே—உன்றன்
சல்யமெல்லாந் தீருஞ் சத்தியம் தினமே.

## சரணங்கள்.

க. புவிமாயை பொல்லாத அம்பு—அது
புண்ணிய வான்களும் போராடும் வம்பு
தவியாமல் ஐயனை நம்பு—அவன்
தானே தலைக்கணி யாகிய கெம்பு— (தணி)

உ. சதமல்ல உலகிலுன் றண்டு—நீ
சாவாமுன் நற்கதி பெறுதற்கு வேண்டு
இதமா ஐயன்பதம் பூண்டு—பாழ்
இடுக்கணாகிய பெருங் கடலைநீ தாண்டு— (தணி)

ங. எல்லாம் இவ்வுலகத்தில் மாயம்—இதை
எண்ணு திருத்தல் வெகுஅநி யாயம்
கல்லோ தான் சொல் விந்தக் காயம்—நங்
கருத்தனைக் கருதல்நற் கதிக்காமு பாயம்— (தணி)

ச. இருப்போ மென் பதுசுத்த பொய்யே—மற்
றின்றோ என் றோநாம் இறப்பது மெய்யே
இரப் போர்க்குத் தருமங்கள் செய்யே—இந்த
இக துக்கம் யாவையும் விட்டுநீ உய்யே— (தணி)

ரு. உலகாசை பொல்லாத மல்லு—ஐயன்
உதவியில் லாததை வெல்லவையோ சொல்லு
பலகாலுந் தணிகைக்குச் செல்லு—அவன்
பதமே துணைகொண்டி யாவையும் வெல்லு—(தணி)

சா. பார்மீதி லென்னைப் போல் பாவி—சுற்றிப்
பார்த்தாலு மொருவரைக் காணேன் நான்தாவி
நீர்மேல் துரும்பா மென் றுவி—சற்றும்
நிலையின்றித் தவிக்கின்ற தையோநீ மேவி— (தணி)

எ. உலகப் பொருளின்மேல் நேசம்—உனக்
குண்டா யிருந்தா லதுவெகு நாசம்
கலகப் ப்ரியர்சக வாசம்—ஒரு
காசுக் குதவாது கனமான மோசம்— (தணி)

அ. துணி கேசனே மெய்யான தேவன்—அவன்
தாளிணை சேர்பவ னேபாக்ய னவன்
குணமான யோக்யனு மாவன்—ஓர்
குறையின்றி மோக்ஷ கதிக்கவன் போவன்— (துணி)

கூ. மனமே நீ பொல்லாத துட்டன்—உன்றன்
வசமகப் பட்டல்லோ இப்படிக் கெட்டேன்
முனமறிந் தாலுனைக் கிட்டேன்—இனி
மோசஞ்செய் வாயாகில் உன்னைநான் விட்டேன்- ()

கo. பொல்லாப் புவியி லிருந்து—பாழும்
பொருள்தேட வேண்டி மிகவுந் திரிந்து
எல்லா விதமும் வருந்தி—மெத்த
இடர்பட்டோ மேயினி யேனும் பொருந்தி—(துணி)

கக. பொய்யால் நிறைந்த துலகம்—இதில்
பொருள் தேடப் போகில் விளையுங் கலகம்
மெய்யான பொன்போ லிலகும்—ஐயன்
மேலாம்ப தந்தொழு தால்வினை விலகும்— (துணி)

கஉ. காக்ஷி யளிப்பது பத்தி—நங்
கர்மங்கள் யாவும் ஒழிப்பது பத்தி
மோக்ஷ மளிப்பது பத்தி—ஐயன்
முன்னே களித்திடச் செய்வதும் பத்தி—. (துணி)

கங. தீமையெல் லாம்போவ தென்று—நாம்
செய்தபவ மெல்லாந் தீர்வது மென்று
காமந் தொலைவதும் என்று—நங்
கடவு ளடியை யடைவதும் என்று— (துணி)

கச. சங்கடந் தன்னில்நின் றெழுவோம்—நாம்
சாமிபா தத்திலே சரணென்று விழுவோம்
துங்க மலர்ப்பதந் தொழுவோம்—எந்
துயர்தீர்த்தி டென்றே பலதரம் அழுவோம்—(துணி

கரு. ஆதர வோமக் கிலையே—நம
தல்லலெல் லாந்தீரு மாறேது சொலையே
நீதரு மநெறி நிலையே—நெறியா
நீயிருந் தாலெனக் கிலையோர்க வலையே— (தணி)

கசு. துன்பங்க ளைவிடத் துணிவோம்—ஐயன்
தூய மலரடி யைத்தலைக் கணிவோம்
அன்பாக நாளும் பணிவோம்—அவன்
அருளைப்பெற் றேமோக்ஷ வீட்டினில் தணிவோம் (,,)

கஎ. தேகம் அநித்யமென் றெண்ணு—ஐயன்
திருவடி மறவாம லேதியானம் பண்ணு
மோகங் கொடியதென் றெண்ணு—ஐயன்
முன்னின்று தோத்திரம் பலகாலம் பண்ணு - (தணி)

---

## 12. செங்கல்வ ராயா—என்
பங்கில் வாராயா.

கருணையங் கடலே—எனை
என்றுங் கைவிடலே. (1)

தணிகையங் கிரியாய்-எனக்குத்
தண்ணருள் புரியாய். (2)

பன்னிரு கையா—கண்
பாரெனை ஐயா. (3)

ஆறு மா முகனே—எனக்
கருள் செய்யாய் குகனே. (4)

கடையேனைப் பாராய்—என்
கவலையைத் தீராய். (5)

கதிர் காம வேலா—பர
கதியருள் சீலா. (6)

பரங்கிரி நாதா—எனைக்கண்
பார்க்கலா காதா. (7)

செங்கோட்டு வேலா—நல்வின்
பங்காட்டு சீலா. (8)

சண்முகத் துரையே—ஞான
தத்துவம் உரையே. (9)

ஆவினன் குடியாய்—என்
அல்லலை முடியாய். (10)

குமர கோட்டத்தா—என்
குறையை ஒட்டத்தா. (11)

வள்ளி மணாளா—நீ
வந்தெனை யாளாய். (12)

பொய்யுலக மாயைதனைப் போக்கியே தென்றணிகை
ஐயன் குமரன் அடி சார்வ தெந்நாளோ. (163)

மூவாமுதல் வோனேதிரு முருகாஅரி மருகா
தேவாதிருத் தணிகாசலச் செல்வா எச்சரிக்கை. (164)

## வேல்.

துன்ப மறுத்தொழித்துத் தொல்வினையும் போக்கிப்பே
ரின்ப மருளு மினிதாக—அன்புடனே
தேவர்களுஞ் சித்தர்களுஞ் சென்றிறைஞ்சுந் தென்றணிகை
மேவிநின்ற சேயின்கை வேல்.

## மகாவிஷ்ணு.

கோபாலா நின்னையே கோரிநிதம் போற்றாது
மாபாத கஞ்செய்தோம் மாயத்தால்—ஆபாவம்
வெய்யநர கக்குழியில் வீழாமே தப்பியாம்
உய்யும் வழியொன் றுரை. (1)
மாயவா போற்றி போற்றி வன்கணர் காண மாட்டாத்
தூயவா போற்றி போற்றித் தொண்டர்கள் தங்க ளுக்கு
நேயவா போற்றி போற்றி அவர்கள்தம் நெஞ்சி லென்றும்
மேயவா போற்றி போற்றி விஷ்ணுவே போற்றி போற்றி. (2)

## திருஞான சம்பந்த சுவாமிகள்.

ஊன சம்பந்த மற்றுயர் வாகிய
மோன சம்பந்த முற்று மொழிவரும்
வான சம்பந்தம் பெற்றுவா ழத்திரு
ஞான சம்பந்த னற்றா ளடைவமே.

[திருஞான சம்பந்த சுவாமிகள் திருநக்ஷத்திரம்—சுக்கிலவுஸ
சென்னை. } வைகாசிமீ கஙஉ வியாழக்கிழமை—
27 May 1869. } மூலநக்ஷத்திரம். வ. த. சுப்பிரமணியன்.]

## திரு நாவுக்கரசு சுவாமிகள்.

சேவே நீசர்க்குத் திரிகர ணங்களால்
ஆவே போன்றன்பு டன்தொண் டியற்றுஞ்சொற்
கோவே யுன்னைத் துணைக்கொள்ளு வேனெனைக்
காவே நின்சீர்க் கழலிணைக் கீழ்வைத்தே.

[திருநாவுக்கரசு சுவாமிகள் திரு நக்ஷத்திரம்-சுக்கிலஸ்ரீ சித்திரைமீ
சென்னை } உகூவ புதன்கிழமை—சதய நக்ஷத்திரம்
5 May 1869. } வ. த. சுப்பிரமணியன்.] (1)

பூவுக் கரசெனுந் தாமரை மேலுறை புங்கவனுந்
தேவுக் கரசெனு மாலுஞ் சிறந்தசெல் வங்கடருங்
காவுக் கரசுந் தொழுங்கட வுட்குக் கனியனைய
நாவுக் கரசுபொற் றாளிணை யேயென்று நந்துணையே.

மஞ்சகுப்பம் } [திருநாவுக்கரசு சுவாமிகள் திரு நக்ஷத்திரம்
25-4-1870 } பிரமோதூதஸ்ரீ சித்திரைமீ கசஉ, சதயம், திங்கள்]
(2)

தேவர்க் கிறைவன் சிவபெருமான் சிந்தை மகிழத் தேவாரப்
பாவைக் கறந்த பசுவனையார் பரம னுடைய கோலத்தைக்
காவிற் சிறந்த ஐயாற்றிற் கண்டு களித்த செல்வர்திரு
நாவுக் கரசர் பொற்பாதம் நாமெல் லோரும் அடைந்துய்வாம். (3)

## சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

பாவ நாசனைப் பத்தர்கள் நேசனைத்
தேவ தேவன் சிவனெம் மிறைவனைப்
பாவை பாவிர விற்செலப் பண்ணுஞ்சீர்
நாவ லூரர்தாள் நாமடைந் துய்வமே.

[சுக்கிலஸ்ரீ ஆடிமீ ௩கஉ வெள்ளிக்கிழமை சுவாதி நக்ஷத்திரம்—
சென்னை. } சுந்தரமூர்த்திநாயனார் திருநக்ஷத்திரம்.
13 Aug. 1869. } வ. த. சுப்பிரமணியன்.] (1)

இந்திர ஞாதி யிமையோர் வியப்புறத் தாமொருவெண்
சிந்துர மேலும் பரிமிசைச் சேரனு மாச்சிறந்தே
அந்தர மேசென் றருங்கயி லாயத் தனையடைந்த
சுந்தர மூர்த்திபொற் றுளையன் போடு துதித்துய்வமே.

[சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநக்ஷத்திரம்—பிரமோதூதஞூ
மஞ்சகுப்பம் } ஆடிமீ உகஉ வியாழக்கிழமை; சுவாதி.] (2)
4—8—70 }

---

## மாணிக்கவாசக சுவாமிகள்.

---

ஈச னேகுரு வாகஎ ழுந்துவந்
தாசி லாஅன்போ டாண்டரு ளப்பெற்ற
மாசி லாமணி யேயுயர் மாணிக்க
வாச காதுணை நின்தாண் மலர்களே.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருநக்ஷத்திரம்—சுக்கிலஞூ
சென்னை } ஆனிமீ ௩௰௳ திங்கட்கிழமை, மகநக்ஷத்திரம்.
12 July 1869. } (1)

வேணிப் பிரானை விதியோ டரியுமே மேவரிய
தாணுக் கடவுளைச் சங்கரனைச்சம்பு வையெவருங்
காணப் படாப்பெரு மானைப் பரிமிசைக் காட்டுவித்த
மாணிக்க வாசகர் பொற்றாள் துணைக்கொண்டு வாழுவமே.

பிரமோதூதஞூ ஆனிமீ உ௰௳; சனிக்கிழமை; மகம்.
திருவெவ்வுளூர் } ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்
2-7-70. } திருநக்ஷத்திரம். வ. த. சு. (2)

---

## சமயகுரவர்.

---

நீறுடனே கண்டிகையும் நின்மலமா மைந்தெழுத்தும்
பேறு தருமென்று பேசுகின்ற—மாறில்
சமயமே உண்மையெனத் தாபித்த நால்வர்க்
கமைவமே நாமடியா ராய்.

# புறவுரை.

எதிர் பாராத துக்க சம்பவத்தால் யான் இப்புறவுரை எழுத நேர்ந்தது. இந்நூலை அச்சிலிட்டுக் காண மிக ஆசைப்பட்ட அன்பு நிறைந்த அம்மை, கற்பு நிறைந்த காரிகை, பொற்பு நிறைந்த பூவை, பத்தி நிறைந்த பாவை, ஞான நிறைந்த நங்கையாகிய எனது தமக்கையார் ஸ்ரீமதி வள்ளிநாயகியம்மாள் [23-ஆம் பக்கம் 23-ஆம் வரி முதற் பார்க்க] இந்நூல் பாதி அச்சாகி யிருந்த சமயத்தில் நோய்க்கு ஆளாகி 1920௵ டிசம்பர்௴ 2௨ வியாழக்கிழமை இரவு 12-மணிக்குச் சென்னையில் திருத்தணிகேசன் திருவடி நீழலையடைந்தனர். எல்லாம் ஈசன் செயல் எனத் தேறுதலன்றி வேறு என்ன செய்யக் கிடக்கின்றது.

எண்ணுந் திருப்பா திரிப்புலியூ ரென்னுந் தலத்திற் றுணையிரண்டு
நண்ணும்; ஒன்று தோன்றாது; நன்கு தோன்றும் மற்றொன்றென்
றெண்ணி யிருந்த என்னுடைய எண்ண மெல்லாம் வீண்போகக்
கண்ணின் மணிபோற் சிறந்தாயே! காணா தெங்குக் கரந்தாயே.

ஈன்றா ளன்போ நின்னன்போ எதுவோ அதிகம் எனக்கூறத்
தோன்றா தெனக்கே இஃதுண்மை சொன்னேன் என்முன் [வந்தோயே!
தோன்றா இறைவன் துணைவருக்குத் துணையா யுள்ளா ளுதலினால்
யான்றா னிருத்தல் மிகையெனவே எம்மை விட்டே ஏகினையோ.

கல்வி யறிவில் மேம்பட்ட கண்ணே கற்புக் கணிகலமே!
செல்வி! உன்றன் உடன்பிறந்த செல்வ நினைத்தே மகிழ்ந்த எங்கள்
இல்வி ளங்க இருந்தாயே! யார்க்கும் அன்பு தருந்தாயே!
சொல்வி ளங்க எங்களுக்கே தோன்றாத் துணையா யிருப்ப
[னென்றே.

இரவுத்ரி கார்த்திகை ஏழொடுபத் தாநாள்
விரவுகிருஷ்ண பக்ஷம் வியாழன்—இரவுநிறை
நள்ளிருளில்—அஷ்டமியும் நாட்பூர முங்கூட
வள்ளியுற்றாள் சேய்தாண் மலர்.

சென்னை:
25—1—1921

வ. சு. சே.

